# மனச்சாட்சியின் உடன்படிக்கை

## தேசிய வேலைத்திட்டம்

மக்கள் விடுதலை முன்னணி

நியமுவா வெளியீடு

நியமுவா வெளியீடு
ISBN 978-955-8696-41-5

முதல் வெளியீடு- 2015 ஜுலை

**அச்சகம்**

பிரின்டெல் பிரைவெட் லிமிட்டெட்
21/11
04 வது ஒழுங்கை,
அரலிய உயன, தெபானம,
பன்னிபிட்டடிய.

**வெளியீட்டாளர்:**

நியமுவா வெளியீடு,
464/20, பன்னிபிட்டிய வீதி,
பெலவத்த,
பத்தரமுள்ள.

**விசாரணைகளுக்கு:**

தொலைபேசி: +94112785612
தொலைமடல்: +94112786050
E-mail: niyamuwa@jvpsrilanka.com
WEB: www.jvpsrilanka.com

# உள்ளடக்கம்


## மக்கள் சினேக ஆட்சி

01. அரச கட்டமைப்பு
    1. அரச அதிகாரம்
    2. அரச செயற்பாடு
02. அடிப்படை உரிமை
03. தேசிய பாதுகாப்பு
04. தேசிய ஒருமைப்பாடு
05. வெளிநாட்டுக் கொள்கை

## உயர் மனித வளங்கள்

01. கல்வி
02. சுகாதாரம்
03. நீர், உணவு, போசாக்கு மற்றும் சுகாதாரம்
04. விளையாட்டு மற்றும் உடல் ஆரோக்கியம்
05. விஞ்ஞானம், தொழிநுட்பம்

## நவீனத்துவம் மற்றும் தொழில்நுட்பமான நாடொன்று

01. பொருளாதாரப் பிரிவு
02. கைத்தொழில்
03. கமத்தொழில்
04. கால்நடை வளம்
05. கடற்றொழில் நீர்வாழ் உயிரின தொழிற்துறை
06. பெருந்தோட்டத் தொழிற்துறை
07. சுற்றுலா தொழிற்துறை
08. தேசிய மற்றும் வெளிநாட்டு வர்த்தகம்

09. நிதிப் பிரிவு
10. காணி
11. நீர் முகாமைத்துவம் மற்றும் நீர்ப்பாசனம்
12. மின்சக்தி
13. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை
14. வீடமைப்பு
15. சுற்றாடல்
16. தொழில்
17. புலம்பெயர் இலங்கையர்
18. கிராமிய அபிவிருத்தி

## நீதி, நியாயமான சமுதாயம்

01. அரசாங்கத்தின் பொறுப்புக்கள்
அடிப்படை மனித உரிமைகள்
நீதிமன்றம்
குற்றம் மற்றும் சிறைச்சாலை
மகளீர், சிறுவர் உரிமைகள்
வயோதிபர், வலது குறைந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள்
சமூக சேமநலன்
வீண் விரயம், ஊழல் மற்றும் மோசடி ஆகியவற்றை இல்லாதொழித்தல்

02. தனியார் கம்பனிகள் மற்றும் நிறுவனங்களின் பொறுப்புக்கள்
03. குடும்பம் மற்றும் தனிநபர் பொறுப்புக்கள்

## சுதந்திரமான மனிதன்

# அறிமுகம்

பிரித்தானிய நேரடி ஏகாதிபத்தியத்தின் கீழ் இருந்து விடுபட்ட இலங்கைக்கு கிடைத்த அரைகுறையான சுதந்திரத்தின் ஊடாக பாரிய எதிர்பார்ப்புக்களுடன் அரசாங்கமொன்றை அமைத்துக் கொண்டது 1948ஆம் ஆண்டிலாகும். 1948ஆம் ஆண்டில் தோற்றம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தொடக்கம் இதுவரையில் எமது நாட்டு மக்களின் வாக்குரிமையின் மூலம் அதிகாரத்தைப் பெற்று 67 வருடங்கள் இந்நாட்டை ஆட்சி செய்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றை சேர்ந்தவர்களே. நாட்டை அபிவிருத்தி செய்வோம், வறுமையை ஒழிப்போம், நாட்டைக் கட்டியெழுப்புவோம் என வாக்குறுதியளித்து அதிகாரத்தைப் பெற்று ஆட்சி புரிந்த இரண்டு அதிகார குழுக்களின் 67 வருட ஆட்சியில் இந்நாடு அடைந்துள்ள நிலமையானது மிகவும் கவலையளிப்பதாகவே உள்ளது. மக்கள் மிகவும் வறுமை மற்றும் கவலைக்குரிய சூழ்நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளனர்.

உற்பத்தித்துறையை முழுமையாகப் புறக்கணித்தும் சீரழித்தும் உள்ளதன் விளைவாக, எமது நாடானது கடன்பட்டு உணவுண்ணும், வெளிநாட்டு மற்றும் தேசிய கடன்களை நம்பி வாழும் நாடாக மாறியுள்ளது. அதன் விளைவாக நாட்டின் ஒவ்வொரு பிரசையும் ரூபா 4 இலட்சம் கடனாளியாக இருக்கின்றார். முன்னர் பெற்ற கடன் தொடர்பான தவணைக் கட்டணம், வட்டி ஆகியவற்றை செலுத்துவதற்காக மீண்டும் கடன் பெறும் நிலை தோன்றியுள்ளதால், நாடு கடன் வலையொன்றில் சிக்கியுள்ளது.

மேலும், அபிவிருத்தி தொடர்பாக பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொள்வதன் மூலம் நாட்டின் வருமானமானது சமனற்ற விதத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதால், வறுமையின் அளவு அதிகரித்துள்ளது. இலங்கையின் சனத்தொகையில் பணக்காரக் குடும்பங்களான 20சதவீத மொத்தத் தேசிய வருமானத்தில் 54சதவீதத்தை அநுபவிக்கும் அதேவேளையில் சனத்தொகையில் மிகவும் வறுமையான 20சதவீத குடும்பங்கள் அநுபவிக்கும் தேசிய வருமானத்தின் அளவானது 04சதவீதமாக குறைந்துள்ளது.

இலங்கையானது பாரிய நிதிப் பிரச்சினைக்கு உட்பட்டுள்ள அதேவேளையில், தெளிவான பொருளாதாரக் கொள்கையொன்று இல்லாத காரணத்தினாலும், அவசியமான நிதி ஏற்பாடுகளைச் செய்யாத காரணத்தினாலும், மக்களின் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வீடமைப்பு ஆகிய அத்தியவசிய தேவைகள் சீர்கெட்டுள்ளன. இலங்கையில் ஆண்டொன்றுக்கு 360,000 பிள்ளைகள் பாடசாலைக்கு உள்வாங்கப்படும் அதே வேளையில், பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டம் பெற்று வெளியேறும் நபர்களின் அதிகூடிய எண்ணிக்கையானது 30,000 ஆகும். இதன் மூலம் விளங்குவது என்னவென்றால், பாடசாலைக்கு உள்வாங்கப்படும் பிள்ளைகளில் 330,000வரை இடைநடுவில் கல்விச் செயற்பாடுகளிலிருந்து விடுபட்டுச் செல்கின்றனர் என்பதாகும். இலங்கையில் ஆண்டொன்றுக்கு தொழிலினை எதிர்பார்த்து தொழிற்சந்தைக்கு நுழைபவர்களின் எண்ணிக்கை 03 இலட்சமாகவுள்ள அதேவேளையில், அரச துறை மற்றும் தனியார் துறையில் வேலைவாய்ப்பை பெறுபவர்களின் எண்ணிக்கை சுமார் 65,000 ஆகும். எஞ்சிய நபர்களான சுமார் 235,000பேர் வாழ்வாதாரம் பெறும்

வழியொன்றை பெறாத நிர்க்கதியான நிலைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இதன் விளைவாக சமூதாயத்தில் குற்றம் அதிகரிப்பதுடன் சமூதாய கலாசாரமும் சீரழிந்து போகும் நிலையேற்படுகின்றது. பொலிஸ் அறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு 03 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை பெண் வல்லுறவொன்று இடம்பெறுகின்றது. இலங்கையில் போதைப்பொருட்களுக்கு அடிமையானோர் சுமார் ஒரு இலட்சம் இருக்கும் அதேவேளை ஒவ்வொரு 50 குடும்ப அலகிலும் ஒரு நபர் போதைப் பொருளுக்கு அடிமையானவராகக் காணப்படுகின்றார். இலங்கையில் ஒவ்வொரு நாளும் 14 நபர்கள் தற்கொலை செய்து கொள்ளவதாக அறிக்கையிடப்படுகின்றது. இதுதான் 67 வருட ஆட்சி மாற்றத்தின் விளைவு. இலங்கையில் தேசிய நல்லிணக்கம் ஏற்படாமல் உள்ள அதேவேளையில், இனவாதிகள் மற்றும் சமய தீவிரவாதிகளினால் மக்கள் பீதியடைந்துள்ளனர். நாட்டில் மோசடி, ஊழல் அதிகரித்துள்ள அதேவேளை ஜனநாயகம் அச்சுறுத்தலுக்கு உட்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாக இவற்றை கவனத்தில் எடுக்கும்போது, இலங்கையானது பாரதூரமான சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார அச்சுறுத்தலுக்கு உட்பட்டுள்ளதென்பது தெளிவாகின்றது.

கடந்த ஜனவரி 08ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலின் மூலம் மக்கள் நல்லாட்சிக்கான முதற் படியை எடுத்தபோதிலும், அதனைப் பின்நோக்கி நகர்த்துவதற்கான செயற்பாடொன்றும் நடைபெற்று வருகின்றது. இச்செயற்பாடானது இதுவரையில் நாட்டை ஆட்சி செய்த எந்த ஆட்சிக் குழுவின் மீதும் நம்பிக்கை வைக்க முடியாது என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது. இந்த சூழ்நிலையின் அடிப்படையில் கேட்டுக் கொள்ளப்படுவது என்ன? வெறுமனே சாதாரண புணர்நிர்மாணங்களுக்கு கட்டுப்படாததும், ஆழமான சமூகப் பொருளாதார அடிப்படையிலுமான அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையாகும். அதனை அடைவதற்கு ஒழுங்கான தூரநோக்கின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட கொள்கைகள் மற்றும் அவற்றை நிறைவேற்றுவதற்கான அர்ப்பணிப்புடன் செயலாற்றக் கூடிய நம்பிக்கையான தலைமைத்துவம் அவசியமாகின்றது.

இலங்கை தற்சமயம் முகம் கொடுத்துள்ள இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யதார்த்தமான ஒரேயொரு தீர்வே காணப்படுகின்றது. அதாவது தற்போதைய தவறான சமூகப் பொருளாதார அரசியல் முறைமை கட்டியெழுப்பப்பட்டுள்ள அடிப்படையை முழுமையாக மாற்றியமைக்கக் கூடிய பரந்தளவிலான மாற்றம் ஒன்றாகும். உண்மையான பொருளாதார அபிவிருத்தி, சமுதாய சமத்துவம், சனநாயகம், உண்மையான தேசிய ஒருங்கிணைப்பு, உண்மையான தேசிய சுதந்திரம், தனிநபர் சுதந்திரம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றைக் கட்டியெழுப்பக் கூடிய சமுதாயமாகும். மக்கள் தினந்தோறும் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு உடனடியான தீர்வைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆட்சியாகும். அதாவது, தற்சமயம் எமது நாட்டுக்கு பொருத்தமான நவீன சோசலிச கொள்கையின் அடிப்படையில் மக்கள் விடுதலை முன்னணியால் 2014 பெப்ரவரி மாதத்தில் 7வது தேசிய மாநாட்டில் அங்கிகரிக்கப்பட்ட எமது தூரநோக்கு கொள்கைகள் அடிப்படையில் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் முழுமையாகவும் விரிவாகவும் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த தேசிய வேலை திட்டத்தை மனச்சாட்சியின் உடன்படிக்கை என்ற வகையில் இலங்கை மக்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

**2015 ஜூலை 22**

# மனித நேய
# நிர்வாகம்

# 01. அரச கட்டமைப்பு

1948ஆம் ஆண்டு முதல் எமது நாட்டில் நடைமுறையில் இருந்து வரும் ஆட்சியானது பிரித்தானியர்களால் எம்மீது திணிக்கப்பட்டதும், அதன் பின்னர் ஆட்சிப் பீடம் ஏறிய ஆட்சிக் குழுக்களால் தமது நோக்கங்களை அடையும் வகையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதுமானதொரு ஆட்சி முறையிலான அரச கட்டமைப்பாகும். இந்த ஆட்சி முறையின் அரச கட்டமைப்பு மற்றும் அதன் கொள்கைகள் என்பன ஆட்சியாளர் குழுக்களின் தேவைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையிலேயே அமைந்துள்ளதுடன், இலங்கை சிங்கள, தமிழ், முஸ்லீம், பறங்கியர் மற்றும் மலே இனங்களை உள்ளடக்கிய மக்களின் அபிலாசைகள் மற்றும் உரிமைகள் ஆகியன பாதுகாக்கப்படும் வகையில் அல்ல.

இதுவரையில் நாட்டை ஆட்சி செய்த பிரபுக்கள் குழுக்களைச் சேர்ந்த சிலரின் ஆட்சியானது நாட்டின் சட்டமியற்றும் சபையில் சட்டங்கள் ஆக்குவது முதல் பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்ப்பது வரையிலான ஒட்டுமொத்த சமூக நிறுவனங்களையும் ஆட்டிப் படைக்கும் முறையொன்றைத் தாபித்துள்ளது. அதன் விளைவாக அனைத்து அரசாங்க நிறுவனங்கள் மற்றும் முகாமைத்துவ கட்டமைப்புக்கள் ஆகியன சீரழிந்துள்ள நிலையில் அனைத்து நிறுவன மற்றும் செயற்பாடுகள் அரசியல்வாதியின் மீது சாய்ந்திருக்கும் முறையொன்றே தாபிக்கப்பட்டுள்ளது. அரச ஆட்சியைக் கைப்பற்றும் குழு மற்றும் அதனுடன் ஒருங்கிணையும் நபர்கள் ஆகியோர் மாத்திரம் பொருளாதார மற்றும் சமூக அநுகூலங்கள் மற்றும் வரப்பிரசாதங்களை அநுபவிப்பது மட்டும் அல்லாது அவர்களின் மூலம் சாதாரண மக்கள் ஒடுக்குமுறைக்கும் ஏமாற்றத்துக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.

சமூக வாழ்கையின் ஒரே குறிகாட்டி மற்றும் தோற்றமானது பணம் மற்றும் அதிகமான பண்டங்கள் மற்றும் சேவைகளை அநுபவித்தல் என்பதன் அடிப்படையில் பணம் உழைக்கும் நிலைக்கு இட்டுச் சென்று, நுகர்வுச் சமூகமொன்றுக்கு சமூகத்தை மூளைச் சலவை செய்யும் பொருளாதார முறைமையொன்றுக்கே இந்த ஆட்சி மாற்ற முறைமை பல தசாப்த காலமாக சமூகத்தை இட்டுச் செல்லும் அதே வேளை, அரச ஆட்சி மற்றும்

அரச கட்டமைப்பு என்பன சட்டங்களையும் அதிகாரங்களையும் உருவாக்கியிருப்பதும் அதன் அடிப்படையில் ஆகும். அதனால் இந்த நிலைமையை மாற்றி புதிய அரச கட்டமைப்பொன்றையும் அரசாட்சியொன்றையும் தாபிக்க வேண்டியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியானது எமது நாட்டுக்குப் பொருத்தமான மக்கள் சிநேகபூர்வ ஆட்சியென்று கருதுவது யாதெனில், எமது நாட்டை எதிர்காலத்துக்கு இட்டுச் செல்லக் கூடியதும், மனிதனை மனிதன் சுரண்டாததும், ஒரு சமூகத்தை மற்றைய சமூகத்தை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்காததும், பொருளாதார செழுமை மிக்கதுமான உயர்ந்த மனித சமுதாயத்தை தாபிக்கும் முறைமையொன்றையே. அதாவது, நவீன சோசலிச சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு அதன் அடிப்படையில் ஆரம்ப முன்னெடுப்பை மேற்கொள்ளும் சிநேகபூர்வ ஆட்சியொன்றாகும்.

சமத்துவம், சனநாயகம், சமூக ஒப்புரவு, தனிநபர் சுதந்திரம், பாதுகாப்பு மற்றும் சகவாழ்வு ஆகிய ஐந்து தூண்களின் மீதே இந்த மக்கள் சிநேகபூர்வ ஆட்சி கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

## வழிமுறைகள்

### 01. அரச அதிகாரம்

- சிங்கள, தமிழ், முஸ்லீம், பறங்கியர் மலே உட்பட அனைத்து மக்களுக்கும் பொருளாதார, அரசியல் சமூக, கலாசார விடயங்களில் சம உரிமை மற்றும் சனநாயக உரிமை ஆகியவற்றை உறுதி செய்யக் கூடிய அரச அதிகாரம் மற்றும் அரச வழிமுறைகள் தாபிக்கப்படும். அதன் அடிப்படையில் நடைமுறையில் உள்ள அரசியமைப்புக்குப் பதிலாக மக்களால் சமர்ப்பிக்கப்படும் பிரேரணைகள் மற்றும் ஆலோசனைகளை கருத்திலெடுத்து சட்டமூலங்களை உருவாக்கி புதிய அரசியலமைப்பொன்றை ஒரு வருடத்துக்குள் மக்கள் கருத்துக் கணிப்பின் மூலம் நிறைவேற்றுதல்.
- மக்களின் இறைமை பாதுகாக்கப்படும்.
- நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை முற்றாக ஒழிக்கப்படும்.
- பாராளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறும் அரசியல் முறைமையொன்று தாபிக்கப்படும்.

- தற்போது நிலவும் தேர்தல் முறையில் பலவீனங்கள் மற்றும் குறைப்படுகள் அகற்றப்பட்டு நாட்டில் சகல மக்கள் பிரிவினரதும் விருப்பத்தை மக்கள் சபையில் நியாயமான முறையில் பிரதிநிதித்துவம் செய்யும் விதமாக மிகவும் சிறந்த, விஞ்ஞானரீதியதுமான புதிய தேர்தல் முறையொன்று தாபிக்கப்படும்.
- பயங்கரவாத தடைச் சட்டம் உட்பட ஏனைய கட்டளைச் சட்டங்கள் இல்லாது ஒழிக்கப்படும்.
- கட்சி தாவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிகள் இல்லாது ஒழிக்கப்படும்.
- அமைச்சரவை 25 நபர்களுக்கு கட்டுப்படுத்தப்படும். அரசாங்கத்தின் அனைத்து தீர்மானங்கள், கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சரவையின் ஒட்டுமொத்த பொறுப்புக் கூறல் உறுதிசெய்யப்படும்.
- மக்கள் பிரதிநிதிகளுக்கான ஒழுக்கநெறிக் கோவையொன்று அறிமுகம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.
- மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் நிறுவனங்களில் உத்தியோகத்தர் மற்றும் உறுப்பினர்களின் வீண்விரயத்துக்கு இட்டுச் செல்லும் சிறப்புரிமைகள் அனைத்தும் இல்லாதொழிக்கப்படும்.
- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு செலுத்தப்படும் ஓய்வூதியம் இரத்து செய்யப்படும்.
- பாராளுமன்ற உறுப்பினர்களின் சொந்த பாவனைக்கு வழங்கப்படும் சொகுசு வாகன அனுமதிப் பத்திரம் நிறுத்தப்படும். அதற்குப் பதிலாக மக்கள் பிரதிநிதிகளுக்கு அரச வாகனங்கள் வழங்கப்படும்.
- பயங்கரவாத தடுப்பு சட்டம் உட்பட ஏனைய ஒடுக்குமுறைச் சட்டங்கள் இல்லாதொழிக்கப்படும்.
- சிவில் யுத்தம் அல்லது வேறு முரண்பாடுகள் காரணமாக இலங்கைக்கு அகதிகளாக வரும் பல்வேறு அகதிகளுக்கு சர்வதேச தரத்திற்கு அமைவான அகதிகள் உரிமைகளின் அடிப்படையில் பாதுகாப்பும் ஆதரவும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- தகவல் அறியும் உரிமைச்சட்டம் நடைமுறை படுத்தப்படும்.
- தேசிய கணக்காய்வு சட்டம் நடைமுறை படுத்தப்படும்..

## 2. அரச செயற்பாடுகள்

- தேசிய கொள்கை மற்றும் திட்டங்களை வகுக்கும் முகமாக தேசிய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் சபை தாபிக்கப்படுவதுடன், அதற்குப் பொதுமக்கள், அரசியல்வாதிகள், விடயம்சார்ந்த மற்றும் தொழில்கள் தொடர்பான நிபுணத்துவம் உடைய நபர்கள் ஆகியோரிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- தேசிய கொள்கைகள் அனைத்தும் ஆவணப்படுத்தப்பட்டு மக்கள் பார்வைக்காக பட்டியல் இடப்பட்டு காட்சிப்படுத்தப்படும்.
- தற்போது நடைமுறையிலுள்ள பிரதேச அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது முறையான அடிப்படையில் அல்ல. மாறாக சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் அரசியல் அதிகாரம் படைத்தவரின் விருப்பு வெறுப்புக்கு அமையவும் நிதி அமைச்சின் தீர்மானத்தின் அடிப்படையிலுமாகும். இதற்குப் பதிலாக அனைத்துப் பிரதேசங்களிலும் காணப்படும் அபிவிருத்தி முறைகேடுகள் மற்றும் அவசியத்தைக் கவனத்தில் கொண்டு அந்தந்த மாவட்டங்களுக்கு அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் பொருத்தமான வீதத்தை சட்டரீதியாக்கி ஒதுக்கப்படும்.
- அரசாங்க நிறுவனங்களில் மக்களுக்கான சேவைகள் சீராக நடைபெறாத பட்சத்தில், அவை தொடர்பாக விசாரணை செய்வதற்கும் அச்சேவைகளை நிறைவேற்றுவதற்குமான தலையீட்டை மேற்கொள்ளும் முகமாக தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் “மக்கள் சேவை கண்காணிப்பு அதிகார சபை” தாபிக்கப்படும்.
- அரசாங்க நிறுவனங்களில் மக்கள் சேவைகள் சீராக இடம்பெறாத பட்சத்தில் அவை பற்றி முறையிடுவதற்காக 365 நாட்களிலும் 24 மணித்தியாலங்கள் செயற்படும் வகையில் மேற்படி அதிகார சபைக்கு சமாந்திரமாக புகார் மத்திய நிலையமொன்று நடைமுறைப்படுத்தப்படும்.

# 02. அடிப்படை உரிமைகள்

இதுவரை ஆட்சிப் பீடமேறிய அனைத்து அரசாங்கங்களும் புறக்கணித்த விடயங்களில் மிகவும் முக்கியமான விடயம் அடிப்படை மனித உரிமைகள் ஆகும். அநேகமான வேளையில் முதலாளித்துவ முறையின் கீழ் அமைந்த அரசியல் அமைப்புக்களில் அவை உறுப்புரைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்ததப்பட்டன. இந்த உரிமைகள் எவ்வளவுதான் ஆவணமயப்படுத்தப்பட்டாலும் அவை நிலையான முறையில் நடைமுறை வாழ்க்கையில் கிடைக்காமல் இருப்பதற்கான காரணம், அரசியல் நிர்வாக மற்றும் பொருளாதார

முறையொன்றை ஆட்சியாளர்கள் முன்னெடுக்காமையும் மக்களுக்கு உரித்தான உரிமைகள் யாதென்பதை விளங்கிக் கொள்ள இயலாது இருப்பதுமே ஆகும். இன்று சுதந்திரமாக வாழும் தனிநபர்கள் உரிமையும் இழக்கப்பட்டுள்ளது.

## வழிமுறைகள்

- நாட்டின் அடிப்படை சட்டமான அரசியலமைப்பு முறை மூலம் அடிப்படை மனித உரிமைகள் உறுதி செய்யப்படும். அதற்கிணங்க பேசும் உரிமை, கூட்டம் சேரும் உரிமை, கருத்து வெளியிடும் உரிமை, தாம் விரும்பிய அரசியலைப் பின்பற்றும் உரிமை, தாம் விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் உரிமை மற்றும் தமது மனச்சாட்சியைப் பின்பற்றும் உரிமை என்பன உறுதி செய்யப்படும். அத்துடன் உயிர் வாழும் உரிமை, தொழில் புரியும் உரிமை, ஓய்வெடுத்தல் மற்றும் பொழுதுபோக்கு சம்பந்தான உரிமை, சுகாதார முறையில் உயிர் வாழும் உரிமை, கல்வியைப் பெறும் உரிமை, வீட்டு உரிமை, கலாசார விழுமியங்களை அநுபவிக்கும் உரிமை, விஞ்ஞான தொழிநுட்பம் மற்றும் கலை பற்றிய சுதந்திரம் மற்றும் உரிமைகளும் ஆண், பெண் சமத்துவம் பற்றிய உரிமைகளும் உறுதிசெய்யப்படும்.
- அரசியல், சமயம், இனம் போன்ற எதன் அடிப்படையிலும் பக்கச்சார்பாக நடந்து கொள்ளல் தடை செய்யப்படும்.
- அடிப்படை மனித உரிமைகள் உரித்தாகும் வகையில் பொருளாதார, நிர்வாக மற்றும் அரசியல் பொறிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்படும்.
- அடிப்படை மனித உரிமைகள் பற்றி மக்கள் சமுதாயத்துக்கு விழிப்பூட்டி சமூகம் வலுவூட்டப்படும்.
- அரசின் மூலம் அல்லது தனியார் துறை நிறுவனங்கள் மூலம் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படும் வேளையில் அரசிற்கு எதிராகவும் தனியார் நிறுவனங்களுக்கு எதிராகவும் நீதிமன்றம் செல்வதற்காகவும் உள்ள மக்களது உரிமை உறுதிசெய்யப்படும்.
- 18 வயது நிரம்பிய எந்தவொரு பிரசைக்கும் மக்கள் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கான உரிமையைப் பெற்றுக் கொடுக்கும் அதேவேளை, 16 வயது நிரம்பிய அனைத்துப் பிரசைக்கும் வாக்களிக்கும் உரிமையும் உறுதி செய்யப்படும்.
- வெளிநாட்டில் உள்ள இலங்கைப் பிரசைகளுக்கு அந்தந்த நாடுகளில் இருந்தவாறே வாக்குரிமையைப் பிரயோகிக்கும் வேலைத்திட்டமொன்று வடிவமைக்கப்படும்.

# 03. தேசிய பாதுகாப்பு

நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு, கீர்த்தி, அனைத்துப் பிரசைகளின் சுதந்திரம் மற்றும் உயிர்ப் பாதுகாப்பு ஆகியவற்றை முழுமையாக உறுதி செய்யும் பொறுப்பு எந்தவொரு அரச ஆட்சியினதும் கடமையாகும். அதற்கமைய தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல், அரசியல் பொருளாதார மற்றும் அரச பொறிமுறை மூலமான தடைகள் மற்றும் அச்சுறுத்தல் ஆகியவற்றில் இருந்து எந்தவொரு இலங்கைப் பிரசையினதும் பாதுகாப்பை நோக்காகக் கொண்டு ஒருங்கிணைந்த பாதுகாப்பு வேலைத்திட்டமொன்று எமது ஆட்சியில் செயற்படுத்தப்படும். அதனூடாக தற்சமயம் இராணுவ சேவைகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ள " தேசிய பாதுகாப்பு" தொடர்பான குறுகிய வரைவிலக்கணத்திலிருந்து விலகி பாதுகாப்பான நாடொன்றை நிர்மாணிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

## வழிமுறைகள்

- இலங்கை நிலப்பரப்பு, இலங்கைக்கு உரித்தான கடற்பரப்பு மற்றும் வான் எல்லை பாதுகாக்கப்படும்.
- முப்படையினரும் பொலிஸ் சேவையும் அரசியல் தலையீடுகளிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக செயற்படும்.
- பிரிவினைவாதம் மற்றும் பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதம் ஆகியவற்றிலிருந்து நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை அகற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.
- பொருளாதார அரசியல் பொறிமுறை மற்றும் கலாசார அம்சங்கள் ஊடாக நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறைமைக்கு ஏற்படக் கூடிய ஆபத்து தொடர்பில் பகுப்பாய்வு செய்து அதனடிப்படையில் திட்டமிடுவதற்கு பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூறக் கூடிய நிபுணத்துவ குழுவொன்று தாபிக்கப்பபடும்.
- முப்படை மற்றும் பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ள அனைவரிடமும் குடிகொண்டுள்ள பீதி மற்றும் வெறுப்பு நிறைந்த சூழலை நீக்குவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

# 04. தேசிய ஒற்றுமை

பிரித்தானியர் ஆட்சிக்காலம் முதல் மக்களை பிரித்து ஆளுதல் மற்றும் அசாதாரண பொருளாதாரக் கொள்கை ஆகியவற்றின் விளைவாக நிர்மாணிக்கப்பட்ட இலங்கை இனங்களை 1948ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சிப் பீடமேறிய ஆட்சியாளர்கள் மேலும் பிரிவுக்கு உட்படுத்தினர். இதன் விளைவாக இனங்களிடையே வெறுப்புணர்வு வலுவடைந்து கடந்த காலங்களில் யுத்த சூழ்நிலைக்கும் இட்டுச் சென்றதுடன் அதன் விளைவாக எமது நாடு

பாரிய சமூகப் பொருளாதார முரண்பாட்டுக்கும் இட்டுச்செல்லப்பட்டது. யுத்தம் நிறைவடைந்த பின்னர் நிர்மாணிக்கப்பட்ட புதிய சூழ்நிலையானது தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் வகையில் கையாளப்படாது ஆட்சியாளர்களின் அதிகாரத்தை வலுவூட்டுவதற்கே பயன்படுத்திக் கொண்டார்கள்.

இலங்கையை ஆட்சி செய்த அனைத்து ஆட்சியார்களும் தமது அதிகாரத்தை வலுவூட்டும் முகமாக இனவாதத்தை விதைத்ததுடன், பல்வேறு குழுக்களை தாபித்தும் வருகின்றனர். இச்செயற்பாட்டின் மூலம் அவர்கள் தமது இயலாமையை மூடி மறைத்துக் கொள்ளும் அதேவேளை இனங்களைத் தொடர்ந்தும் பிரித்து வைத்து தமது ஆட்சியை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்கின்றனர்.

## தீர்வுகள்

அனைத்து இனங்களைச் சேர்ந்த மக்களுக்கும் சனநாயகம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் உரிமைகள் உறுதிசெய்யப்படும் வகையில் அரசியல் மற்றும் பொருளாதார முறைமையொன்று தாபிக்கப்படும்.

இலங்கையை அனைத்து இனங்கள், அனைத்து சமயங்கள் மற்றும் அனைத்து கலாசாரங்கள் அடிப்படையிலான பல்வகைத்தன்மையை அங்கிகரிக்கும் நாடாக கட்டியெழுப்புவதன் மூலம் உண்மையான தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பப்படும்.

## வழிமுறைகள்

- மக்கள் விடுதலை முன்னணியானது ஆரம்ப காலம் தொட்டே தேசிய பிரச்சினையை சரியாக வரைவிலக்கணம் செய்து அதனை தீர்ப்பது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாட்டை உள்ளடக்கிய "தேசிய பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பான பிரவேசம்" என்ற தலைப்பில் சமர்ப்பித்துள்ள வழிமுறைகளை நிறைவேற்றுதல். அதன் அடிப்படையில்,

  1.மக்கள் கருத்துக் கணிப்பின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய அரசியலமைப்பின் ஊடாக பல்வேறு இனங்களை பாகுபடுத்தும், அனைத்து இனங்கள் மற்றும் சமயங்கள் இடையே ஒற்றுமையின்மை மற்றும் முரண்பாடுகளை தோற்றுவிப்பதற்கு மூலகாரணமாகவுள்ள காரணிகள் அரசியலமைப்பின் மூலமே கலையப்படும். அத்துடன் அனைத்து இனங்களுக்கான சமவுரிமைகள் அரசியலமைப்பின் மூலம் உறுதிசெய்யப்படும்.

2. பல்வேறு காரணங்களால் ஒடுக்கப்பட்டுள்ள இனக் குழுக்கள், அதாவது இன அல்லது சமய ரீதியாக ஒடுக்கப்பட்டுள்ள இனக்குழுக்கள் மற்றும் பொருளாதார ரீதியில் மிகவும் பின்னடைந்துள்ள பிரதேசங்களை இலக்காகக் கொண்டு அவற்றின் பொருளாதார அபிவிருத்தி, நிர்வாக பிரச்சினைகளைக் தீர்த்தல், கலாசார ஒருமைப்பாட்டை பாதுகாத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட விசேட ஆட்சிக் கட்டமைப்பு ஒன்றாக "மக்கள் சபை"களை தாபிக்கப்படும்.

- மக்கள் சபை தாபிக்கப்படும் பிரதேசங்கள் தொடர்பில் நிபுணத்துவர்கள். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோரைக்கொண்ட "மக்கள் சபை எல்லை நிர்ணயம் செய்யும் ஆணைக்குழு" தாபிக்கப்படும்.
- மக்கள் சபை மக்களின் வாக்கு மூலம் தாபிக்கப்படும் அதேவேளை அவற்றின் கால எல்லை 5 ஆண்டுகளாக இருக்கவேணடும். குறிப்பிட்ட கால எல்லைக்கு முன் "மக்கள் சபை" கலைக்கப்பட மாட்டாது.
- இம் மக்கள் சபைகளின் ஒரு பிரதிநிதியை பதவி அதிகாரத்தின் அடிப்படையில் பாராளுமன்றத்திற்கு நியமிக்கும் உரிமை "மக்கள் சபைக்கு" கிடைக்கும்
- "மக்கள் சபைகளின்" பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்திக்கு அவசியமான சகல நடவடிக்கைகளுக்கும் அவசியமான நிதி ஒதுக்கீடு பாராளுமன்றத்தினால் போதியலவு செய்யப்பட வேண்டும்.

3. மொழி ரீதியாக ஏற்படும் அநீதியை இல்லாதொழிக்கும் வகையில் மும்மொழித் கொள்கை ஒன்றை அங்கீகரித்து இலங்கையில் சிங்கள, தமிழ் மொழிகளை தேசிய மொழிகளாக அரசியலமைப்பின் மூலம் தாபித்து அதில் எந்நவொரு மொழி மூலமும் கடமையாற்றக் கூடியவாறு ஒரு பிரசையின் உரிமை ஏற்று அங்கீகரிக்கப்படும். அதன் அடிப்படையில் விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் நீதிமன்றம் பொலிஸ் நிலையம் அரச அலுவலகங்கள் போன்ற சிவில் நிர்வாகத்தை சார்ந்த நிறுவனங்களில் மற்றும் சுகாதார, போக்குவரத்து போன்ற பொதுச் சேவைகள் தொடர்பில் தமிழ் மொழியில் சேவையாற்றக்கூடிய உத்தியோகத்தர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- அதன் அடிப்படையில் நீதிமன்றம், பொலிஸ், பாதகாப்பு படை மற்றும் அரச நிறுவனங்களில் சேவை செய்யும் அனைவருக்கும் தேசிய மொழிகளை கற்பிக்கும் விசேட செயல்முறையொன்றை உருவாக்குவதுடன் அதன் அடிப்படையில் அவர்களுக்கு ஊக்குவிப்பு படி வழங்குவதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

4. இன, மத அல்லது வேறு வகையிலான வேற்றுமையின் பிரகாரம் எந்தவொரு பிரசையும் அவமானப் படுத்தல், பரிகாசம் செய்யப்படல் மற்றும் அசாதாரண நிலைக்கு இட்டுச்செல்லல் போன்றவற்றை முழுமையாக தடைசெய்வதுடன் அவ்வாறான நிலைக்கு உட்பட்ட நபர்களின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கும் அவற்றை பரிசீலனை செய்வதற்கும் மற்றும் அவை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டோரை நீதிமன்றத்திற்கு வரவழைப்பதற்கான அதிகாரமுடைய பாகுபாட்டிற்கு எதிரான ஆணைக்குழு ஒன்று தாபிக்கப்படும். (Commission Against Discrimination)

5. வடக்கில் இடம் பெற்ற 30 வருட யுத்தத்தில் பல்வேறு வகையிலான பாதிப்புக்கு உட்பட்ட மக்களுக்கும் சேதம் ஏற்பட்ட சகலருக்கும் தமது விசனத்தை தெரிவிப்பதற்கும் அவை பற்றிய உண்மையை கண்டறிந்து நிவாரணங்கள் வழங்குவதற்கும் “தேசிய ஒற்றுமையை விருத்தி செய்தல் மற்றும் மீளிணைத்தல் சட்ட மூலமொன்றின்” மூலம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று (Truth and Reconciliation Commission) தாபிக்கப்படும்

6. யுத்தத்தின் மூலம் வீடுகளை இழந்த மக்களுக்கு பொருத்தமான நிரந்தர வீடொன்றை நிர்மானித்துக் கொள்வதற்கு கடந்த அரசால் வழங்கப்பட்ட நிதி பற்றாக்குறையாக உள்ளதால், வீடுகளை இழந்த சகல மக்களுக்கும் ரூ.5 லட்சம் வீதம் நிதியுதவி அளிக்கப்படும்.

7. யுத்தம் காரணமாக இந்தியாவுக்கு சென்று அகதிகளாக உள்ள இலங்கை பிரசைகளை இந்நாட்டிற்கு வரவழைத்தல் மற்றும் வாழ்வாதாரம் தொடர்பாக அவசியமான வசதிகளை செய்து கொடுக்கும் கருத்திட்டம் துரிதமாக மேற்கொள்ளப்படும்.

8. வடக்கில் தோன்றியிருக்கும் காணிப் பிரச்சினை மிகவும் மோசமான மற்றும் உணர்ச்சிமிக்க பிரச்சினையாக மாறியுள்ளதால் அதனைத் தீர்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதற்காக வடக்கில் காணி இழந்தோரின் பிரச்சினையை இனம்காண்பதற்கும் காணியின் முதன்மை உரிமையாளரை இனம்கண்டு உறுதிப்படுத்தி அந்த காணிகளை அவர்களுக்கு ஒப்படைக்கவும் அத்தியாவசிய தேவைகளுக்காக தற்போதும் அரசிற்கு கையடக்படுத்தப்பட்டுள்ள காணிகளுக்கு போதியளவு நட்டஈடு வழங்கள் அல்லது நீதி மன்றத்தின் விருப்பிற்கு அமைய மாற்று காணிகளை வழங்க மக்கள் பிரதிநிதிகள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் காணி அமைச்சின் உத்தியோகத்தர்கள் உள்ளடக்கிய சர்வ அதிகாரம் கொண்ட காணி ஆணைக்குழுவொன்று தாபிக்கப்பட்டு அதன் மூலம் காணிப் பிரச்சினைகள் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

9. பல்வேறு இனக் குழுக்களின் உரிமைகள் அரசியலமைப்பின் ஊடாக உறுதிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதும் அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வுகள் பெற்றுக்கொடுப்பதும் நிர்வாக கட்டமைப்பாக "மக்கள் சபை" தாபித்தல் மூலம் தேசியப் பிரச்சினையை தீர்ப்பதற்கு எதுவிதமான வகிபாகமும் வகிக்காத மற்றும் தற்போதும் பிரயோசனமின்றி காணப்படும் மாகாண சபைகள் இல்லாதொழிக்கப்படுவற்கு வழிசமைக்கப்படும்.

# 05. வெளிநாட்டு தொடர்புகள்

இற்றைவரை ஆட்சிக்கு வந்துள்ள அரசாங்களில் வெளிநாட்டுக் கொள்கைகள் தயார் செய்யப்பட்டது சர்வாதிகார போக்கிலான மற்றும் மேற்கத்தேய போக்கினை அடிப்படையாகக் கொண்டாகும். இலங்கையில் சுதந்திரம் மற்றும் இறமை தொடர்பாக கவனம் செலுத்தாத ஆட்சியாளர்கள் இலங்கையினை உலகத்தில் மிகவும் தாழ்மையான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட நாடாக மாற்றியுள்ளனர்.

ஆட்சிக்கு வந்த பலதரப்பட்ட ஆட்சிக் குழுக்களின் தனிபட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப வெளிநாட்டுக் கொள்கையினை தீர்மானித்தமையின் காரணமாக ஏனைய இனங்களுக்கிடையில் எமது நாட்டின் கௌரவம் கீழ்த்தரமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியாக புதிய காலணித்துவத்தின் இரையாக்கியமைக்கு மேலதிகமாக அரசியல் ரீதியாக அதிகாரம் பெற்ற நாடுகளின் செல்வாக்கு செலுத்தும் வகையில் தேவையான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

## தீர்வுகள்

இலங்கையில் இறமையினை பாதுகாக்கின்ற, சர்வாதிகார எதிர்ப்பு, காலணித்துவத்திற்கு எதிரான மட்டுமல்லாது சகல நாடுகளுடன் அமைதியாகவும் சகவாழ்வினையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்திக் கொள்வது தொடர்பாக பொருத்தமான வெளிநாட்டுக் கொள்கையொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும்.

## வழிமுறைகள்

- தெற்காசிய வலய ஒத்துழைப்பினை மேம்படுத்திக் கொள்வது தொடர்பாக முன்னுரிமை வழங்கப்படும்.

- வெளிநாட்டுச் சேவையினை நிறுவன ரீதியான மாற்றங்களுக்கு உள்ளாகும் வகையில் வினைத்திறனின்மை, அரசியல் நியமனங்கள் மற்றும் விரயத்தை தவிர்த்து வெளிநாட்டுச் சேவையின் முக்கியத்தும் மற்றும் பொறுபுத்தன்மை பாதுகாக்கப்படும் வகையில் வெளிநாட்டுச் சேவை மீள் கட்டமைப்பு செய்யப்படும்.

- வெளிநாட்டுச் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தொடர்பாக மாற்றமடைகின்ற தேசிய மற்றும் சர்வதேச நிலைமைகள் மற்றும் புதிய தேசிய அரசியல் மற்றும் பொருளாதாரத் தேவைகள் பற்றிய அறிவையும் புரிந்துணர்வை வழங்குகின்ற தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்களை உள்ளடக்கிய வெளிநாட்டுச் சேவை கல்விசார் நிறுவனமொன்றை ஆரம்பித்தல்.

- சமவுடமை நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளை பேணிச் செல்வதுடன், சர்வாதிகரத்திற்கு எதிரான மற்றும் மானிட மேம்பாடு தொடர்பான சர்வதேச செயற்பாடுகளுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

- தேவையான மீளாய்வுகளை மேற்கொண்டு வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ள இலங்கையர்கள் அதிகமாக இருக்கின்ற ( உதாரணமாக சைபிரஸ்) நாடுகளில் புதிய இலங்கை தூவராலயங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

# உயர்தரமான
# மனிதவளம்

எமது நாட்டில் சர்வதேச உபாய வழிகளில் முக்கியத்துவமளிக்கப்பட வேண்டியது மானிட வள அபிவிருத்திக்காகும். 1948 ஆம் ஆண்டு முதல் ஏழு தசாப்தங்களுக்கு அண்மித்த காலம் பூராக இலங்கை தவறான மற்றும் பிழையான பொருளாதார உபாய வழியில் பயணம் செய்தமையின் காரணமாக உலக மற்றும் வலய பொருளாதாரங்களில் அவ்வவ் நிலமைகளின் போது அடையப் பெற வேண்டியிருந்த கைத்தொழில் மற்றும் விவசாய உற்பத்தியில் வெற்றி அடையக் கூடிய வாய்ப்புக்களை மக்கள் இழந்துள்ளனர்.

எதிர்கால உலகத்தில் உயர்தரமான தேர்ச்சிமிகு அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவை உற்பத்திகளை ஒழுங்கமைக்கும் நிலைமை உருவெடுத்துள்ளது. இலங்கைக்கு பூகோள வியாபாரச் சந்தையிலும் மற்றும் தேசிய வியாபாரச் சந்தையிலும் பொருட்கள் மற்றும் சேவை உற்பத்தியின் போது உயர்தரமான தொழில்நுட்ப நிபுணர்கள், தொழில் தேர்ச்சியாளர்கள் பாரிய அளவில் தேவைப்படுகின்றனர்.

நாட்டின் பொருளதார அபிவிருத்தியின் பிரதான உபாய வழியாக உயர்தரமான மானிட வளம் இருப்பதுடன் அதனுடன் தொடர்புடைய கல்வி, சுகாதாரம், விளையாட்டு மற்றும் தேகப் பயிற்சி மற்றும் விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மற்றும் தொழில்சார் பயிற்சிகள் உள்ளடங்கலாக பலதரப்பட்ட துறைகளை விஸ்தரிப்புச் செய்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற செலவினங்கள் மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகள் பொருளாதார ரீதியாக கட்டாயமாக பெறுபேறுகள் கிடைக்கின்ற அரச முதலீடுகளாகக் கருதப்படும்.

## 01. கல்வி

இதுவரை ஓரளவு நிலவிய இலவசக் கல்வியினை இல்லாதொழித்து, அரசு கிரமமாக கல்வி வழங்கும் பொறுப்பிலிருந்து விலகிச் செல்கின்றது. தற்பொழுது அரசாங்கம் கல்வி தொடர்பாக நிதி ஒதுக்கீடு செய்வது மொ.தே. உற்பத்தியில் 1.25 சதவீதமான மிக குறைந்த தொகையாகும். இலங்கையின் கல்வி தேசியக் கொள்கையொன்று இல்லாதுள்ளதால் பெற்றோர்களும், மாணவ, மாணவிகளும் தனிப்பட்ட ரீதியில் அதிக செலவினங்களை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையிற்கு வாணிப மயப்படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலை செல்ல வேண்டிய வயது பிள்ளைகளில் குறிப்பிடத்தக்க அளவு பாடசாலைகளுக்கு பிரவேசிக்காததுடன் கல்வியை பெறுகின்றவர்களில் பாரிய அளவினருக்கு இடைநடுவில் கல்வியை விட்டுச் செல்வதற்கு ஏற்படுகின்றது. வருடம் தோறும் புதிய சிசு பிறப்புக்கள் 360,000 இடம்பெறுவதுடன் இதில் 60,000 பேர் 10 ஆம் தரத்தினை பூர்த்தி செய்யாது பாடசாலையினை விட்டும் விலகிச் செல்கின்றனர். உயர் தரத்தினை தொடரும் சந்தர்பத்தைப் பெறுவது இரண்டு இலட்சத்திற்கு அண்மித்த தொகையினருக்காகும். வருடாந்தம் பல்கலைக் கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படுவது ஆகக் கூடியது 30,000 பேர்களாகும்.

மாற்றமடைகின்ற அரசியல், பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்ப கல்வி நவீனமயப்படுத்தப்படாமை மற்றும் கல்வியில் பழைய பொருத்தமற்ற முறைமைக்குப் பதிலாக புதிய விஞ்ஞானரீதியான முறைமைகள் இணைத்துக் கொள்ளப்பட்டமை பாரிய பிரச்சினையாகும். கட்டிடங்கள், உபகரணங்கள் போன்ற பௌதீக வளங்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பான பாரிய பற்றாக்குறையொன்று நிலவுகின்றது. இருக்கின்ற வரையறையான வளங்கள் கூட பகிர்ந்து அளிக்கப்படுகின்ற சமநிலையற்ற தன்மையின் காரணமாக கிராமப் பிரதேசங்களின் கல்வி பாரிய பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளது. வளப் பற்றாக்குறை மற்றும் இருக்கின்ற வளங்கள் பகிர்ந்தளிக்கப்படும் சமநிலையற்ற தன்மை, மற்றும் பாடசாலைகளுக்கு சேர்த்துக் கொள்வதற்கு அசாதாரண நிபந்தனைகளை விதிப்பதன் காரணமாக பிள்ளைகளுக்கு சுதந்திரமாக ஆரம்ப நிலை மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியை பெற்றுக் கொள்வதற்கான அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது.

உலக வங்கியின் சிபாரிசுகளுக்கு கட்டுப்பட்டு மூன்றாம் நிலைக் கல்வி தொடர்பாக செலவினங்களைக் குறைத்து தனியார் துறைகளுக்கு நிதி உதவி ஆதரவு வழங்குகின்ற தற்பொழுதைய அரசாங்கங்கங்களின் கொள்கைகளாக இருப்பதனால் மூன்றாம் நிலைக் கல்வியும் பாரிய பிரச்சினைகளுக்கு உள்ளாகி உள்ளது.

## தீர்வுகள்

அனைத்து பிள்ளைகளும் வயது வந்தோர்களும் கல்வியைப் பெற்றுக் கொள்ளும் உரிமை அடிப்படை மனித உரிமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் வாழ்கின்ற பிரதேசம், இனம், சமயம், சாதி, வகுப்பு அல்லது வேறு ஏதேனும் விதத்திலான வேறுபாடுகளின்றி சகலருக்கும் சமமான கல்விச் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் கல்வியை முழுமையாக அரசாங்கத்தின் பொறுப்பாக ஆக்கப்படும்.

## வழிமுறைகள்

- கல்வியில் சம உரிமை அடிப்படை உரிமையாக அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சகல நபர்களுக்கும் தனிப்பட்ட திறன்கள் மற்றும் தேசியத் தேவைகளின் அடிப்படையிலான தொடர்ச்சியான கல்வி, பயிற்சி மற்றும் உயர் கல்வியை வழங்குதல் அரசினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.
- கல்வி தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற செலவினம் குறைந்த பட்சம் மொ.தே. உற்பத்தியின் நூற்றுக்கு 6 சதவீதமாக ஒதுக்கப்படுதல் வேண்டும். இந்த நிதி ஏற்பாடானது கல்வில் சம உரிமையையும் அதன் பண்புசார் தன்மையினையும் கல்வியுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவத்தையும் இலக்கு வைக்கப்பட்டு ஈடுபடுத்தப்படும்.
- அவ்வவ் துறைகளில் விடய விற்பன்னர்களின் மற்றும் பலதரப்பட்ட தொழில்களில் விசேட நிபுனத்துவம் பெற்றவர்களினை உள்ளடக்கி அரச கல்வி ஆணைக்குழுவின் ஊடாக தேசிய கல்விக் கொள்கையொன்றை ஒரு வருடத்தினுள் தயார் செய்தல் மற்றும் அதனை தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுதல் வேண்டும்.
- ஆரம்பக் கல்வியானது அரசாங்கத்தின் பொறுப்பாகக் கருதி தேசிய கல்விக் கொள்கையில் அத்தியாவசிய பகுதியாக ஆக்குவதுடன் விஞ்ஞான ரீதியில் அவற்றை நியமப்படுத்தி ஆசிரியர்களை அறிவிலும் திறனிலும் வளப்படுத்துவதற்கும் சகல முன் பள்ளிகள் கல்வி வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- இந்தச் செயற்பாடானது முழுமையடையும் வரை அவசரத் தேவையாக முன் பள்ளிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ரூபா 300,000 கடன் தொகை வழங்கப்படும்.
- முன்பள்ளிக் கல்வி உள்ளடங்கலாக கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொலைகாட்சி அலைவரிசையொன்று நடாத்தப்படும்.
- செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்பள்ளி ஆசிரியர்கள் மத்தியில் கொண்டு செல்வதும் அவர்களை மேற்பார்வை செய்யும் நோக்கில் பரீட்சை முறைமையொன்றை ஏற்பாடு செய்து சான்றிதழ்களை வழங்குவதற்கும் உரிய பரீட்சையில் சித்தியடைந்து சான்றிதழ்களைப் பெறுகின்ற ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதும் ஊக்கக் கொடுப்பனவு என்ற வகையில் அவர்களுக்கு ரூபா 200,000 தொகையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- மாகாண சபைப் பாடசாலைகள், தேசிய பாடசலைகள், சபிரி பாடசாலை,

நவவோதய பாடசாலை போன்ற பலதரப்பட்ட திட்டமிடப்படாத மற்றும் அரசியல் நோக்கின் அடிப்படையில் மேற்கொள்ள்ளப்படும் மற்றும் தேவையற்ற போட்டித்தன்மைக்கு வழிவகை செய்துள்ள சகல வேறுபாடுகளையும் இல்லாதொழித்தல்.

- ஆரம்பக் கல்வித் தரங்களுக்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்வதுடன் தொடர்புடைய பிரமாணங்களை முடிந்தளவு இலகு படுத்துவதுடன் ஆரம்பக் கல்வியை பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் சகல பாடசாலைகளுக்கும் சமமான வளத்தினை வழங்குவதன் ஊடாக ஆரம்பக் கல்வித்துறைக்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்வதில் உள்ள போட்டித்தன்மை இல்லாதொழிக்கப்படும்.
- ஆரம்பப் பாடசாலைகளை உயர்தரத்திற்கு மேம்படுத்தும் பிரதான குறிக்கோளுடன் தற்பொழுதுள்ள ஆரம்பப் பாடசாலைகளில் வருடமொன்றுக்கு பாடசாலைகள் 500 வீதம் தெரிவு செய்து பாடசாலைகளுக்கிடையேயான தூரம், பிள்ளைகளின் கல்விசார் நிலைமைகள் போன்ற பிரமாணங்களின் மீது ஐந்து வருடங்களுக்குள் ஆரம்பப் பாடசாலைகள் 2500 தொடர்பாக கணனி நிலையமொன்று, விளையாட்டு மைதானமொன்று, 250 பிள்ளைகளுக்கு வசதிகளுடன் கூடிய புதிய இரண்டு மாடிக் கட்டிடத் தொகுதி, உயர்தரத்திலான கழியலறை தொகுதி மற்றும் பல் மற்றும் பிள்ளை பிணி மனைச் சேவையினை வழங்குதல்.
- மாணவர்களை கல்வியின் பால் ஈர்த்துக் கொள்ளமுடியுமான மற்றும் பலதரப்பட்ட பாடங்களை விளக்கப்படுத்திக் கொடுப்பதனை இலகுபடுத்தும் (உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்) பயன்படுத்துகின்ற விசேட முறைமைகள் (உதாரணம், கணித ஆய்வு கூடம் போன்றன) இனங் கண்டு அவற்றை நாடு பூராகவும் விஸ்தரிப்புச் செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- நிபுனத்துவத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு வீட்டிலோ அல்லது தனியார் வெளி வகுப்புக்களின் ஊடாகவோ மேற்கொள்வதற்கு ஏற்படும் கல்வி நடவடிக்கைகளை இழிவு படுத்தி பிள்ளைகளின் சமூக வாழ்க்கையினை மேம்படுத்துவதற்கும் பெற்றோர்கள் சந்திக்கின்ற இடையூறுகளை இழிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அதன் கீழ் 1, 2, 3 ஆம் தரங்களில் உள்ள பிள்ளைகளுக்கு வீட்டு வேலைகளை வழங்குவதனை நிறுத்துவதற்கு உத்துதேசிக்கப்பட்டுள்ளது.
- பாடசாலைக் கல்வியைப் பெறுகின்ற சகல பிள்ளைகளுக்கும் இலவசமாக பாடசாலைப் புத்தங்கள், சீருடைகள் மற்றும் போசாக்கு நிறைந்த பகல் உணவு வழங்கப்படும்.
- சகல பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அரசாங்கத்தின் ஊடாக மடிகணனிகள் வழங்கப்படும்.

- நவீன கவ்வியின் அடிப்படை பண்பாக இருக்கின்ற சகல மாணவர்களுக்கும் கணனி மற்றும் வகுப்பறையில் டிஜிடல் தொழில் நுட்பத்துடன் கூடியாத ஆக்குதல் எதிர்காலம் தொடர்பாக மேற்கொள்கின்ற அத்தியவசிய நவீன மயப்படுத்தலாகும். இது தொடர்பாக முதலாம் ஆண்டு முதல் 100 பாடசாலைகளில் வகுப்பறைகள் 500 என்ற அடிப்படையில் ஐந்து வருடங்களில் 1000 பாடசாலைகளில் 5000 வகுப்பறைகளை டிஜிடல் மயப்படுத்தல் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- சகல பாடப் புத்தகங்கள் இணைய தளத்தின் ஊடாக பரீட்சிப்புச் செய்வதற்கு வசதிகள் ஏற்பாடு செய்யப்படும்.
- பாடசாலை பிள்ளைகளின் பாடப்புத்தக பையின் நிறை பிள்ளையொன்றின் உடம்புக்கு ஈடு கொடுக்காத வகையில் இருப்பதாக ஆதங்கங்கள் நிலவுகின்றன. இதற்கு தீர்வொன்றாக இதுவரை பயன்படுத்தப்பட்ட பாடப் புத்தங்களை முதலாம் தொகுதி மற்றும் இரண்டாம் தொகுதி என்ற வகையில் இரு தொகுதிகளாக பிரிக்கும் வகையில் வெவ்வேறாக அச்சிடப்படும். அதன் போது மாணவர் ஒருவரின் பையில் உள்ள பாடப்புத்தங்களின் நிறை அரைப் பங்கினால் குறைவடையும்.
- ஆரம்ப நிலை வகுப்புகளில் உள்ள பிள்ளைகளின் போசாக்கு குறைபாடுகள் மற்றும் பிழையான உணவுப் பழக்க வழக்கங்களை இனங்கண்டு அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தேவையான வழிகாட்டல்களை மேற்கொள்வதற்கும் சகல பாடசாலைகளுக்கும் போசாக்கு தொடர்பான நிபுனத்துவம் பெற்றோரின் சேவை வழங்கப்படும்.
- ஆரோக்கியம் மற்றும் உடலியல் நலக் கல்வியினை அத்தியாவசியப்படுத்தி பயிற்சி மற்றும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்படும்.
- பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்காக உயர்தர வாசிப்பு தரத்தினை கட்டியெழுப்பி பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் அதனுடன் தொடர்புடைய தேசிய போட்டியை ஏற்படுத்தல்.
- பாடசாலை போக்குவரத்துச் சேவையினை முறைமைப்படுத்தல் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் தொடர்பாக சட்ட நிலைமையினையும் தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- பாடசாலை மாணவர்களை கொண்டு செல்வது தொடர்பாக பயன்படுத்துகின்ற பஸ்கள் மற்றும் வேன்கள் ஏற்றுமதி வரியிலிருந்து விலக்களித்தல்.
- பிள்ளைகளின் மனோநிலை ஆரோக்கியம், வயதேறுவதோடு ஏற்படும் உடலியல் மற்றும் மனோநிலை மாற்றங்கள், சூழல்சார் மற்றும் குடும்பத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளின் காரணமாக பிள்ளைகள் முகம்கொடுக்கின்ற மனோநிலைப்

பிரச்சினைகள் தொடர்பாக தேவையான ஆலோசனைச் சேவையை வழங்குவதற்கு சகல பாடசாலைகளுக்கும் பயிற்சி பெற்ற ஒரு ஆசிரியையாவது நியமித்தல் மற்றும் பிள்ளைகளின் மலோநிலைப் பிரச்சினைகளை தீர்த்து வைப்பது தொடர்பாக தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் தேவையின் பிரகாரம் பரிகாரங்கள் தொடர்பாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- சாதாரண தரப் பரீட்சையின் பின்னர் புதிய பாடப் பரப்புக்கள் 9 அறிமுகம் செய்யப்படுவதுடன் அவற்றில் தாம் விரும்புகின்ற தெரிவு செய்யப்பட்ட பாடப் பரப்பில் முன்னோக்கிச் செல்வதற்கு பிள்ளைகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். அதன் பிரகாரம், விஞ்ஞான பாடப்பரப்பு, கணித பாடப்பரப்பு, சமூக விஞ்ஞா பாடப்பரப்பு, வாணிப பாடப்பரப்பு, தொழில்நுட்ப பாடப்படரப்பு, கணனி பாடப் பரப்பு, தொழில்முயற்சி பாடப்பரப்பு, அழகியற்கலை பாடப்பரப்ப மற்றும் விளையாட்டு பாடப் பரப்பு என்ற வகையிலாகும்.
- பாடசாலைகளில் தேசிய மொழிகள் மூன்றிலும் (சிங்கள், தமிழ் மற்றும் ஆங்கிலம்) பாடங்களை கற்றுக் கொடுப்பதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
- ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர்களின் வினைத்திறன் தொடர்பாக விஞ்ஞான ரீதியான கற்கையொன்றை மேற்கொண்டு ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் வினைத்திறனின்மையை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதன் தொடக்கமாக கடினப் பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக ஆரம்பச் சம்பளத்திற்கு 50 சதவீத கொடுப்பனவொன்றை வழங்குதல்.
- ஆசிரியத் தொழிலினை திருப்திகரமாகவும் கௌரவ சேவையாகவும் ஆக்குவது தொடர்பாக ஆசிரியர்கள் பொதுவாக முகங்கொடுக்கின்ற உத்தியோகபூர்வ விடுதிகள், இடமாற்றங்கள், சம்பளம், பதவியுயர்வு, தொடர்ச்சியான கல்வி, கடன் மற்றும் நலன்புரி வசதிகள், பணிகள் மற்றும் பொறுப்புக்கள் பகிரப்படுவதில் உள்ள முறண்பாடுகள் தொடர்பாக குமுறும் தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து, தொடர்புடைய வகையில் வேறு அரச துறைகளுடன் ஒன்றிணைந்து அவற்றைத் தீர்த்துக் கொள்வது தொடர்பாக வேறாக அமைக்கப்பட்டுள்ள விசேட அலகினால் கல்வி அமைச்சில் ஸ்தாபிக்கப்படும்.
- பட்டம், பட்டப்பின்படிப்பு உள்ளடங்கலான மேலதிக கல்வி மற்றும் விசேடமாக ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்பாக ஆசிரியர்களை ஊக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதன் கீழ் வருடமொன்றுக்கு 1000 ஆசிரியர்களுக்கு பட்டப்பின்படிப்பு கல்விக்காக அமைச்சினால் நிதி அனுசரணை வழங்கப்படும்.
- தற்பொழுது இயங்குகின்ற ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள் 18 யும் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் பல்கலைக்கழகங்களாக மாற்றி

வருடமொன்றுக்கு ஆசிரியத்தொழில் தொடர்பாக ஆட்ச்சேர்ப்புச் செய்து கொள்கின்ற எண்ணிக்கையை 3,500 முதல் 6,000 வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- உயர்தரம் சித்தியடைகின்ற சகல மாணவர்களுக்கும் பல்கலைக் கழகங்களுக்குப் பிரவேசிக்கும் வசதியை வழங்குவதனை இலக்கு வைத்து பல்கலைக் கழக கட்டமைப்பு விஸ்தரிப்புச் செய்யப்படும்.
- பல்கலைக் கழகத்தினை அறிவின் கேந்திர நிலையங்களாக கருதுவதுடன் உயர் தரமான ஆராய்ச்சி, புலமைச் சொத்து அபிவிருத்தி, அவற்றின் ஊடாக உருவாகின்ற அறிவு மற்றும் தொழில்நுட்பத்தை பகிர்ந்தளிப்பதற்கு அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை தொடர்புபடுத்திய முறைமையொன்றை தயார் செய்து அமுல்படுத்தப்படும்.
- சகல பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் விரிவுரையாளர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் வதிவிட வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பட்டப்பின் படிப்பு பட்டத்தினை வழங்குவத்து தொடர்பாக தற்போது நிலவுகின்ற முறைகேடான முறைகளை மத்தியமப்படுத்தப்படுத்தி தேசிய பட்டப்பின்படிப்பு நிறுவனமொன்று உருவாக்கப்படும்.
- பல்கலைக் கழக விரிவுரையாளர் பற்றாக்குறை மற்றும் மூளை வெளியேற்றத்திற்கு தீர்வொன்றாக அதிகமான தொகையினரை பல்கலைக் கழக விரிவுரையாளர்களாக ஆட்ச்சேர்ப்புச் செய்யும் நோக்கில் வருடாந்தம் 10 சதவீதத்தால் அதிகரிக்கும் வகையில் நிலையான விரிவுரையாளரின் ஆரம்ப சம்பளத்தை ரூபா. 100,000.00 ஆக அதிகரித்தல்.
- பட்டப்பின்படிப்பை நிறைவு செய்த வேறு தொழில்களில் ஈடுபடுகின்ற கற்றவர்களை பல்கலைக் கழக கட்டமைப்புக்குச் சேர்த்துக் கொள்வது தொடர்பாக அவர்களை ஊக்கப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று தயார் செய்யப்படும்.
- இலங்கையில் பல்கலைக் கழகங்களில் வருடாந்தம் உயர் பெறுபேறுகளைப் பெறுகின்ற மாணவர்கள் 500 பேருக்கு வெளிநாட்டு முன்னேற்றமடைந்தை பல்கலைக்கழகங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட அரச உடன்படிக்கையின் பிரகாரம் பட்டப்பின்படிப்பு புலமைப் பரிசில்களை வழங்குதல்.

## 02. சுகாதாரம்

கடந்த நூற்றாண்டின் முதற் பகுதியின் போது இந் நாட்டில் அமுல்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் கல்வி உள்ளடங்கலான சமுக நலன்புரி கொள்கைகளின் பெறுபேறொன்றாக

பாரிய சுகாதாரப் பிரச்சினையாக காணப்பட்ட பரவுகின்ற நோய்கள், தாய் மற்றும் சிசு நோய்கள் மட்டுமல்லாது போசாக்குக் குறைபாடுகளை இல்லாதொழித்து பிரசைகளின் ஆயுட் காலத்தினை இரண்டு தசாப்தங்களினால் அதிகரிப்பதற்கு இயலுமை கிடைக்கும். மூன்றாம் உலகின் ஏனைய பல நாடுகளில் எமது சுகாதார சேவைக்கு உயர் ஏற்புடைமை கிடைப்பதற்கு காரணமாக இருந்தது, அந்தச் சேவை இலவச சுகாதாரச் சேவையாக சிறப்பாக அமுல்படுத்தி மக்களுக்கு மிகவும் நெருக்கமான சேவையொன்றாக அமுல்படுத்திச் சென்றமையினாலாகும். ஏனினும், கடந்த தசாப்தங்கள் பலவற்றின் போது சுகாதாரச் சேவையினதும் சுகாதார தேவைப்பாடுகளினதும் அடிப்படை மாற்றங்கள் பல நிகழ்ந்துள்ளதுடன் அவற்றை இறுதி பெறுபேறாக இருப்பது எமது நாட்டில் சுகாதாரச் சேவைக்கு நாட்டு மக்களின் மட்டுமல்லாது வெளிநாட்டவர்களிடம் இருந்த விசுவாசம் சிதைவடைந்தமையும் மற்றும் நடைமுறை சுகாதாரத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடியாத மிக மோசமான நிலைமைக்கு அச் சேவை ஆக்கப்பட்டமையாகும்.

இன்று நாட்டின் சனத்தொகை அதிகரித்துள்ளது. வயது வந்தவர்களின் சனத்தொகை அதிகரிக்கும் வகையில் சனத்தொகை வகுதிகள் மாற்றமடைந்துள்ளது. நோய் நொடிகளின் போக்கு மாற்றமடைந்துள்ளது. பூகோள ரீதியாகப் பார்க்கின்ற போது, வைத்திய விஞ்ஞானம் தொழில்நுட்ப ரீதியாக முன்னேற்றமடைந்துள்ள போதும் நோய் எதிர்ப்புச் சக்தி திறன், காலநிலை மாற்றத் தாக்கங்கள், பூகோள ரீதியாக பரவுகின்ற நோய் தொற்றுக்கள் போன்ற தொழில்நுட்ப ரீதியான சவால்கள் உக்கிரமடைந்துள்ளது. மக்களின் சுகாதாரம் தொடர்பான எதிர்பார்ப்புக்கள் உயர்வடைந்துள்ளது. அதற்குப் புறம்பாக எமது சுகாதாரச் சேவைகளும் எமக்கு தெரியாமலே மாற்றமடைந்துள்ளது. 80 ஆம் ஆண்டு காலப் பகுதி வரை முழுமையாக அரசின் பொறுப்பாக அமுல்படுத்தப்பட்ட சுகாதாரச் சேவையிலிருந்து கிரமமாக நீங்கி அல்லது போதியளவான அளவில் பங்குபற்றாமல் அச் சேவை வாணிப மயப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரச் சேவை தொடர்பான செலவினம் உலகின் சராசரி மொ.தே. உற்பத்தியில் நூற்றுக்கு 9.1சதவீதமாக உள்ளது. எமது நாட்டில் அது 3.3சதவீதமாக உள்ளது. உலகில் அண்ணளவாகக் கருதும் போது அரசாங்கங்களினால் சுகாதாரம் தொடர்பாக மேற்கொள்கின்ற செலவினம் மொத்த சுகாதாரச் செலவில் 57சதவீதம் ஆகும். எனினும், எமது நாட்டில் அரசு மேற்கொள்கின்ற செலவினமானது மொத்த சுகாதார செலவின் 39 சதவீதமாக உள்ளது. 60சதவீதமான நிலுவை பொது மக்கள் தனிப்பட்ட ரீதியாக செலவு செய்கின்றனர். அரசு ஒரு பிரசையின் சுகாதாரம் தொடர்பாக ஒதுக்குகின்ற தொகை சில வளர்சியடைந்த நாடுகளின் அ.டொ. 8000 அளவாக இருப்பதுடன் உலகில் சராசரியாக பார்க்கின்ற போது அ.டொ. 615 அளவாகும். இலங்கை அரசாங்கம் ஒதுக்கீடு செய்வது அ.டொ. 34 இற்கு அண்மித்த தொகையாகும். அதன் பெறுபேறொன்றாக வைத்தியர்கள் உள்ளடங்கலாக சுகாதார பதவியணியிர், மருந்து உள்ளடங்கலான பௌதீக வளங்களிலும் பாரிய பற்றாக்குறை நிலவுகின்றது. அரச சேவையில் குறைந்த சம்பளமும் அதிர்ப்தியான சேவை காரணமாகவும் அனேக பயிற்சி பெற்ற தொழில்சார் நபர்கள் நாட்டை விட்டுச்

செல்கின்றனர். இந்நாட்டு பட்டதாரி மருத்துவர்களில் 50சதவீதமான வைத்தியர்கள் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இறுதி பெறுபேறாக தாமும் தங்களுடைய பிள்ளைகளும் எந்தவொரு சந்தர்பத்திலும் ஏதேனும் பரவலடையும் நோய்யொன்றின் அல்லது விபத்தொன்றின் இலக்காய அமைய முடியும் என்பதையே அநுபவித்து வருகின்றனா். அவ்வாறு ஏற்பாட்டால் உரிய சிகிச்சை கிடைக்குமா? எவ்வளவு பணம் செலவு செய்ய வேண்டி ஏற்படும்? என்ற வழமையான சந்தேகத்துடனும் அச்சத்துடனும் வாழ்கின்றனா். டெங்கு, எயிட்ஸ், எலிக்காய்ச்சல் போன்ற பரவுகின்ற நோய்களுக்குப் புறம்பாக இன்புலுவென்சா போன்ற பரவும் நோய்களுக்கும் மக்கள் ஆளாகின்றனா். சிறுநீரக நோய், நீரிழிவு, புற்றுநோய், இருதய நோய், அங்கிச வாய்வு, உளரீதியான குறைபாடுகள், நஞ்சடைதல், நபர்களுக்கிடையேயான பிணக்குகள் விபத்துகள் போன்ற பரவாத நோய்களின் அதிகரிப்பும் அவற்றின் காரணமாக இறக்கின்ற மற்றும் வலது குறைவடைதல் அதிகரிப்பதன் மூலம் வெளிப்படுத்துவது இலங்கை பிரசைகளின் சுகாதார நிலைமை மிகவும் ஆபத்தான நிலைமையில் இருக்கின்றதையே ஆகும். சுகாதார பாதுகாப்பிற்கு உள்ள முறைமைகள் மிக மோசமான நிலைமையில் உள்ளதே ஆகும்.

## தீர்வுகள்

சகல பிரசைகளின் சுகாதார பாதுகாப்பு தேசிய மட்டத்தில் முன்னுரிமை விடயமாக இருப்பதுடன் சுகாதாரத்தை பாதுகாக்கும் பொறுப்பு வணிகச் சந்தைக்கு கையளிக்காது முழுமையாக அரசாங்கத்தினால் கையேற்கப்படும். அரசின் முழுமையான பொறுப்பு மற்றும் பங்குபற்றலுடன் சுகாதாரச் சேவையினை பேணிச் செல்லல் உலகம் பூராகவும் காணக் கூடிய போக்காக இருப்பதுடன் உலக சுகாதார அமைப்பின் மூலம் அழுத்தம் கொடுத்துள்ள பிரகாரம் சுகாதாரம் தொடர்பாக அரச பொறுப்பினை மேற்கொள்ளல் உறுதிப்படுத்தப்படும்.

## வழிமுறைகள்

- உயர் சுகாதார நிலைமையுடன் கூடிய உயர் உள, உடல் மற்றும் சமூக சுகாதார நலனுடன் வாழ்வது அடிப்படை மனித உரிமையாக அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- குறைந்த செலவில் உயர் சுகாதார சேவையினை பேணிச் செல்கின்ற கியுபா உள்ளடங்கலாக உயர் சுகாதார சேவைகள் மட்டுமல்லாது உலக சுகாதார அமைப்பு போன்ற அமைப்புக்களினால் இனங்காணப்பட்டுள்ள ஆக்கபூர்வமான முறைமைகள் (சுகாதார சேவையை பெற்றுக் கொள்ளும் சகலருக்கும் நியாயமான சந்தர்ப்பம், சுகாதாரம் தொடர்பாக அடிக்கடி தனிப்பட்ட ரீதியாக செலவு செய்யப்படும் தேவையை இல்லாதொழித்தல்,

ஆரம்ப ஆரோக்கியதிற்கு முன்னுரிமை வழங்குதல், சுகாதாரம் தொடர்பாக பல் துறை பங்குபற்றலை ) உள்ளடக்கி தேசிய சுகாதாரக் கொள்கையொன்றும் அதன் பால் கட்டியெழுப்பட்ட ஒருங்கிணைந்த தேசிய சுகாதாரச் சேவையொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

- இதன் போது அதிகரிக்கின்ற சனத்தொகை, சனத்தொகை வகுதிகளில் ஏற்படும் மாற்றங்கள், தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் சவால்கள் (நோய் எதிர்ப்புச் சக்தி) நாடு தள்ளப்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, நோய் நொடிப் போக்குகள் மற்றும் அவற்றுக்கு பிரதானமாக இருக்கின்ற சமூக, பொருளாதார விடங்கள் உள்ளடங்கலான சகல விடயங்கள், மக்கள் தேவைகள் போன்ற அனைத்தையும் கவனத்திற் கொண்டு சுகாதார மேம்பாடு, நோய் நிவாரணம், சிகிச்சை, சீர்சிருத்தம் போன்ற சுகாதாரச் சேவையின் சகல பிரிவுகளை முறைமைப்படுத்துவதற்கும் தேவையான பிரகாரம் விஸ்தரிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- எதிர்வரும் ஐந்து வருடங்களில் சகல பிரசைகளுக்கும் அரச தொடர்பாக பொறுப்புக் கூறுகின்ற குடும்ப மருத்துவரின் காப்புறுதியை பெற்றுத் தருவதுடன் குறைந்த பட்சம் ஒரு வருடத்திற்கு ஒரு முறை முழுமையான மருத்துவப் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்படுவர்.
- தற்பொழுது 75வருடமாக இருக்கின்ற இலங்கையர்களின் ஆயுள் எதிர்பார்க்கையினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- உள்ளுராட்சி, வர்த்தக, உணவு, விவசாய, மீன்பிடி, கால்நடை, கல்வி, ஊடக, அரச நிதி, நீர், சுற்றாடல், தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி உள்ளடங்கலான பல்வேறு துறைகளில் அரச நிறுவனங்கள் மற்றுமன்றி சிவில் சமுகங்களினதும், பொது மக்களினதும் தேசிய மற்றும் வெளிநாட்டு நிபுனர்களின் மற்றும் நிறுவனங்களின் பங்குபற்றலுடன் மற்றும் ஒத்துழைப்புடன் தற்பொழுது பாரிய அளவில் பரவியிருக்கும் நோய் நொடிகளையும் விபத்துக்களையும் துரிதமாக கட்டுப்படுத்தல் தொடர்பாக இலக்கு வைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தப்படவுள்ளது. அதன் கீழ் ரெபிஸ் மற்றும் டெங்கு நோயினை 3வருடங்களுக்குள் முழுமையாக இல்லதொழிக்கப்படும்.
- தாய், சிசு மற்றும் நிவாரண சுகாதாரச் சேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் பாடசாலை வயதிற்குக் கூடிய சகல பிரசைகளுக்கும் உள்ள நோய்களுக்கு பொருத்தமான அடிப்படை சுகாதார அறிவு வழங்கப்படும். இங்கு சகல விதங்களிலும் ஊடக, அரசியல் மேடைகள், சமய சந்தர்பங்கள், கல்வி நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் வேலைத்தளங்களில் பயன்படுத்தப்படும்.

- அரச துறையில் அத்தியவசியமான மருந்துகள், உபகரணங்கள் மற்றும் பரிசோதனை வசதிகளின் பற்றாக்குறை மற்றும் நியமொன்று இல்லாத நிலைமையினை 5வருடங்களுக்குள் முழுமையாக இல்லாதொழித்து அந்த ஒவ்வொரு பிரிவு தொடர்பாகவும் தனியார் துறைக்கும் செல்வாக்குச் செலுத்தும் வகையில் தேசிய கொள்கையொன்றை தயார் செய்யப்படும்.
- மருந்துகள் சட்டத்தினை மிகவும் சிறந்த வகையில் மக்கள் நலன் கருதிய வகையில் திருத்தம் செய்யப்பட்டு அமுல்படுத்தப்படும்.
- உரிய நியமத்துடன் கூடிய மருந்துகளை மாத்திரம் சந்தைக்கு வெளியிடுவதுடன் மருந்துகளின் உள்ளடக்கம் மற்றும் அவற்றினால் ஏற்படக் கூடிய பக்க விளைவுகள் பற்றி தெளிவுபடுத்துகின்ற துண்டுப் பிரசுரங்கள் (மூன்று மொழிகளிலும்) மருந்துகளுடன் வழங்கப்படும்.
- தற்பொழுது பெருவாரியாகப் நிலவுகின்ற சிறுநீரக மற்றும் புற்று நோயினால் அவதிப்படுகின்ற நோயாளிகள் தொடர்பாக தேவையான அனைத்து மருந்துகள் மற்றும் ஏனைய சிகிச்சைகளை அரசினால் இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- பிள்ளைகள் இல்லாத திருமணம் செய்த குடும்பங்களுக்கு பிள்ளைகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக விசேட மருத்துவ வசதிகளுடன் கூடிய மருத்துவ பிரிவுகளை நாட்டின் பிரதான வைத்தியசாலைகளில் ஏற்படுத்தப்படும்.
- குறைந்த விலையில் சிறந்த மருந்துளை மக்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அரச ஒசுசல நிலையங்களின் எண்ணிக்கையினை வருடமொன்றுக்கு 100 வீதம் ஐந்து வருடங்களில் 500 உருவாக்கப்படும்.
- மருந்துகள் மற்றும் உபகரணங்கள் தேசிய ரீதியாக உற்பத்தி செய்வதனை மேம்படுத்துவதற்கு அரச மற்றும் தனியார்-அரச தொழில்முயற்சிப் பிரிவுகளுக்கு ஊக்கம் வழங்கப்படும். அது தொடர்பாக அவ் உற்பத்திகளை மேற்கொள்கின்ற நிறுவனங்களை முதல் இரண்டு வருடங்களுக்கு வரியிலிருந்து விடுவிப்பு வழங்கப்படும்.
- சுகாதாரச் சேவை பதவியணியினரின் தொழில்சார் திருப்தி மற்றும் வினைத்திறனினை மேம்படுத்துவது தொடர்பாக அறிவு மற்றும் திறனை இற்றைப்படுத்துவதற்கும் அவர்கள் முகங்கொடுக்கின்ற சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் உத்தியோகபூர்வ வதிவிடப் பற்றாக்குறை, நலன்புரி குறைபாடுகள் உள்ளடங்கலான குறைபாடுகள் உள்ளடங்கலான தொழில்சார் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுகளை வழங்குவதற்கும் அரசு உச்ச நடவடிக்கை எடுக்கும்.

- சமூக சுகாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பாக வைத்திய, தாதி, பாரா மருத்துவ, துணை மருத்துவ மற்றும் ஏனைய தொழில்சார் நிபுனர்கள் 50,000 பேர்களை 5வருடங்களுக்குள் அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.
- சகல கிராம சேவையாளர் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் சன சமுக சுகாதார அலகுகள் தாபிக்கப்படும். நோய்களைத் தடுத்தல் மற்றும் ஆபத்துகள் குறைந்த நோய்கள் தொடர்பாக சிகிச்சை வழங்குவதற்குத் தேவையான மருத்துவ, தாதியர் பதவியணியை இது தொடர்பாக ஆட்ச்சேர்ப்புச் செய்யப்பட்டு அதன் ஊடாக அரச வைத்தியசாலைகளில் உள்ள பற்றாக்குறை நீக்கப்படும்.
- மருத்துவக் கற்கை உள்ளடங்கலாக சகல சுகாதார தொழில்சார் கல்வியினை அரச பல்கலைக் கழகங்கள் மற்றும் அரச நிறுவனங்களினால் மாத்திரம் மேற்கொள்ளல். அது தொடர்பாக மருத்துவமற்ற தொழில்களும் உள்ளடங்கும் வகையில் சுகாதார விஞ்ஞான தொடர்பான கல்விப் பீடங்கள் ஆரம்பிக்கப்படும்.
- இந்நாட்டில் தற்பொழுதுள்ள 11ஆக உள்ள அரச தாதியர் பாடசாலைகளின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அந் நிறுவனங்கள் பல்கலைக்கழக மட்டம் வரை உயர்வடையச் செய்யப்படும்.
- மருத்துவ சபைகளின் சுயாதீனத் தன்மை, அதிகாரங்கள் மற்றும் வசதிகளை விஸ்தரிப்புச் செய்து நாட்டினுள் சேவையில் உள்ள சகல சுகாதாரம்சார் தொழிலாளர்களை உயர்தரமான அறிவுடனும் தறினுடனும் ஒழுக்கத்துடனும் கூடிய மக்களினை ஏற்படுத்துவதனை உறுதிப்படுத்தல்.
- திடீர் சுகாதாரத் தேவைகள் தொடர்பாக விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ள 24 மணித்தியாலங்களாக அமுல்படுத்தப்படுகின்ற தொலைபேசி இலக்கமொன்றினை அறிமுகம் செய்வதுடன் சுகாதாரச் சேவைகள் தொடர்பான தகவல்களை வழங்குகின்ற நிலையமொன்று தாபிக்கப்படும்.
- குடியிருப்புக்கள் மற்றும் சேவை நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு திடீர் சிகிச்சை தொடர்பாக நோயாளர்களை கொண்டு செல்வதற்கான போக்குவரத்துச் சேவையொன்றை நாடு தழுவிய வகையில் அமுல்படுத்தப்படும்.
- தற்பொழுது தேங்கியுள்ள சத்திர சிகிச்சைகளை (இருதய, சிறுநீரகம் போன்ற) துரிதமாக மேற்கொள்வதற்கு தனியார் துறையின் ஒத்துழைப்புடன் நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்படுவதுடன் அது தொடர்பாக புகையிலை வரியினை பயன்படுத்தி விசேட நிதியமொன்று உருவாக்கப்படும்.
- முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளும் போது ஒவ்வொரு

பிள்ளைக்கும் உரிய மருத்துவ அறிக்கைகளைத் தயார் செய்தல் மற்றும் சுகாதார அச்சுறுத்தல் உள்ள பிள்ளைகள் தொடர்பாக தொடர்சியான மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தல் நிகழ்த்தப்படும்.

- பணியாற்றுகின்ற மக்களுக்கு வெளியக நோய் மற்றும் சிகிச்சை வசதிகளை பெற்றுக் கொள்வதனை இலகுபடுத்தும் வகையில் வார நாட்களில் காலை 6.00 மணி முதல் இரவு 10.00மணி வரை மற்றும் ஞாயிறு தினங்களும் உள்ளடங்கும் வகையில் அச் சேவையினை நீடிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- மேற்கத்தேய, ஆயுர்வேத, ஹோமியோபதி, யூனானி மற்றும் சுதேச வைத்தியம் போன்ற பலதரப்பட்ட மருத்துவ முறைகளை விஞ்ஞான அடிப்படையில் ஒருங்கிணைந்த சேவையாக மக்களுக்கு வழங்கும் இயலுமையினை அத்துறையின் நிபுனர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஆராய்ந்து பார்க்கப்படும்.
- மேற்கத்தேய மற்றும் தேசிய சுகாதார சேவைகளை கட்டுப்படுத்துவதற்கு ஒரு அமைச்சின் கீழ் கொண்டுவரப்படும்.
- இந்த விதத்தில் சுகாதாரத் துறையினை அபிவிருத்தி செய்யும் போது தேவையான பிரகாரம் அரசாங்க நிதி ஏற்பாடுகளை மொ.தே. உற்பத்தியின் 5சதவீம் வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 03. நீர், உணவு, போசாக்கு மற்றும் சுகாதார வழிமுறைகள்

பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதர்கள் வாழ்வதற்கு உலகில் மிகவும் பொருத்தமான நாடாக இலங்கை உருவெடுத்து தூய்மையான நீர் போதிய அளவில் இருக்கின்றமை, உணவுகளில் சுய தன்னிறைவடைந்திருக்கின்றமை, காலநிலை மாற்றங்கள் குறைந்த அளவில் இருக்கின்றமை மற்றும் துப்பரவு ஏற்பாடு மற்றும் ஒத்துழைப்பினை மதிக்கும் கலாச்சாரமொன்று இருக்கின்றமை போன்ற விடயங்களின் அடிப்படையிலாகும். இருந்த போதும், இன்றுவரை நிகழ்ந்திருப்பது என்ன? முறையற்ற கைத்தொழில்மயமாக்கல், பிழையான அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக இச்சகல விடயங்களும் பிரச்சினைக்கு உள்ளாகி அடிப்படை தேவைகள் கூட இலங்கையர்களுக்கு இல்லாது போய் உள்ளது.

உணவு உற்பத்தியாளர்கள், தரகர் முறைமையினை செயற்படுத்துனர்கள் மற்றும் நுகர்வோர் ஆகிய அனைவரும் அரசினால் முறையற்ற திறந்த சந்தைப் பொருளாதாரத்தில் கைவிடப்பட்டுள்ளனர். நாம் இன்று அனுபவித்து வருவது, இந்த அடிப்படை

பிரச்சினைகளின் வெளியக நிலைமைகளையாகும். உற்பத்தியாளர்கள் தமக்கு உரிய விலை கிடைக்காமையினால், விளைச்சலுக்கு ஏற்படும் விதி பற்றிய நிச்சியமற்ற தன்மை மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டலொன்று இன்மையால் அவதிப்படுகின்றனர். அத்தியவசிய சேவையில் ஈடுபடுகின்ற இடைத்தரகர் செயற்பாட்டினை மேற்கொள்கின்றவர்கள் நாளை தினத்தின் பொருளாதார நிச்சயமற்ற தன்மை தொடர்பாக அதிக இலாபத்தை உழைத்துக் கொள்வதற்கு உணவு மற்றும் பாணங்களை திருபுபடுத்தி நஞ்சுகளை சேர்த்து விலைகளை அதிகரித்துள்ளதுடன் நுகர்வோர் அதிக விலையின் காரணமாக நஞ்சுகள் சேர்க்கப்பட்டுள்ளதா என்ற அச்சத்துடன் நுகர்வோர் உரிய போசாக்கு குறைபாட்டுடன் நித்தமும் வாழ்ந்து வருகின்றனர். சிறுவர் சமுதாயம் தொடர்பாக சில வயது வந்தோர் போசனக் குறைபாட்டில் அவதிப்படுவதுடன் இன்றைய பொருளாதார முறையின் காரணமாக உப்பு, கொழுப்பு மற்றும் சீனி அதிகமான உணவுகளை உட்கொள்வதால் மேலும் அதிக தொகையினர் நீரிழிவு, உயர் இரத்தக் கொதிப்பு, புற்றுநோய், உடல்பரும் அதிகரித்தல், சிறுநீரக நோய் போன்ற நோய்களினால் அவதிப்படுகின்றனர். சராசரி இலங்கையர்களின் நாளாந்த சீனி, மா மற்றும் எண்ணை மற்றும் கொழுப்பு நுகர்வு உரிய அளவிலும் பார்க்க இரு மடங்காக உட்கொண்டாலும் மீன், காய்கறிகள், பசும்பால் மற்றும் பழவகைகள் நுகர்வு உரிய அளவிலும் பார்க்க அரைவாசி அளவு குறைவாக நுகர்வு செய்யப்படுவதாக ஆராய்சியாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிலைமையானது நீரிழிவு, உயர் இரத்தக் கொதிப்பு, புற்றுநோய், உடற்பருமன் அடைதல், இருத நோய்கள் மற்றும் மன அழுத்தம் போன்ற நோய்களுக்கு காரணியாக அமைந்துள்ளது.

விசேடமாக நீரில் இரசாயனத் தன்மை தொடர்பில் சான்றுப்படுத்தும் முறைமை உரிய முறையில் இல்லாததால் நீரினால் பரவுகின்ற நோய்களும் அதிகரித்து வருகின்றது. உணவு மற்றும் போசாக்கின் மூலம் தன்னிறைவடையக் கூடிய எமது நாட்டுக்கு உணவு மற்றும் விற்றமின்கள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு பில்லியன் கணக்கான அண்ணியச் செலாவணியை செலவு செய்யப்படுவது மிகவும் கவலைகரமான நிலமையாகும்.

## தீர்வுகள்

பொது மக்களின் உணவு, போசாக்கு, குடி நீர் தொடர்பாக நிதமும் ஆராய்ந்து பார்ப்பதும், கொள்கைகளை தயார் செய்து அமுல்படுத்துவதும் அரசாங்கத்தின் கட்டாய கடமையாக உள்ளது.

## வழிமுறைகள்

- 5 வருடங்களுக்கு ஒரு முறை தேசிய போசாக்கு நிலைமை கற்கை ஆய்வு செய்யப்படும்.
- குறுங்கால மற்றும் நீண்ட கால போசாக்குக் குறைபாட்டினால் அவதிப்படுகின்ற பிள்ளைகளுக்கு இலவசமாக விசேட உணவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- சகல முன் பாடசாலைகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக போசாக்கு நிறைந்த பகல் உணவொன்று வழங்கப்படும்.
- சுகாதார நலன் நிறைந்த உணவுப் பழக்க வழக்கம் தொடர்பாக பிள்ளைகளை பழக்கப்படுத்துவதற்குரிய தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றையும் கல்வி நிகழ்ச்சித்திட்டமொன்றையும் தயார் செய்து அமுல்படுத்தப்படும்.
- கர்ப்பிணி மற்றும் பால் கொடுக்கின்ற தாய்மார்களுக்கும் சிரேட்ட பிரஜைகளுக்கு ரூபா 2000.00 பெறுமதியான போசாக்கு நிவாரண உதவி வழங்கப்படுகின்றது.
- சந்தைகளில், வீடுகளில் சகல உணவுகள் மற்றும் நீரின் பாதுகாப்புத் தன்மையினை உறுதிப்படுத்துவது தொடர்பாக தேவையான கள அலுவலர்களையும் ஆய்வுகூடங்கள் உள்ளடங்கலான வேறு வசதிகளும் அபிவிருத்தி செய்யப்படும்.
- சிறந்த தரத்துடன் கூடிய கழியலறைகள் இல்லாத குடும்பங்களுக்கு உள்ளூராட்சி நிறுவனத்தின் ஊடாக இலவசமாக கழியலறைகள் அமைத்துக் கொடுக்கப்படும்.
- தற்பொழுது நகரப் பாதைகளில் கழியலை வசதிகள் இல்லாமையினால் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வொன்றாக சுற்றுலாப் பயணிகள், பொதுமக்கள் போய் வருகின்றவர்களின் எண்ணிக்கை மற்றும் நகரங்களுக்கிடையில் உள்ள பாதைகளின் தூரம் போன்ற விடயங்களை கவனத்திற் கொண்டு உயர் தரத்துடன் கூடிய பொது துப்பரவு ஏற்பாட்டு பிரிவுகளை நாடு பூராகவும் ஏற்படுத்தப்படும்.
- உணவு, பானங்களை தயார் செய்யும் போதும் விற்பனையின் போதும் அவற்றுக்கு நஞ்சுகளை சேர்க்கின்ற மற்றும் நியம தரமற்ற உணவு பானங்களை உற்பத்தி செய்கின்ற, விற்பனை செய்கின்ற நபர்களுக்கு எதிரான சட்டம் மிகக் கடுமையாக அமுல்படுத்தப்படும்.

- பழவகைகள் மற்றும் காய்கறி உற்பத்திலும் விநியோகிப்பதிலும் விற்பனையின் போதும் சுகாதார பாதுகாப்பினையும் உரிய தரத்தின் கீழ் பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்தப்படும்.

## 04. விளையாட்டு மற்றும் உடல் நலன்

நோயற்ற, ஒழுக்கமான, சமுகரீதியான, பாரிய ஆளுமையுடன் கூடிய சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு விளையாட்டுதுறை முக்கியமான பங்கை ஆற்றுகின்றது. சகலவற்றையும் பணத்தினால் கணிப்பிடுகின்ற இன்றைய சூரையாடும் பொருளாதரத்தில் விளையாட்டில் இருக்க வேண்டிய சாதகமான பண்புகள் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. விளையாட்டு என்பது இயன்றவரை பணம் உழைக்கின்ற சூதாட்டம் என்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக விளையாட்டுத் துறையில் மோசடி, ஊழல், இலஞ்சம் போன்ற பலதரப்பட்ட முறைகேடுகள் கொடிகட்டி பறக்கின்றது. விளையாட்டு தொடர்பாகத் தேவையான அரச தலையீடுகள் மேற்கொள்ளப்படாததுடன் தேசிய விளையாட்டு திட்டமொன்று இன்மையும் பிரச்சினையாக உள்ளது. விளையாட்டு வீரர்கள் தொடர்பாக விளையாட்டு மைதானங்கள், விளையாட்டு அரங்குகள், விளையாட்டு உபகரணங்கள் போன்ற வசதிகள் இன்மையால் விளையாட்டு வீரர்களை பயிற்சியளிப்பதற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சியாளர்களின் பற்றாக்குறை காரணமாக நாடு பூராகவும் பரந்துள்ள பலதரப்பட்ட திறன்களைக் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு தங்களது திறன்களை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டுள்ளது.

குழந்தை பருவ வயதிலிருந்து முதியோர் வரை சில உடல் பயிற்சியல் ஈடுபடல் மிக முக்கியமாக இருப்பதுடன் அது தொடர்பாக சந்தர்ப்பங்களை உரிய விதத்தில் பரந்தில்லாத்துடன் மக்கள் மத்தியில் புரிந்துணர்வும் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. சனத்தொகை செறிவான பிரதேசங்களில் இது பாரிய பிரச்சினையாக இருப்பதுடன் பாடசாலைகளில் அரைவாசிக்கும் அதிகமானவற்றுக்கு விளையாட்டு மைதானங்கள் உள்ளடங்கலான ஏனைய வசதிகள் இல்லை. பயிற்சி மற்றும் விளையாட்டு தொடர்பாக ஈடுபடுகின்றவர்களின் சுகாதார நிலைமையை பரீட்சிப்பது தொடர்பாக பங்குபற்றுகின்ற அரச முறைமையொன்று இன்மையால் பெறுமதி மிக்க உயிர்கள் இல்லாது போய் உள்ளதுடன் இன்றுவரை அவ்வாறான முறைமையொன்று உருவாக்கப்படவில்லை.

### தீர்வுகள்

எல்லா விளையாட்டுகளுக்கும் சமமான இடம் கிடைக்கக்கூடிய வகையில் அவற்றை அபிவிருத்தி செய்வதும், செயற்படுத்துவதும் அரசின் பொறுப்பாகக் கொள்வதுடன் விளையாட்டுகளை மேம்படுத்துவதற்கான இலக்குகளைக் கொண்ட தேசிய விளையாட்டு கொள்கையும் செயற்றிட்டமும் செயற்படுத்தப்படும்.

## வழிமுறைகள்

- விளையாட்டுத் துறையானது புதிய நிருவாகம், சட்டம், ஒழுக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் மீள்கட்டமைக்கப்படும்.
- விளையாட்டு வீரவீராங்கனைகளைப் பாதுகாத்தல், காப்புறுதிசெய்தல், நிதி மற்றும் பௌதீகவளங்களைப் பெற்றுக்கொடுத்தல், விளையாட்டுத்துறையில் தொழில் புரிபவர்களுக்கு சம்பளம், வேறு கொடுப்பனவுகள், வீட்டு வசதிகள், விளையாட்டு உபகரணங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கான தேசிய செயற்றிட்டமொன்று தயாரிக்கப்படும்.
- தொழில் புரியும் விளையாட்டு வீரவீராங்கனைகள் ஓய்வுபெற்றபின் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.
- பதிவு செய்யப்பட்ட பாடசாலை விளையாட்டுகளில் மாவட்ட மட்டத்தில் திறன்களை வெளிப்படுத்தும் 1000 பாடசாலை விளையாட்டுவீரர்களுக்கு 2000 ரூபா வீதம் விளையாட்டு புலமைப்பரிசில்களை வழங்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப்படும்.
- பாடசாலை மாணவர்கள் பாடசாலை கல்வியில் மட்டும் ஈடுபட்டுவருவதைத்தவிர்த்து அவர்களின் தேகாரோக்கியத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு. க.பொ.த.சாதாரணதர பரீட்சைக்கு ஒருவிளையாட்டு கட்டாயபாடமாக்கப்படும்.
- தேசிய மட்டத்தைச்சேர்ந்த விளையாட்டு வீரவீராங்கனைகளை சர்வதேசமட்டத்துக்கு கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டு பலதரப்பட்ட விளையாட்டு நிகழ்ச்சிகள் உள்ளடங்கும் வகையில் வருடத்திற்கு 50 விளையாட்டுவீரர்களுக்கு வெளிநாட்டு விளையாட்டுப் பயிற்சிக்கான புலமைப்பரிசில்களை வழங்கல்.
- விளையாட்டுகளில் திறமையுள்ள விசேடதேவைகள் உடையவர்களுக்கு அனுபவமுள்ள பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சியளித்து சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- பாடசாலை மட்டத்தில் விளையாட்டுகளை மேம்படுத்துவதற்காக ஒருவருடத்திற்குள் சகலவசதிகளையும் கொண்ட 100 பாடசாலை விளையாட்டுமைதானங்களை அபிவிருத்திசெய்வதற்காக 50மில்லியன் ரூபாவீதம் ஒதுக்கப்படும்.
- ஒருமாவட்டத்திற்கு குறைந்தது ஒருவிளையாட்டு மைதானம் என்றவகையில் சகலவசதிகளையும் கொண்ட ஒருவிளையாட்டு மைதானத்தைக் கொண்டவிளையாட்டுத் தொகுதியொன்று தாபிக்கப்படும்.
- ஒவ்வோர்அடிப்படை வைத்தியசாலையுடனும் இணைந்த விளையாட்டுக்கான சுகாதார பிரிவொன்றைத் தாபித்து சுகாதாரசேவை, கல்வி ஆகியவற்றை

பெற்றோர்கள், விளையாட்டுவீரர்கள், பயிற்சியாளர்கள், அமைப்பாளர்கள் ஆகியோருக்கிடையே விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும்.

- பாடசாலைமாணவர்கள், உயர்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்தமாணவமாணவிகள், நகர மற்றும் ஓரளவு நகரபிரதேச மக்களின் உடற் பயிற்சி வசதிகள் மேம்படுதுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- விளையாட்டு சங்கங்களில் பதவியேற்பதில் புதிய விளையாட்டு வீரவீராங்கனைகளுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் அதுபற்றிய சட்டங்களில் திருத்தங்கள் செய்யயப்படும்.
- விளையாட்டுவீரர்கள், விளையாட்டுத்துறை சார்ந்த தொழில்நுட்பவியலாளர்கள், விளையாட்டு முகாமையாளர்கள், பயிற்சியாளர்கள், விளையாட்டுப்போட்டி அமைப்பாளர்கள், விளையாட்டு உபகரணங்கள் தயாரிப்பாளர்கள், விளையாட்டுஊடகவியலாளர்கள் ஆகியோரை உருவாக்கவும் அவர்களுக்கு பயிற்சியளிக்கவும் தேசிய விளையாட்டு பாடசாலையொன்றை ஆரம்ப வருடத்திலும் விளையாட்டுக்கான தேசிய பல்கலைக்கழகமொன்றை மூன்று வருடங்களுக்குள்ளும் ஆரம்பிக்கப்படும்.

சுகாதாரத்திற்கான செலவுகளைக் கட்டுப்படுத்தும் முக்கியமான வழிநோயற்ற சரீரமுள்ள சமூதாயமொன்றை உருவாக்குவதாகும். உடற்தகைமையை மேம்படுத்துவதன ஊடாக ஆரோக்கியத்தை ஏற்படுத்துவது இதன ் முக்கிய நோக்கமாகும். அதற்காக

1. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் சகல வற்றிலும் உடற்பயிற்சி நிலையங்களை ஆரம்பிப்பதற்கு ஆலோசனைகள் வழங்கல ் மற்றும் ஊக்குவித்தல், 250 பேருக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய பணியாளர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு கட்டாயப்படுத்தப்படும்.
2. உடற் தகைமையை மேம்படுத்தும் 20,000 பயிற்சியாளர்கள் தற்போது எமது நாட்டுக்கு தேவைப்படுவதுடன எதிர்வரும ஐந்து வருடங்களுக்குள் அந்த இலக்கை அடைவதற்காக அரச மற்றும் தனியார்த்துறைக்கு உதவிகளையும ஊக்குவிப்பினையும் வழங்கல்.
3. உடற் தகைமையை மேம்படுத்தும் பயிற்சிகளுக்குத் தேவையான உபகரணங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை நீக்குதல்.
4. நலன்புரி சங்கங்கள், விளையாட்டு சங்கங்கள் போன்ற நாடலாவிய ரீதியில ் உள்ள சமூக அடிப்படைய அமைப்புகளுக்கு உடற் தகைமையை மேம்படுத்தும் நிலையங்களை ஆரம்பிப்பதற்காக 500 அமைப்புகளுக்கு 100,000 ஷரூபா வீதம் பெற்றுக்கொடுத்தல்.

# 05. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்

21 ஆம் நூற்றாண்டில் மனித இனத்தின் தலைவிதியும் பொருளாதாரமும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப விருத்தியில் முழுமையாக தங்கியுள்ளது. எமது நாட்டு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் பின்தங்கிய நிலைக்கு முக்கியகாரணம் எமது நாட்டு ஆட்சியாளர்களும், அவர்களுடன சேர்ந்தவர்களுக்கிடையே விஞ்ஞானத்தில் நம்பிக்கை இன்மையும் விஞ்ஞான நிபுணர்களைத் தவறான நோக்கங்களுக்கு ஈடுபடுத்திக் கொள்வதுமாகும். அரச நிறுவனத்துறையை ஒழித்தல் மற்றும் தாராள பொருளாதார முறையின் கீழ் விஞ்ஞானம், தொழில் நுட்பம் மற்றும் விஞ்ஞான நிபுணர்கள் பொருளாதார இலாப மீட்டும்வர்த்தக நோக்கத்துடன் பயன்படுத்தப்பட்டு வருகினறனர். மனித வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக்கூடிய விஞ்ஞாமும் தொழில்நுட்பமும் எமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் உருவாகியுள்ள போதிலும் அதன் ஊடாக எமது நாட்டு மக்களுக்கும் தேசிய பொருளாதாரத்திற்கும் மிகக் குறைந்தளவு பயன்களே கிடைத்து வருகின்றன. மருந்துகள், நவீன மருத்துவ விஞ்ஞானம் ஆகியவற்றின் ஊடாக மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பயன்கள்அரசாங்கத்தின் சுகாதார மற்றும் மருந்துகள் தொடர்பான தவரான கொள்கைகளால் கிடைக்காமல் போகின்றன. ஆட்சி புரிந்து வந்த ஆட்சியாளர்கள் விஞ்ஞானத்திற்கு சரியான இடத்தை வழங்கத் தவரிய காரணத்தாலேயே ரஜரட்ட பிரதேசததில் 30 வருடங்களாக நிலவிவரும் சிறுநீரக நோய்க்கு தீர்வுகாண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

விஞ்ஞானமும் பொருளாதாரமும் அபிவிருத்தி அடைவதற்கும் அதன் ஊடாக மனிதவாழ்க்கை மேம்படுவதற்கும் விஞ்ஞானத்திற்கும் தொழில்நுட்பத்திற்கும் முன்னுரிமை வழங்கும் அரசியல் மற்றும் பொருளாதார முறைமை தேவைப்படுகிறது.

நாட்டின் கல்வித்துறையில் காணப்படும் முறைசாரா கல்வி முறையும் பரீட்சைகளை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கல்வி முறையின் ஊடாக ஆய்வு, ஆராய்ச்சி, ஆக்கபூர்வ தகைமைகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமையும் விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்தி பின்தங்கிய நிலையில் இருப்பதற்கான காரணங்களாகும். பல துறைகளில் தொழில் புரிபர்களுக்கு அத்துத்துறை சார்ந்த ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக திட்டமொன்று அமைக்கப் படாமையினால் உயர் தொழில்நுட்ப அறிவுடைய தொழில் வல்லுநர்கள் உருவாகுவதற்கு தடையாகவுள்ளது.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அலுவல்கள் தொடர்பில் அரசினால் போதியளவு நிதி ஒதுக்கப்படாமை, பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு இல்லாமை, ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் புதிய ஆக்கங்கள் தேசிய பொருளாதாரத்தின் மேம்பாட்டுக்கும், மக்கள் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கும் அரசியல் வாதிகளால் கையாளப்படாமையினால் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் பின்தங்கிய நிலையில் உள்ளன.

## தீர்வுகள்

விஞ்ஞான, தொழில்நுட்பத்தை அபிவிருத்திசெய்தல், அத்துடன் தொடர்புடைய சகல வசதிகளையும் மேம்படுத்தல் போன்றவை அரசாங்கத்தின் முழுபொறுப்பாக கருதப்படுகின்றது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கையொன்றும் ஐந்தாண்டுத் திட்டமும்

செயற்படுத்தப்படும்.

மனித வாழக்கையுடன் தொடர்புடைய முக்கியமான எல்லா துறைகளுக்கும் விஞ்ஞான, தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதுடன் அண்ணியச் செலாவணியை ஈட்டுதல் உட்பட்ட முக்கிய இடங்கள் நவீன தொழில்நுட்பம் மற்றும் அபிவிருத்திக்கு வழங்கப்படும்.

## வழிமுறைகள்

- தற்போது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் உள்ள சகல நிறுவனங்கள் தொடர்பிலும் தற்போது தாபிக்கப்படாத நிலையில் உள்ள துறைகளைக் கவனத்திற்கொண்டு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு மீள்கட்டமைக்கப்படும். அமைச்சின்கீழ் இல்லாத பல்கலைக்கழகங்கள், வேறு அரச மற்றும் அறை அரச, தனியார் ஆய்வு மற்றம் அபிவிருத்தி நிறுவனங்களுடனும் அவற்றிக்கிடையே ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு தொடர்பில் பிரிவொன்று விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் தாபிக்கப்படும்.
- விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் புதிய நிறுவனகட்டமைப் பொன்றை தாபிப்பதுடன் அவை பின்வரும் நிறுவனங்களைக் கொண்டதாக அமையும்.

### (அ) தேசிய மரபுரிமைகள் பற்றிய ஆணைக்குழு

எமது பழம்பெரும் மற்றும் பாரம்பரிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவைத்தேடுதல், அவற்றை எழுத்து மூலமும், இலத்திரணியல் ஊடக மூலமாகவும் பாதுகாத்தல், பழங்கால அறிவையும், விதி முறைகளையும் கற்பித்தல், அவை பற்றிய புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், அந்த அறிவை நவீன தொழில்நுட்ப அறிவுடன் சேர்த்து அபிவிருத்தி செய்வதும் இங்கு நோக்கமாகும்.

### (ஆ) விஞ்ஞான விஸ்தரிப்பு ஆணைக்குழு

முறைசார் நிறுவன கற்கை நெறிமாணவர்களுக்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொடுப்பதுடன் தொடர்புடைய வழிகாட்டல் மற்றும் சமூகத்தில் பொதுவாகக் காணப்படும் தவரான எண்ணங்களைத் தவிர்ப்பதற்கு முயற்சித்தல் சமூகத்தில் அனைவருக்கும் தேவையான அடிப்படை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்ளுதல், உற்பத்தி மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மேலதிக விஞ்ஞான அறிவைப் பெற்றுக்கொடுப்பதும் நோக்கமாகும்.

### (இ) தேசிய விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனம்

நாட்டின் பாரியளவிலான உற்பத்திச்செயல் முறைக்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்கள், விசாயம், கால்நடைவளர்ப்பு, கடற்றொழில் மற்றும் கைத்தொழில் துறைக்குத் தேவையான இயந்திர சாதனங்களை உற்பத்திசெய்தல், அபிவிருத்திசெய்தல், புதிய விஞ்ஞான அறிவை அபிவிருத்தி செய்தலும் நோக்கமாகும்.

## (ஈ) பொதுப்பயன்பாடுகள் தொழில்நுட்ப அபிவிருத்தி நிலையம்

மக்களின் நாளாந்த தேவைகளுக்கும் மற்றும் வதிவிட வாழ்க்கைக்கும் அவசியமான உபகரணங்களையும் சேவைகளையும் மேம்படுத்துவதும், இவற்றின் பாவனை பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுப்பதும், சிக்கனமான, இலாபகரமான, வினைத்திறன் வாய்ந்த, இலகுவான, சுற்றாடல் நேயமான வீட்டு உபகரணங்களை உற்பத்தி செய்வதும் இதன் நோக்கமாகும்.

## (எ) புத்தாக்குநர் ஆணைக்குழு

பாடசாலைக் கல்வியிலும் மற்றும் பல்கலைக்கழகக் கல்வியிலும் ஈடுபடுகின்ற மாணவர்களையும் அதே நேரம் பொது மக்களையும் நவீன விஞ்ஞான ரீதியான பரீட்சயங்கள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பவற்றின் பால் ஊக்குவிப்பதும், புத்தாக்குநர்களின் ஆக்கங்கங்களை அபிவிருத்தி செய்து, வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்வதற்கு ஊக்குவிப்பதும், புத்தாக்குநர்களுக்கு மேலதிகக் கல்விக்கான அனுசரணையை வழங்குவதும், புத்தாக்குநர்களைப் பதிவு செய்து அவர்களுக்கு அவசியமான உள்நாட்டு வெளிநாட்டுப் பயிற்சிகளையும், கல்வியையும், நிதி மற்றும் தொழில்நுட்ப அனுசரணையையும் பெற்றுக்கொடுப்பதும் இதன் நோக்கமாகும்.

- விஞ்ஞானக் கல்வியைப் பிரபல்யப்படுத்தும் பொருட்டு தேவையான சகல அனுசரணைகளையும் வழங்கி, அதன் கீழ் விஞ்ஞான இலக்கிய விருதுகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கும், விஞ்ஞான எழுத்தாளர்களுக்கு உதவுவதற்கும், ஏனைய மொழிகளில் வெளியிடப்படும் விஞ்ஞானக் கல்வி நூல்களை உள்நாட்டு மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கும், நவீன விஞ்ஞான இலக்கிய நூல்களைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
- கட்டாய சூழ்நிலையில் இரண்டாம் நிலைக் கல்வியின் பின்னர் பாடசாலையை விட்டு விலகிச் செல்பவர்களுக்கு சாதாரண மட்டத்திலான பாடநெறிகள் முதல் தொழில்நுட்பம் பற்றிய பட்டப்பின்படிப்பு வரை பரந்தளவில் காணக்கூடிய தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழில்நுட்பப் பாடசாலைகள் மற்றும் உயர் தொழில்நுட்பக் கல்லூரிகள் அடங்கிய ஒரு கல்வி வலையமைப்பைத் தாபித்தல்.
- தற்பொழுது பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கின்ற கல்விமான்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கல்வியலாளர்கள் ஆகியோரின் சேவையை நாட்டிற்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஒரு விஷேட நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

- ஏனைய நாடுகளுடன் விஞ்ஞான தொழில்நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கூட்டு ஆராய்ச்சிக் கருத்திட்டங்களையும் ஆரம்பித்தல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களுக்கும், விவசாயம், கடற்றொழில் போன்ற நடுத்தர அளவான கைத்தொழில்களுக்கும் புதிய விஞ்ஞான அறிவை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கையை எடுத்தல்.
- ஒவ்வொரு அமைச்சிலும் ஒரு விஞ்ஞான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவை நியமித்தல்.
- சுற்றாடல் மாசடைவதைத் தவிர்ப்பதற்கும் மற்றும் வீண்விரயமாகும் வளங்களிலிருந்து உரிய பலன்களைப் பெறுவதற்கும் இலக்குக்கொள்ளப்பட்ட நாடளாவிய மீள்சுழற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- அரசாங்க சேவையை முடிந்த வரை கணனிமயப்படுத்தி, இன்டர்நெட் வசதியின் மூலம் தேவைகளை நிறைவேற்றக்கூடிய நிலையை உருவாக்குதல்.
- இன்டர்நெட் வசதியை இலவசமாக வழங்கும் வேலைத்திட்டங்களை நாடு முழுதிலும் நடைமுறைப்படுத்தல்.
- எதிர்காலத்தில் மிகவும் கவனம் செலுத்தப்பட வேண்டிய இயற்கை வளங்கள் மற்றும் குறிப்பாக சுற்றாடல்நேய பொருட்கள் மைய உற்பத்திகள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பூரண அனுசரணையை வழங்கி, அவற்றை உற்பத்தியின் போது கனிய எண்ணெய் குறைந்தளவு பயன்படுத்தப்படும் கைத்தொழிற்சாலைகளுக்கு அதிக முன்னுரிமைகளை அளித்தல். தாவரங்கள் அடங்கலாக இயற்கை மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திகளை இலங்கைக்கு அதிக அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் நிலைக்குக் கொண்டுவருதல்.

# நவீனமயமாக்கலும் கைத்தொழில்மயமாக்கலும் கொண்ட ஓர் நாடு

## 01. பொருளாதாரத் துறை

நாம் சுவாசிக்கும் வளி, உண்ணும் உணவு, பருகும் பானம், விவாகம், தொழில், கல்வி, சுகாதாரம் அடங்கிய சகல அம்சங்களும் தீர்மானிக்கப்படுவது பொருளாதாரத்தின் அடிப்படையிலாகும். 1948 ஆம் ஆண்டிற்கு முன்னர் பல நாடுகளின் கீழ் நேரடியாக காலனித்துவ நாடாக இருந்தும், அன்றிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை அதிகார வர்க்க நாடுகளுக்கு அடிமைப்பட்டும், அதன் பின்னர் திறந்தய சந்தை பொருளாதாரம் பல்வேறு தன்மைகளில் இயங்கி வந்ததோடு இன்று பாரிய நெருக்கடிக்கு சென்றுள்ளது. இது வரை இலங்கையை ஆட்சி செய்த நிருவாகிகளின் சுரண்டல் பொருளாதாரக் கொள்கைகளுக்கு மத்தியில் பின்னடைவுக்குத் தள்ளப்பட்டுள்ள இலங்கை கடன் மற்றும் வரி ஆகியவற்றின் அடிப்படையில் தங்கியிருக்கும் பொருளாதார நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தாவிப்பாயும் அரசாங்கத்தின் கீழ் எமது நாடு அபிவிருத்தியற்ற நிலையின் விழிம்புக்குத் தள்ளப்பட்டது மாத்திரமன்றி, இன்று வரை 800,000 கோடி அல்லது 8000 பில்லியன் ரூபா தொகையான அரச கடன் சுமை எம்மீது திணிக்கப்பட்டுள்ளது. தனிநபர் கடன் சுமை ஏறக்குறைய நான்கு இலட்சம் அளவில் காணப்படுகின்றது. உற்பத்தி சார்ந்த ஒரு பொருளாதார முறைமை ஏற்படுத்தப்படாமையின் விளைவாக, உற்பத்தி வீழ்ச்சியடைந்து, ஏற்றுமதி வருமானம் மிகவும் குறைந்த அளவில் காணப்படுகின்றது. அதன் காரணமாக ஏற்றுமதி வருமானம் போல் இரண்டு மடங்குகளை செலவு செய்து எமக்கு இறக்குமதி செய்ய நேர்ந்துள்ளது. இறுதியில், நாடு தொடர்ச்சியாக பாரிய வர்த்தகப் பற்றாக்குறைக்கும் நிதி நெருக்கடிக்கும் முகம்கொடுத்து வருகின்றது.

மொத்த அரசாங்க வருமானத்தினுள் வரி வருமானம் 90சதவீதமான அளவில் காணப்படுகின்றது. இதன் காரணமாக பொதுமக்களுக்கு அதிகளவான வரிச்சுமையைச் சுமப்பதற்கு நேர்ந்துள்ளது. பொருளாதாரத்தில் பாரியளவான அரசாங்க நிறுவனமாகக் காணப்படுகின்ற இலங்கை மின்சார சபை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், துறைமுகம், ரெலிகொம், விமாநிலையம், நீர் வழங்கல் சபை, வர்த்தக வளங்கள் போன்ற நிறுவனங்களிலிருந்து கிடைக்கக் கூடிய இலாபம் கிடையாமல் இவற்றில் பெருமளவு ஊழல், இலஞ்சம் மற்றும் மோசடிகள் நிகழும் நிறுவன நிலைக்குத் தள்ளப்பட்டது மாத்திரமன்றி, தேசிய பொருளாதாரத்திற்கும் மக்களுக்கும் சுமையாகவும் காணப்படுகின்றது.

உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளில் வீழ்ச்சி ஏற்பட்டமையாலும் அரச மற்றும் தனியார் துறைகளில் சரியான முகாமைத்துவம் இல்லாமல் இருக்கின்றமையாலும் உற்பத்தித் துறை வீழ்ச்சி அடைந்துள்ளது. அதன் காரணமாக பொருட்களினதும் சேவைகளினதும் விலை அதிகரித்தல், தொழிலில்லாப் பிரச்சினைகள் அதிகரித்தல் மற்றும் சிரமம் சுரண்டப்படும் நிலை அதிகரித்தல் என்பன மிகப் பெரிய பிரச்சனைகளாகக் காணப்படுகின்றன. இலங்கையின் பொருளாதாரம் நாளுக்கு நாள் நெருடிக்கடியை எதிர்நோக்கிய வண்ணமுள்ளது.

## தீர்வுகள்

நாட்டில் காணப்படுகின்ற வெற்றியளிக்காத திறந்த வர்த்தக சுரண்டல் பொருளாதாரக் கொள்கைகளுக்குப் பதிலாக புதிய சமவுடமைக் கொள்கையின் அடிப்படையில் அமைந்த, பொருட்கள் உற்பத்திற்கும் சேவைகளுக்கும் முன்னுரிமை அளிக்கின்ற உற்பத்தி சார்ந்த ஒரு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பல். அதன் நிமித்தம் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெற்று, பொருளாதார நன்மைகளை மக்கள் மத்தியில் நியாயமான முறையில் பகிர்ந்து செல்வதை எமது முழுமொத்தப் பொருளாதாரத் திட்டத்தினூடாக உறுதிசெய்தல்.

மனித வளங்களை உயர்ந்த அபிவிருத்திப் பொருளாதாரத்தின் முக்கிய உபாயத்திட்டமாக மாற்றுதல்.

# 02. கைத்தொழில்

நீண்டகால இலக்குக்கொண்ட கைத்தொழில் சார்ந்த ஒரு வேலைத்திட்டம் இல்லாமையினால் இலங்கையின் கைத்தொழில் துறை இன்னும் மிகவும் அபிவிருத்தி குன்றிய நிலையிலேயே காணப்படுகின்றது. கைத்தொழிலில் காணப்படுகின்ற அபிவிருத்தியின்மையினால் சட்டை ஊசி தொடக்கம் சகல பொருட்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் அளவுக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. பல தசாப்தங்களின் பின்னர் இலங்கைக்கு என்றே பிரத்தியேகமான நன்மையுடைய ஒரு கைத்தொழிலைக் கட்டியெழுப்ப முடியவில்லை. அது மாத்திரமன்றி உள்நாட்டு சந்தையை இலக்காகக்கொண்டு செய்யக்கூடிய உற்பத்திகள் உற்பத்தி செய்யப்படாமை மற்றும் வெளிநாட்டு சந்தையை இலக்காகக்கொண்டு பயனுள்ள கைத்தொழில்களில் அரசாங்கம் முதலீடு செய்யாமை போன்ற காரணங்களினால் கைத்தொழில் சீரழிந்து வீழ்ச்சி நிலையில் காணப்படுகின்றது.

## தீர்வுகள்

கைத்தொழிலைக் கட்டியெழுப்பும் போது மக்கள் பங்கேற்பிலான கைத்தொழில் கொள்கையொன்றையும் கைத்தொழிலை கிராமங்களுக்குக் கொண்டுசெல்லும் கொள்கையொன்றையும் தயாரித்தல்.

சகல உற்பத்திப் பிரிவுகளினதும் உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் மேம்படச்செய்து, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளையும்" வெளிநாட்டுத் தொழில்நுட்ப அறிவையும் பெற்றுக்கொண்டு அரச மற்றும் தனியார் துறைகளில் புதிய கைத்தொழில்களை ஆரம்பித்து, தற்பொழுதிருக்கின்ற கைத்தொழில் முறைமையை படிப்படியாக அறிவுபூர்வமானதாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கையை எடுத்தல்.

## வழிமுறைகள்

- உற்பத்தி சார்ந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் போது அரச துறையையும் தனியார் துறையையும் பங்கேற்கச் செய்தல்.
- உற்பத்தி சார்ந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பணியில் பங்கேற்கும் தனியார் துறைக்கு முதல் ஐந்து வருடத்தினுள் வரிச் சலுகையையும் ஏனைய வசதிகளையும் உறுதிசெய்தல்.
- கைத்தொழில்மயமாக்கலில் முதல் கட்டமாக உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்யும் பொருட்டு கைத்தொழிற்சாலைகளை ஆரம்பித்தல்.
- கைத்தொழில் அபிவிருத்தியில் தற்பொழுது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கின்ற ஆயினும் இறக்குமதி செய்யப்படுகின்ற கைத்தொழில் சார்ந்த உற்பத்திகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் இலக்கைக்கொண்ட இறக்குமதி மாரிதிக் கைத்தொழில்களை ஆரம்பித்து, ஏற்றுமதியை இலக்காகக்கொண்ட புதிய ஒரு முறைமையை ஏற்படுத்தல்.
- இடத்துக்கிடம் தொழிற்சாலைகளை முறையற்ற விதத்தில் தாபிப்பதற்குப் பதிலாக மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளுதல், உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்ளுதல், ஊழியத்தைப் பெற்றுக் கொள்வதில் உள்ள இலகு, கழிவுகளை அகற்றல் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான பிரதேசங்களில் கைத்தொழில் வலயங்கள், கைத்தொழில் பூங்காக்கள், சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில் குடியேற்றங்கள் அமைக்கப்படும்.
- நாட்டினுள்ளும் இலங்கையின் கடல் எல்லையினுள்ளும் இருக்கின்ற இயற்கை வளங்கள் பற்றி முழுமையான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுவதுடன் மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக பூர்த்தியடைந்த பொருட்களை உற்பத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- புதிய தொழில்நுட்பம், முகாமைத்துவம் மற்றும் முதலீடு நாட்டின் கைத்தொழில் மயமாக்கல் செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்திக் கொள்வது தொடர்பாக வெளிநாட்டு அரசாங்கங்களுடன், நிறுவனங்கள் மற்றும் கம்பனிகளுடன் ஒருங்கிணைந்து செயற்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- நாடு கைத்தொழில் மயமாதல் தொடர்பாகத் தேவையான இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்வது தொடர்பாக இரசாயனக் கைத்தொழில்களை உருவாக்குதல். அதன் கீழ்

- வெளிநாட்டு செலாவாணியை சேமித்துக் கொள்வதற்கும் தொழில் உருவாக்கத்திற்கும் விவசாயச் சமுகத்தின் நடைமுறை வளமாக்கி விலையிலும் பார்க்க அரைவாசிக்கு அண்மித்த குறைந்த விலையில் வளமாக்கிகளை வழங்குவத்தையும் குறிக்கோளாகக் கொண்டு எப்பாவள பொஸ்பேட் படிமத்தை அடிப்படையாகக் கொண்டு சுப பொஸ்பேட் கைத்தொழில் சாலையொன்று ஆரம்பிக்கப்படும்.

- இலங்கையில் அனேகமான கைத்தொழில்கள் தொடர்பாக தேவையான சல்பியுரிக் அமிலத்தை உற்பத்தி செய்கின்ற கைத்தொழிற்சாலையினை தொடங்குதல்.

- எமது நாட்டினுள் இதற்கு முன்னர் காணப்பட்ட தற்பொழுது செயற்பாடற்று இருக்கும் காங்கேசன்துறை சீமேந்து கைத்தொழற்சாலையினையும் இலக்ரோனிக் கைத்தொழிலுக்கு தேவையான மொனசைட்டை உற்பத்தி செய்வது தொடர்பாக பேருவளைப் பிரதேசத்தில் உள்ள மொனசைட் அகழ்தெடுத்தல் கைத்தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கும் இலங்கையில் உள்ள கைத்தொழிற்சாலைகளுக்குத் தேவையான இரும்பினை உற்பத்தி செய்வதற்கு இருந்த எந்தேரமுள்ளையில் இருந்த சிதைவடைந்த இரும்பினை கைத்தொழற்சாலையில் புதிய அடிப்படையில் மீள ஆரம்பிக்கப்படும்.

- இலங்கையில் பற்பசை உற்பத்தி தொடர்பாக வருடாந்தம் கல்சியம் காபனேட் 100,000 டொன் இறக்குமதி செய்யப்படுகின்றது. அதற்குப் பதிலாக அது தொடர்பாகத் தேவையான கல்சியம் காபனேட் உற்பத்தி தொடர்பாக பயன்படுத்தக் கூடிய பலங்கொடைப் பிரதேசத்தில் உள்ள சல்பேற்று படுக்கையினை பயன்படுத்தி கல்சியம் காபனேட் உற்பத்தி கைத்தொழிற்சாலையொன்று ஆரம்பிக்கப்படும்.

- இலங்கையில் உள்ள மிகவும் தூய்மையான காரியப் படுக்கையினை பயன்படுத்தி பற்றி இலக்ரோடர், மோட்டார் வாகனங்கள் மற்றும் ருசிபல் தொடர்பாகத் தேவையான காபன் தூரிகைகள் மற்றும் பென்சில் உற்பத்தி கைத்தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும்.

- விவசாயம் மற்றும் மீன் பிடிக் கைத்தொழிலை கைத்தொழில் மயப்படுத்தலை இலக்காகக் கொண்டு உள்ளீட்டு இணைப் பொருள் உற்பத்தி செய்கின்ற கைத்தொழில் கட்டமைப்பொன்று ஆரம்பிக்கப்படும்.

- மீள் சுழற்சி உள்ளடங்கலாக கழிவு முகாமை விசேட மற்றும் அத்தியவசிய செயற்பாடொன்றாக கருதப்படுவதுடன் பயன்படுத்தக் கூடிய சகல துறைகளிலும் புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி அல்லது இரண்டாம் நிலை உற்பத்திகளை ஏற்படுத்துவதற்கு தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்படும்.

- தேசிய கைத்தொழில் உற்பத்திகளை மேம்படுத்தும் நோக்கத்திற்கு தடையாக மேற்கொள்ளப்படும் கைத்தொழில் பொருட்களின் இறக்குமதிகளுக்குப் பதிலாக தேசிய உற்பத்திக்கு உச்ச பாதுகாப்பை வழங்குகின்ற இறக்குமதிக் கொள்கையொன்று அமுல்படுத்தப்படும்.

- தேசிய கைத்தொழில்களுக்கு பாதகமான விதத்தில் தற்பொழுது உடன்பட்டுள்ள சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பாக மீள் பரிசீலனைக்கு உட்படுத்துவதுடன் தேசிய கைத்தொழில்களின் வளர்ச்சிக்கு சாதகமான புதிய உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்படும்.

- வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவராலயங்களில் உள்ள ஏற்றுமதி மேம்பாட்டு பணியகங்களை அமைத்து தேசிய ஏற்றுமதி கைத்தொழில் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படும்.

- தெரிவு செய்யப்பட்ட துறைகள் சில தொடர்பாக பாரிய அளவான கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விசேட சலுகைகளை வழங்குவதற்கும் அவ்வாறான கைத்தொழில்களாக மருந்து, வைத்திய உபகரணங்கள், இலத்திரனியல் பொருட்கள், கணினி வன்பொருள், கப்பல், வாகன கோர்ப்புச் செய்தல் மற்றும் உற்பத்தி, இயந்திர சாதன உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- கைத்தொழில்களை நடாத்திச் செல்வதற்குத் தேவையான மின்சாரம், நீர் வசதிகள், வெள்ளத்திலிருந்து பாதுகாப்புப் பெறல், கழிவு நீரினை சுத்திகரிப்புச் செய்தல், திண்ம கழிவுப் பொருட்களை முகாமை செய்தல் உள்ளடங்கலாக சகல விடங்களையும் வழங்கும் வகையில் வாணிப வங்கி, சுங்கத் திணைக்களம், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலை போன்ற சேவைகளையும் உள்ளடக்கியதும் துறைமுகம் மற்றும் விமான நிலையங்கள் மற்றும் ஏனைய போக்குவரத்து வசதிகளுடன் கூடிய கைத்தொழில் நகரங்களை உருவாக்குதல்.

- விசேடமாக சுற்றாடல் நலன் மற்றும் அருகல் அடையாத மூலப்பொருட்கள் (கழிவுகள், தாவர ரீதியான பொருட்கள், களிமண், கிரபைட்) மற்றும் நவீன தொழில்நுட்பம் (புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி, நனோ, அணு சக்தி, உயிரின விஞ்ஞானம்) பயன்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர அளவான 1000 கைத்தொழில்களை முதல் ஐந்து வருடங்களின் போது மேம்படுத்துவதற்கும் அவற்றின் மூலமான உற்பத்திகளை தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளில் பிரபல்யப்படுத்துவதற்கும் நன்கொடை மற்றும் அனுசரைண வழங்கப்படும்.

- மூலப்பொருட்கள் தொடர்பாக உற்பத்தியாளர்களை அறிவுறுத்துவதற்கு தகவல் பரிமாற்றத்தை இலக்கு வைத்து தரவுத் தள நிலையமொன்றை தாபித்தல்.
- தேசியமற்றும் சர்வதேச சந்தைவாய்ப்புக்களை உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்கள் முகங்கொடுக்கின்ற பிரதான பிரச்சினையான உற்பத்திகளின் பண்புசார் தரத்தினை மேம்படுத்துவது தொடர்பாக தேவையான நவீன தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான அறிவினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவான உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் நிதி நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்ற போது முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளை குறைப்பதற்கு கைத்தொழில் அமைச்சில் புறம்பான அலகொன்று அமைக்கப்பட்டுள்ளது.

## 03. விவசாயம்.

களஞ்சிய மற்றும் ஏனைய அறுவடைக்குப் பின்-தொழில்நுட்ப வசதிகள் பற்றாக்குறை, இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபாடாமையினால் பயனுள்ள சிரமம் குன்றிச் செல்லல் மற்றும் அரசாங்கத்தின் தலையீட்டில் மேம்பட்ட ஒரு சந்தை வாய்ப்பு ஏற்படுத்தப்படாமை முக்கியமான பிரச்சினைகளில் அடங்குகின்றன.

காலநிலை மாற்றங்கள், மண்ணரிப்பு, நிலச்சரிவு, நீர் மாசடைவு, வரட்சி, வெள்ளப் பெருக்கு மற்றும் விவசாயக் காணிகள் ஏனைய நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுதல் போன்ற இயற்கையினாலும் செயற்கையினாலும் ஏற்படுகின்ற அழிவுகளைத் தவி ர்க்கும் நிமித்தம் சரியான நடவடிக்கைகள் காணக்கூடியதாகவில்லை. காட்டு யானைகள், குரங்குகள், பன்றிகள், இத்தியான்கள், மயில்கள் போன்ற விலங்கு இனங்களின் ஆக்கி ரமிப்பின் காரணமாக விவசாயிகள் பயிரிடும் காணிகளை மாத்திரமன்றி வீட்டுத் தோட்டப்பயிர்ச் செய்கையையும் கைவிடுகின்றனர்.

விவசாயத் துறையில் பாரிய அளவான அரசாங்க அல்லது தனியார் முதலீட்டாளர்கள் இல்லாமை, வினைத்திறன்வாய்ந்த ஒழுங்கமைப்பட்ட சேவைகள் இல்லாமை, விவசாயப் பயிர்கள் பல்லினப்படுத்தப்படாமை என்பன கடுமையான பிரச்சினைகளாகக் காணப் படுகின்றன. விவசாய உற்பத்திகளுக்கு உத்தரவாத விலை இல்லாமை, நுகர்வோருக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயமில்லாமை, விவசாயி மற்றும் நுகர்வோர் ஆகிய இரண்டு தரப்பினர்களும் அநீதிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். விவசாய உற்பத்தியில் சுற்றாடல் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றுக்கு ஏற்படும் பாதிப்புகளை சரியான முறையில் தடுப்பதற்கு ஒரு வேலைத்திட்டம் காணக்கூடியதாகவில்லை.

## தீர்வுகள்

விவசாயம், கால்நடை, மீன் வளர்ப்பு மற்றும் பகிர்ந்தளிப்பு ஆகியவற்றை அரசாங்கத்தின் பொறுப்பாக ஆக்குதல். உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதித் தேவைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேசிய விவசாயக் கொள்கையையும் ஒரு வேலைத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தல். அரசாங்க, தனியார் மற்றும் கூட்டுறவு முதலிய பிரிவுகளை விவசாயத்தில் பங்களிக்கச் செய்தல். உள்நாட்டு உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், தங்கியிருக்கும் அளவை விஞ்சிய விவசாயத் தொழில்முயற்சியை உருவாக்குதல், இறக்குமதி செய்யப்படும் உணவு வகைகள் மற்றும் விவசாய உள்ளீட்டுப் பொருட்கள் என்பவற்றை ஒழுங்குறுத்தி, உள்நாட்டு உற்பத்திகளின் கேள்வியையும் சுற்றாடல் பாதுகாப்பையும் உறுதிசெய்தல. விவசாய உற்பத்திகளின் ஏற்றுமதியிலிருந்து கிடைக்கும் வருமானத்தை பல மடங்குகளால் அதிகரித்தல், பயனுள்ள ஆராய்ச்சி வியாபிப்பு நடவடிக்கைகளை முறைப்படுத்தல், விவசாய உற்பத்திகள், பகிர்ந்தளிப்பு சம்பந்தமான மனித வளங்களை மேம்படச்செய்தல்.

## வழிமுறைகள்

- விவசாயத்தை பொருளாதாரத்தின் முக்கியமான ஒரு பிரிவாகக் கருதி நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்ட ஒரு கைத்தொழில்மயமாக்கத்தை உருவாக்குதல்.
- விதைகளின் உரிமை விவசாயிகளுக்குரியதாகும். விதை ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் விதைப் பண்ணைகள் என்பவற்றைக் கட்டியெழுப்புதல், விதை உற்பத்தி விவசாயிகள் வலையமைப்பு ஒன்றைத் தாபித்தல். புதிய மேம்படுத்தப்பட்ட விதை இனங்கள் மற்றும் உள்நாட்டுக் கலப்பு விதை இனங்கள் என்பவற்றை உற்பத்தி செய்து விவசாயிகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கும் கலப்பு விதை இனங்களை பொதியிடும் தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
- விவசாய உள்ளீடுகளின் தரத்தை உறுதிசெய்வதற்கும் மற்றும் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்குமான ஒரு அசராங்கப் பொறிமுறைத்திட்டத்தைத் தயாரித்தல்.
- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட இடை நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கைத்தொழில் தொகுதியொன்று ஆரம்பிக்கப்படும்.
- விவசாயம், விலங்கு வேளாண்மை, மீன்பிடிக் கைத்தொழில் என்பவற்றில் ஈடுபட்டுள்ள ஆட்களை அவர்கள் தற்போது அனுபவித்து வரும் கடன் சுமைகளிலிருந்து விடுவிப்பதற்கு அரசாங்கத் தலையீடுகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் கைத்தொழில்களுக்கு அவசியமான தொழில்நுட்ப உதவி, நிதி

முகாமை என்பன தொடர்பான கல்வி உட்பட புதிய சலுகைக் கடன் திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப்படும்.

- நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்காகவும் பல்வேறு காலநிலைகளின் அடிப்படையிலும் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள ஆய்வு நிலையங்களுத் தேவையான பௌதிக வளங்களும் மனித வளங்களும் வழங்கப்படும். தேவையான இடங்களில் புதிய பிரதேச ஆய்வு நிலையங்கள் நிறுவப்படும்.
- அதிக விளைச்சல் தரும் விதை வகைகளை உற்பத்தி செய்வதற்காக உள்நாட்டு ஆய்கூடங்களின் உதவிபெறப்பட்டு, வெளிநாட்டு விதைச் சந்தை தனியுரிமையை வீழ்த்தக் கூடிய விதத்தில் உள்நாட்டு விதை உற்பத்தி அபிவிருத்தி செய்யப்படும்.
- மரபணுக் கொள்ளையைத் தடுத்தலும் எமது நாட்டுக்கே உரித்தான விதைகளின் மரபணுக்களுக்கான காப்புரிமையை இலங்கை அரசாங்கத்திற்குப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- விவசாய இரசாயனங்களின் தரநியமம், உற்பத்தி, விற்பனை, விளம்பரம் என்பவற்றுடன் தொடர்புடை பிரச்சினைகளுக்குப் பொறுப்பான தேசிய கட்டுப்பாட்டு அதிகார சபையொன்று தாபிக்கப்படும்.
- யூரியா உள்ளிட்ட அத்தியவசிய உர வகைகளை உற்பத்தி செய்வதற்காக அரசாங்க உர உற்பத்திக் கம்பனியொன்று தாபிக்கப்படும்.
- நடமாடும் மண் பரிசோதனைக் கூடங்களை நிறுவி அவற்றின் மூலம் பிரதேசங்களின் மண்களைப் பரிசோதித்து அவற்றுக்குப் பொருத்தமான பயிர்களும் விவசாய உள்ளீடுகளின் அளவும் தீர்மானிக்கப்படும்.
- சேதன மற்றும் அசேதன பசளைகளை இடும் செயற்பாட்டை ஒழுங்குபடுத்தி சேதனப் பசளை உற்பத்தி ஒரு கைத்தொழிலாகப் பிரபல்யப்படுத்தப்படும்.

  அறுவடைக்குப் பின்னர் வீண் விரயத்தைக் குறைப்பதற்குத் தேவையானபொதிசெய்தல், போக்குவரத்து, குளிரவைக்கும் கூடங்கள், களஞ்சியங்கள் போன்ற புதிய தொழில்நுட்பங்கள் மக்களின் பங்கேற்புடன் அறிமுகப்படுத்தப்படும்.
- யூரியா மற்றும் அத்தியவசிய உர வகைகள் அனைத்தும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படும்.
- விலங்குகளால் ஏற்படும் அழிவுகளைக் குறைப்பதற்காக விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றுடன் தொடர்புடைய தொழில்நுட்பங்களை விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்துதல்.
- பிரதேச மட்டத்தில் விவசாய விற்பனை நிலைய வலையமைப்பொன்று அரசாங்கத்தின் தலையீட்டின் மூலம் ஆரம்பிக்கப்படும்.
- அலங்காரப் பூச் செய்கை பூச்செடி வளரப்பு என்பன ஏற்றுமதிச் சந்தைகளை

இலக்காகக் கொண்டு அபிவிருத்தி செய்யப்படும். அத்துடன் பூச் செய்கை மற்றும் பூச்செடி வகைகளை ஏற்றுமதி செய்வதை இலக்காகக் கொண்ட அரசாங்க விவசாயப் பண்ணையொன்று நிறுவப்படும்.

- விவசாயக் காப்புறுதி முறையொன்றும் விவசாயக் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம் இற்றைப்படுத்தப்பட்டு பலப்படுத்தப்படும். விவசாயிகள் ஓய்வூதிய முறையின் மூலம் விவசாயிகளுக்கு உச்ச அளவிலான பயன்கள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- சுகாதாரத்திற்கும் உயிர்க் கோலத்திற்கும் தீங்கு விளைவிக்காத மற்றும் பயனுறுதி வாய்ந்த தொழில்நுட்ப முறைகளை விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்துவது அரசாங்கத்தின் முன்னுரிமை வழங்கப்படும் பொறுப்பாக அமையும்.
- விவசாயக் கைத்தொழிலுக்கான நீர் முகாமை மற்றும் நீர்ப் பாதுகாப்பு என்பவற்றுக்காக அமைக்கப்பட்டுள்ள பல்வேறு நிறுவனங்களைக் ஒருங்கிணைத்து விவசாயிகளின் ஒத்துழைப்புடன் புதிய நீர் முகாமைத்துவ முறையொன்று உருவாக்கப்படும். மழை நீரைச் சேகரித்து வைத்தல், மிகச் சிறிய மற்றும் பரவலாக்கல் தொகுதிகள் போன்ற நவீன நீர்த் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு அறிமுகம் செய்யப்படும்.
- முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் வெளிநாட்டுச் சந்தைகளின் அனுபவத்தைப் பெறுவதற்காக வருடத்திற்கு ஆயிரம் விவசாயிகள் என்ற அடிப்படையில் விவசாயிகள் அனுப்பப்படுவர்.
- ஒவ்வொரு வீடும் அமைந்துள்ள காணியின் பரப்பின் அடிப்படையில் அதிக பெறுமதியைக் கொண்ட பலகைகளைப் பெறக்கூடிய மர வகைகளை நடுவதற்கு விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக்கள் வழங்கப்படும்.
- உயர் பெறுமதியைக் கொண்ட ஏற்றுமதித் தரத்திலான விவசாய உற்பத்திகளை வெற்றிடத் தொழில்நுட்பத்தின் ஊடாகப் பொதிசெய்து தயார்படுத்துவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

## 04. கால்நடைகள்

குறிப்பாக அரசாங்கத்தின் தலையீடு குறைவாகக் காணப்படுவதன் காரணமாக கால்நடைகள் துறையில் பாரிய அபிவிருத்தியை அடையப் பெற முடியாதுள்ளது. வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதிலும் இத்துறையின் பங்களிப்பைப் பாரியளவில் பெறக்கூடியதாக இருந்த போதிலும் இன்று வரையில் நாம் அந்த இலக்குகளை அடையத் தவறியுள்ளோம். பாலை அடிப்படையாகக் கொண்ட நுகரப்படும் உற்பத்திகளில் 65மூ இறக்குமதி செய்யப்படுகின்றன. அதற்காக வருடாந்தம் 40,000 மில்லியன் ஷரூபா

செலவிடப்படுகின்றது. பண்ணை விலங்குத் துறைக்கான நடுத்தரக் கால திட்டமொன்றோ தொழிற்பாடோ இல்லாமையினால் அத்துறை ஒழுங்கின்றிக் காணப்படுகின்றது. அதனால் செலவுகள் அதிகரித்துக் காணப்படுவதுடன் குறைந்த விலையில் விற்க வேண்டியிருப்பதனாலும் பால், இறைச்சி, முட்டை மற்றும் அவற்றைப் பயன்படுத்திச் செய்யப்படும் உணவு வகைகள் வீண் விரயமாவது ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது.

தனி நோக்க மற்றும் இரட்டை நோக்க உயர் தரத்திலான உற்பத்தி விலங்குகள் காணப்படாமையும் அத்தகைய விலங்குகளை உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாமல் இருப்பதும் ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. கால்நடைகளைப் பராமரிப்பதற்கான விரிவாக்கற் சேவைகள் காணப்படாமையும் மிருக வைத்திய சேவைகள் காணப்படாமையும், அதனால் முன்னேற்றகரமான தொழில்நுட்ப முறைகள் மற்றும் முன்னேற்றகரமான கால்நடை பராமரிப்பு முறைகள் தொடர்பில் விவசாயிகளுக்கு கல்வியையும் அறிவுறுத்தல்களையும் வழங்குவதற்கான ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைத் திட்டமொன்று காணப்படவில்லை.

புற்தரைகளைப் பயிரிடுதலுக்கும் அபிவிருத்தி செய்வதற்குமான தேசிய வேலைத்திட்டமொன்று காணப்படாமையினால் போஷாக்கு நிறைந்த உள்நாட்டில் அறிமுகப்படுத்த முடியமான புற்கள் மற்றும் தாவரங்களிலிருந்து பயனடையாமையினால் பெரும் போகத்தின் போது அதிக புல் அறுவடைகள் வீணடிக்கப்படுவதுடன் சிறு போகத்தின் போது புற்களுக்கு தட்டுப்பாடு நிலவுவது இத்துறையில் காணப்படும் ஒரு பிரச்சினையாகும்.

## தீர்வுகள்

கால்நடை வளத் துறையின் ஒழுங்கமைப்பு, முகாமை, உற்பத்தி, உள்நாட்டுக் கொள்வனவு மற்றும் விற்பனை, ஏற்றுமதி மற்றும் அத்தியவசிய இறக்குமதி, இனப் பெருக்கம், ஆய்வு மற்றும் அறிவையும் மற்றும் தொழில்நுட்பத்தையும் விவசாயிகள் மத்தியில் பரப்புதல் ஆகிய துறைகளை இயக்குவதற்காக தேசிய கால்நடை வள அபிவிருத்தி மத்திய அதிகாரசபையொன்றை உருவாக்கி தேசிய கால்நடை வள அபிவிருத்தித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும்.

## வழிமுறைகள்

- கால்நடை வள உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்யும் தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காகவும் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் பால், முட்டைகள், இறைச்சி உற்பத்திகளின் பல்வேறு கட்டங்களுடன் தொடர்புடைய சவால்களை இலக்காகக் கொண்ட செயற்திட்ட வலையமைப்பொன்றை அத்தொழில் முயற்சியாளர்களுக்காகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தக்கூடியவாறு அரசாங்க நிறுவனங்கள் இயக்கப்படும்.
- பால், முட்டை, இறைச்சி உற்பத்திச் சந்தை விலைகளில் கூடிய சதவீதத்தை உற்பத்தியாளர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதைச் சாத்தியப்படுத்துவதற்காகவும் தமது கைத்தொழில் மற்றும் உற்பத்திகள் தொடர்பான தேசிய கொள்கைளிலும் தாக்கம் செலுத்தக்கூடிய விலங்கு உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட கமக்காரர் அதிகார சபையொன்று உருவாக்கப்படும்.

- புற்களைப் பயிரிடக்கூடிய ஒவ்வொரு காணியிலும் அவ் அப்பிரதேசத்தின் காலநிலைக்கும் மண்ணின் தன்மைக்கும் ஈடுகொடுக்கக்கூடியதும் அதிக விளைச்சளைத் தரக் கூடியதுமான முன்னேற்றகரமான புல் வகைகளையும் தாவர வகைகளையும் பிரபல்யப்படுத்துவதற்காக அரசாங்கம் தலையீடு செய்யும்.
- 1000 பாற் பண்ணைக் கிராமங்களை உருவாக்கும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், யோகட், சீஸ், தயிர் உள்ளிட்ட பாலை அடிப்படையாகக் கொண்ட ஏனைய உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் பிரபல்யப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.
- பால் உற்பத்தியை வேகமாக அதிகரிக்கும் நோக்கில் நடுத்தர அளவிலான தொழில்முயசியாளர்களை அத்துறையில் முதலீடு செய்யத் தூண்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- நாட்டுக்குத் தேவையான பசும்பால் மற்றும் பாலை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை முழுமையான நாட்டினுள் உற்பத்தி செய்வதற்குத் தேவையான திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும்.

## 05. மீன்பிடி மற்றும் நீரியல் கைத்தொழில்

மீன்பிடித் துறை தொடர்பான தேசியத் திட்டமொன்று காணப்படாமையே அத்துறையில் காணப்படும் முக்கிய பிரச்சினையாக உள்ளது. எரிபொருள், மீன்பிடி உபகரணங்கள், படகுகள் உள்ளிட்ட ஏனைய உற்பத்திகளின் உள்ளீட்டு விலை அதிகரித்துள்ளதன் காரணமாக உற்பத்தி விலை அதிகரித்துள்ளது. சேதம் விளைவிக்கும் மீன்பிடி முறைகளின் பயன்பாடும், ஐஸ் உற்பத்திக்கூடங்களும் குளிஷரூட்டல் அறைகளும் போதியளவில் காணப்படாமையின் காரணமாக பெருமளவு மீன் அறுவடை வீணடிக்கப்படுவதும் விநியோக முறைமையில் காணப்படும் பலவீனங்களும் இத்துறையின் முன்னேற்றத்திற்குப் பெருந் தடையாக அமைந்துள்ளன.

உள்நாட்டு மீன்பிடிச் செயற்பாடுகளில் அரசாங்கத்தின் தலையீடுகள் காணப்படாமையும் கருவாடு மற்றும் மாசி உள்ளிட்ட மீன் உற்பத்திக்கான ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைத் திட்டமொன்று காணப்படாமையும் பிரச்சினையாக உள்ளன. மீன்பிடிக் கைத்தொழிலாளர்கள் அனைவருக்குமான பரந்த கல்வி மற்றும் பயிற்சி வேலைத்திட்டமொன்று காணப்படாமையும் மீனவர்ளைப் பாதிக்கும் வீடமைப்பு, சுகாதாரம், குடிநீர் போன்ற பாரிய பிரச்சினைகளுக்கு இது வரையயில் எந்தவொரு ஆட்சியாளரினாலும் தீர்வு காணப்படாமையும் மீன்பிடிக் கைத்தொழிலின் முன்னேற்றத்தைக் குறைத்துள்ளன.

## தீர்வுகள்

பொருளாதார ரீதியில் செழிப்பான நாட்டை உருவாக்குவதற்கான தேசிய மீன்பிடிக் கொள்கையொன்றின் கீழ் மீன்பிடிக் கைத்தொழில் விரிவான கைத்தொழில் மயமாக்கம் செய்யப்படும். உள்நாட்டு மீன் உற்பத்திக்கான கேள்வியை ஈடுசெய்வதற்காகவும் ஏற்றுமதிகளை இலக்காகக் கொண்டும் மீன்பிடிக் கைத்தொழில் முழுமையாக மறுசீரமைக்கப்படும்.

## வழிமுறைகள்

- மீன்பிடித் துறை தொடர்பான அனைத்துப் பிரிவினருடனும் பரந்தளவிலான கலந்துரையாடல்களை நடாத்தி அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய விதத்தில் தேசிய கொள்கையொன்று ஆறு மாத காலத்தினுள் உருவாக்கப்படும்.
- மீன்பிடிக் கைத்தொழிலுக்காக ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள 19 மீன்படித் துறை முகங்களையும் புதிதாக நிர்மாணிகிகப்படும் 10 மீன்பிடித் துறைமுகங்களையும் ( களமட்டிய, கந்தரை, சிலாவத்துறை, பேசாலை, பருத்தித் துறை, முல்லைத்தீவு போன்ற) மத்திய நிலையமாகக் கொண்டு மீன் பதனிடல் தொழிற்சாலைகள் - (processing factories) உருவாக்கப்டும்.
- தற்போது காணப்படும் 58 நங்கூரமிடும் நிலையங்களுக்கு மேலதிகமாக புதிய நங்கூரமிடும் நிலையங்கள் உருவாக்கப்படும். முதல் வருடத்தில் அவ்வாறான 25 நிலையங்கள் நிறுவப்படும். தற்போது காணப்படும் சுமார் 800 படகுத் துறைகள் அபிவிருத்தி செய்யப்படும்.
- தற்போது காணப்படும் நன்னீர் மீன் இனப்பெருக்க நிலையங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. அதனால் அவற்றின் வசதிகளை மேம்படுத்தி உள்ள நீரியல் உயிரியல் வேளாண்மைக்குப் போதுமான அளவு இனப்பெருக்க மத்திய நிலையங்களை உருவாக்கி இலங்கைக்கு மிகப் பொருத்தமான மீன் வகைள் அறிமுகப்படுத்தப்படும்.
- இலங்கைக்குச் சொந்தமான கடற்பரப்பில் உள்ள நீரியல் உயிரினங்கள் தொடர்பான முறையான மதிப்பாய்வு ஒன்று மேற்கொள்ப்படும்.
- மீன் மற்றும் நீரியல் தாவரங்களை அடிப்படையாகக் கொண்ட உணவு உற்பத்திகளுக்கான தொழிற்சாலையொன்று ஆரம்பிக்கப்படும்.
- கடலில் நிகழும் இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டி அறிவிப்பதற்காக துறைமுக, நங்கூரம் இடும் நிலையம், படகுத் துறை மட்டங்களில் முறையான வேலைத் திட்டமொன்றை உருவாக்கி மீன்பிடிப் படகுகளுக்கு முன்னேற்றகரமான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டுகளில் மீன்பிடிப் படகுகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் மீனவர் ஆக்கிரமிப்பை முழுமையாகத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பும் வழங்கப்படும்.
- கிராமங்களிலுள்ள 10,000 சிறிய குளங்களில் மீன் வளர்ப்பைப் பரவலாக்குவதற்காக நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஏனைய அனைத்து துணைச் சேவைககளையும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- மீனவர் சமுதாயம் எதிர்நோக்கியுள்ள பாரிய பிரச்சினையான வீடமைப்பு,, குடிநீர், சுகாதாரம் போன்ற பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு வழங்குவதற்காக உரிய துறைகளுடன் இணைந்து துரித நடவடிக்கை எடுக்கப்படும்.
- மீன்பிடித் துறைசார் தொழில்நிபுணர்கள் அனைவருக்கும் அரசாங்கத்தின் பொது ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படும்.
- கடலில் உயிரிழக்கும் மீனவர் ஒருவருக்காக 10 இலட்சம் ஷரூபா காப்புறுதி வழங்கப்படும். 1
- மீனவர்களை சமூக, கலாசார, கல்வி ரீதியில் முன்னேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.
- நுகர்வோருக்கு சலுகை விலையில் சிறந்த தரத்திலான மீன் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கு கடற்தொழில் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்கூடங்களின் வலையமைப்புக்கள் நாடு முழுவதிலும் ஆரம்பிக்கப்படும். முதல் வருடத்தில் 100 விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்படும்.

## 06. பெருந்தோட்டத்துறை

தேயிலை, தென்னை, இறப்பர் பயிர்ச்செய்கைகளுக்காக நாடு முழுவதிலும் குறிப்பிடத்தக்க அளவு காணிகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அக்காணிகளின் பரப்பையும் அவற்றுக்காகச் செலவிடப்படும் ஊழியத்தை கவனத்திற்கொண்டு நோக்குகையில் இறுதியாக மக்களுக்குக் கிடைக்கும் பயன்கள் மிகக்குறைவாகும். அப்பயிர்ச்செய்கைகளுக்கு முன்னேற்றகரமான தொழில்நுட்பங்கள் குறைவாகவே சேர்க்கப்படுவதுடன் பாரியளவிலான காணி, காடுகளாகக் காட்சியளிக்கின்றன.தனியார்மயப்படுத்தப்பட்ட தோட்டங்களின் அபிவிருத்தி உரிய முறையில் மேற்கொள்ளப்படாமையினால் குறைந்த சம்பளம் மற்றும் குறைந்த வசதிகள் என்பவற்றின் காரணமாக தொழிலாளர்களில் அதிகமானோர் பெருந்தோட்டத் தொழில்துறையிலிருந்து விலகிச்செல்கின்றனர். உற்பத்திகளைப் பல்வகைப்படுத்துவதிலும் விற்பனையிலும் அரசாங்கத்தின் தலையீடு போதியளவில் காணப்படாமை ஒரு முக்கியபிரச்சினையாக உள்ளது.

## தீர்வுகள்

தற்போது நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் எமது நாட்டின் பெருந்தோட்டத்துறையை கட்டியெழுப்புவதற்கும் நவீனமயமாக்குவதற்கும் புதிய தொழில்நுட்ப அறிவை பெற்று கொடுத்தல், இது தொடர்பான மூட நம்பிக்கைகளை துடைத்தெரிந்து புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தி வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்ட, நாட்டுக்கு அண்ணியச் செலாவணியை ஈட்டுதரும் துறையாக கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக அரச மற்றும் தனியார் துறை என்ற இரண்டு பிரிவுகளையும் வலுவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## வழிமுறைகள்

- தேயிலை, இறப்பர், தென்னை உற்பத்திகளையும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களையும் புதிய தொழில்நுட்பம் மற்றும் முன்னேற்றகரமான முகாமைத்துவம் என்பவற்றைப் பயன்படுத்தி நவீனமயப்படுத்துவதற்கும் கைத்தொழில்மயப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- தேயிலை உற்பத்தி, இறப்பர் மற்றும் தென்னையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை உயர்தரத்தில் மேற்கொள்வதற்கும் அவற்றுக்கு வெளிநாட்டுச் சந்தைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கும் வர்த்தகத் தூதுவர் சேவை பலப்படுத்தப்படும்.
- தனியார்மயப் படுத்தப்பட்டதன் பின்னர் மேலும் விளைத்திறனும் உற்பத்தியும் வளர்ச்சிகாணாத பாரியளவிலான தேயிலை, இறப்பர், தென்னைத்தோட்டங்கள் தொடர்பில் விசாரணைகளை நடாத்தி தொழிலாளர்களையும் உள்ளடக்கிய விதத்தில் அத்தோட்டங்கள் புதிய முகாமைத்துவத்தின் கீழ்கொண்டுவரப்படும்.
- பெருந்தோட்டத்துறையில் தொழில் செய்யும் மக்களின் தொழில்களைப் பாதுகாத்தல், அம்மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத்தரத்தையும் உயர் கலாசாரத்தையும் ஏற்படுத்திக் கொடுப்பதும் ஓய்வுபெறும் ஊழியர்களைப் பாதுகாப்பதும் அரசாங்கத்தின் முன்னுரிமைக்குரிய பணிகளில் உள்ளடக்கப்படும்.
- நாட்சம்பளத்தை ரூபா.1000வரை அதிகரிக்கக்கூடியவகையில் அரசாங்க மற்றும் தனியார் தோட்டங்களின் நிதிமுகாமை உடனடியாக ஒழுங்குபடுத்தப்படும்.
- பெருந்தோட்டங்களில் வாழ்க்கின்ற மக்களின் காணிப்பிரச்சினைக்கான தீர்வாக அவர்கள் வேலை செய்யும் பிரதேசத்தை அண்டிய பிரதேசங்களில் பொருத்தமான காணிகளைத் தெரிவு செய்து வீடுகளை நிர்மாணிப்பதற்காக தலா ஒவ்வொரு காணித்துண்டுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- சிறிய தேயிலைத்தோட்ட உரிமையாளர்கள் உள்ளிட்ட சிறிய மற்றும நடுத்தர

அளவிலான உற்பத்தியாளர்களுக்குத் தேவையான நிதி மற்றும் முகாமைத்துவ உதவிகள் வழங்கப்படும்.

- இறப்பர் மற்றும் தேயிலைக் கொழுந்துகளுக்கு நிலவும் உற்பத்தி நிலைமைகளுக்குப் பொருத்தமான உத்தரவாத விலையொன்றை ஏற்படுத்திச் சட்டமாக்கப்படும்.
- குப்பைத் தேயிலை வியாபாரத்தை முழுமையாக நிறுவத்துவதற்கு நடிக்கை எடுக்கப்படும். அத்துடன் அதிக இலாபந்தரக்கூடிய தேயிலை உற்பத்தியில் ஈடுபடுவதற்கு தோட்ட உரிமையாளர்களுக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் ஊக்குவிப்புக்கள் வழங்கப்படும்.
- இயற்கை இறப்பரை அடிப்படையாகக் கொண்ட முடிவுப் பொருட்களுக்காகக் காணப்படும் தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவதற்கும் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- தோட்டப்பயிர்களை அடிப்படையாகக் கொண்ட மேலதிகப்பொருளாதாரப் பெறுமதியைக் கொண்டமலர்கள், பழங்கள், மரப்பலகை தாவரச் செய்கை பண்ணுவதற்கும் சுற்றுலாக் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- மலையகத்தில் மீள்பயிரிடுகை மேற்கொள்ளப்படும் காணிகள் தொடர்பில் விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வுகளை மேற்கொண்டு சுற்றாடல் பாதிப்புக்ளைக் குறைக்கும் விதத்தில், பலகைகள், புற்கள் மற்றும் பெருந்தோட்டப் பொருளாதாரப் பயிர்ச்செய்கை ஒழுங்குபடுத்தப்படும். மண்ணைப்பாதுகாப்பதற்கு முன்னுரிமை வழங்குவதற்காகச் சட்டங்கள் உருவாக்கப்பட்டு உரிய தொழில்நுட்பத்தின் மூலம் முன்னேற்றப்படும்.
- சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் வாசனைத்திரவியங்களின் பயிர்ச்செய்கை விடயத்தில் உச்ச அளவில் அரசாங்கத் தலையீட்டை மேற்கொண்டு தன்னிறைவு காண்பதற்கு அதிகளவில் அந்நியச்செலாவணியை உழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- மரப்பலகைகளுக்கான தேவைகளை அடுத்து வரும் சிலதசாப்தங்களில் இந்நாட்டிலேயே உற்பத்தி செய்யக் கூடியவாறு தரிசுநிலங்களில் உள்நாட்டுதாவரங்களை நடுவதற்கான செய்றதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.
- வெளிநாட்டுச் சந்தைகள் அதிகேள்வி உள்ளதாவரங்கள் மற்றும் மூலிகைப் பயிர்களைப் பரவலாக்கி உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்து தொழில் மற்றும் தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

# 07. சுற்றுலாத் துறை கைத்தொழில்

தற்போதைய சுற்றுலாக் கைத்தொழில் முறையான மற்றும் நடுத்தர அளவிலான வழிநடாத்தலின்றி செயற்பட்டுவருகின்றது. சுற்றுலாத்துறை அமைச்சு ஒன்று காணப்பட்டபோதிலும் அதன் மூலம் சுற்றுலாத்துறையை கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரைதிட்டமிட்டு நவீனமயப்படுத்தி எமது நாட்டுக்கு நன்மை பயக்கும் விதத்தில் கட்டியெழுப்புவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்படுவதில்லை.

சுற்றுலாஹோட்டல்களையும், விடுமுறைபங்களாக்களையும் நிர்மாணிக்கின்றபோது சுற்றுலாத்துறை தொடர்பான சிறந்த விளக்கத்தைக் கொண்டுள்ள ஆட்களுக்கு அதற்கான அனுமதிகளை வழங்கும் முறையொன்றை பின்பற்றாததன் காரணமாக நடைமுறையில் அவற்றில் தரநியமங்கள் பேணப்படாமையினால் சுற்றுலா ஹோட்டல்கள், வாடிவீடுகள் என்பவை தரங்குன்றிக்காணப்படுகின்றன. மேலும், உல்லாசப்பயணிகள் முகங்கொடுக்கின்ற பல்வேறுவகையான தொந்தரவுகள், விபத்துக்கள் மற்றும் ஏனைய தாக்கங்கள் போன்றவற்றுக்காகப் போதிய பரிகாரவேலைத்திட்டங்கள் காணப்படாமையினாலும்உல்லாசப் பயணிகளுக்கான வழிகாட்டிகள் முறையான நிறுவனமொன்றிலிருந்து உரிய கல்வி மற்றும் கலாசார ரீதியான பின்னணயின் கீழ் உருவாக்கப்படாமையின் காரணமாகவும் இலங்கையின் நற்பெயருக்கு குந்தகம் ஏற்படுவதுடன் உல்லாசப் பயணிகளுக்கானகவர்ச்சியும் குறைவடைந்துள்ளது.

உரிய முறையில் கட்டியெழுப்பப்பட்ட முறையான, சிறப்பானகவர்ச்சியைப் பேணி வரும் சுற்றுலா வலயங்கள் எதுவும் இலங்கையில் காணப்படவில்லை. கலை, கலாசார, விளையாட்டுச் செயற்பாடுகள் என்பன உல்லாசப் பயணிகளை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதில்லை. உல்லாசப் பயணிகளை இலக்காகக் கொண்ட நவீனகலை,கலாசார அரங்குகளும் காட்சிக்கூடங்களும் காணப்படாமையினால் சுற்றுலாத்துறையின் கவர்ச்சி குறைவடைந்துள்ளது.

## தீர்வுகள்

இக்கைத் தொழில் தொடர்பான விடய அறிவுள்ள அறிஞர்களிடமும், தொல் பொருளியலாளர்களிடமும், சூழலியலாளர்களிடமும் அனுபவம் கொண்ட தொழில் நிபுணர்களிடமும் கலை, கலாசாரத்துறைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றவர்களிடமும் பொது மக்களிடமும் கருத்துக்களைப் பெற்று உருவாக்கப்படும் மையப்படுத்தப்பட்ட தேசிய கொள்கையொன்றிற்கு இணங்க சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்யப்படும்.

## வழிமுறைகள்

- சுற்றுலாக்கைத் தொழிலை மேம்படுத்துவதற்காக பின்வரும் வகைகளின் கீழ் அடங்கும் சுற்றுலாக்கைத் தொழில்களின் விடயத்தில் உச்ச அளவில் கவனம் செலுத்தப்படும். அவையாவன,

  1. சூழல்நட்புறவான உல்லாசப் பயணக்கைத்தொழில்

2. விவசாயத்துடன் இணைந்த உல்லாசப் பயணக் கைத்தொழில்

3. கழிப்பு மற்றும் ஓய்வுகலந்த உல்லாசப் பிரயாணக் கைத்தொழில்

4. கல்வியை அடிப்படையாகக் கொண்ட உல்லாசப் பயனக்கைத்தெ தாழில்

5. குடும்ப அலகை அடிப்படையாகக் கொண்ட உல்லாசப்பயனக் கைத்தொழில்

6. தேக ஆரோக்கியம், ஸ்பாமற்றும் ஆயுர்வேத சிகிச்சை முறையை அடிப்படையாகக் கொண்ட உல்லாசப் பிரயாணக்கைத்தொழில்

- நாட்டின் கலாசாரப் பெறுமானங்கள், இயற்கை வளங்கள் என்பன பாதுகாக்கப்படும் விதத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப்பயணிகளைக் கவரும் விதத்தில் கடற்கரையோரங்கள், மலைநாட்டின் பாதுகாக்கப்பட்ட வனங்கள்எனசுற்றாடல் வலயங்களும் தொல்பொருளியல் முக்கியத்துவம்வாய்ந்த சுற்றுலா எனசுற்றுலாவலயங்கள் வகைப்படுத்தப்படும்.

- தெரிவுசெய்யப்பட்ட விசேட சுற்றுலாவலயங்களை அடிப்படையாகக் கொண்டு பிரதேசக் கைத்தொழில்களையும் கைப்பணிப் பொருட்கைத்தொழில்களையும் மேம்படுத்துவதற்கும் சந்தைகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதன்கீழ் ஆரம்பகட்டத்தில் உயர்தரத்திலான இலங்கைக்கே உரிய பொருட்களை உற்பத்திசெய்யும் 30கிராமங்கள் உருவாக்கப்படும்.

- இலங்கைக்கே உரித்தான கலைகளை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக இளம் கலைஞர்களின் பங்களிப்பை பெறும் விதத்தில் அவர்களின் படைப்புக்களை உயர்மட்டத்திலான கலாபவனங்களின் ஊடாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உல்லாசப் பயணிகளுக்கு விற்பனை செய்வதற்கான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படும்.

- உல்லாசப்பயணிகளுக்கு பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான அனுபவத்தை மிகவும் பரந்தளவில் வழங்கக்கூடியவாறு நாடு முழுவதிலும்உல்லாசப் பயணிகளை இலக்காகக் கொண்ட கடைத்தொகுதிகளும் காட்சியறைகளும் உருவாக்கப்படும்.

- சுற்றுலாக் கைத்தொழிலுடன் தொடர்புடைய தொழில்களை உயர்தொழில்சார் தேர்ச்சிகொண்டவையாக மேம்படுத்துவதற்கான பயிற்சி நெறிகளைக் கொண்ட நிலைய மொன்று முதல் வருடத்தினுள் ஆரம்பிக்கப்படும்.

- விமான நிலையங்களை அபிவிருத்திசெய்வதற்கும் தற்போது இலங்கை தினமும் வருகை தருகின்ற சுமார் 70விமானப்பயணங்களின் எண்ணிக்கை160வரை அதிகரித்து ஒருவருடத்தில் வருகை தரும் உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கையை 3மில்லியன் வரை அதிகரிப்பதற்கு உச்ச அளவில் முயற்சிகள் மேற்கொள்ள்பபடும்.

- உல்லாசப்பயணிகள் எதிர்நோக்குகின்ற தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு 365நாட்களிலும் 24மணிநேரமும் உடனடியாகத் தலையிடக்கூடிய சுற்றுலாத்துறை பொலிஸ் உள்ளிட்ட நிறுவனக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படும். நாட்டினுள் நுழைகின்ற உல்லாசப்பயணிகளுக்கு விமானங்களிலேயேஅல்லது கப்பல்களிலேயே அதனுடன் தெபடர்புகெபள்ளக்கூடிய தெபலைபேசி மற்றும் மின்னஞ்சல் தகவல்கள் வழங்கப்படும்.

- உல்லாசப்பயணிகளின் சிறுமுறைப்பாடுளுக்காக சுற்றுலாத்துறை நீதிமன்றமொன்று உருவாக்கப்படும். அதன் மூலம் பொலிசாருக்கும் ஏனைய சட்டச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் செலவாகும் காலத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- பல்வேறு ஆட்களால் உல்லாசப்பயணிகள் எதிர்கொள்ளும் தொந்தரவுகளுக்கு எதிராகத் துரிதமானதும் கடுமையானதுமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் நாட்டின் நற்பெயரும் உல்லாசப்பயணிகளின் நம்பிக்கையும் பாதுகாக்கப்படும்.

- இலங்கையின் சுற்றுலாத்துறை தொடர்பில் அவர்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் விமர்சனங்களையும் அரசாங்கத்திற்குப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் விசேட அலகு ஒன்றுநிறுவப்பட்டு தகவல்களைப் பெறுவதற்காக தொலைபேசி, மின்னஞ்சல் என்பவற்றுக்கு மேலதிகமாக களமதிப்பாய்வுகளும் மேற்கொள்ளப்படும்.

- சுற்றுலாத்துறையை பிரபல்யப்படுத்துவதற்காகத் தொல்பொருளியல் ரீதியில் முக்கியத்துவம்வாய்ந்த இடங்கள் மற்றும் சமயத்தலங்கள் உள்ளிட்ட தகவல்கள் அடங்கிய கவர்ச்சியான இணையத்தளமொன்றும் கையடக்கத்தொலைபேசி நிகழ்ச்சியொன்றும் (mobileapp) உலகம்முழுவதிலும் செயன்முறைப்படுத்தப்படும். இதற்காக வெளிநாட்டுகளிலுள்ள இலங்கையர் கள் ஒத்துழைப்பும் உச்ச அளவில்பெறப்படும்

- சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் டீநரவகைரடளுடுஎன்ற பெயரில் கையடக்கத் தொலைபேசி நிகழ்ச்சி யொன்று (அழடிடைநயீ)உருவாக்கப்பட்டு உல்லாசப்பயணிகள் இலங்கையின் உள்ளே எடுத்த புகைப்படங்களை இந்தநிகழ்ச்சியின் ஊடாக இற்றைப்படுத்துவதற்குச் சந்தர்ப்படும். அத்துடன் ஒவ்வொருவாரத்திலும் சிறந்த புகைப்படத்தைத் தெரிவுசெய்து பரிசுவழங்கும்திட்டமொன்றும் ஆரம்பிக்கப்படும்.

- சுற்றுலாவலயங்களில் பாரம்பரிய வைத்திய முறைகள், உள்நாட்டுக் கலைப்படைப்புக்கள் மற்றும் உள்நாட்டு உணவுவகைகள் என்பவற்றைப் பிரபல்யப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- சீன, ஜேர்மன் மற்றும் இந்திய மொழிகள் உள்ளிட்ட வெளிநாட்டு மொழிகளைக் கற்பிப்பதற்கான கல்வி நிறுவனங்கள் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்படும்.

- சுற்றாடல்சார் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக வனவிலங்குப்பூங்காக்களையும், தாவரவியல் பூங்காக்களையும் அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் கவர்ச்சியானதாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்துடன் காடுகளின் உள்ளே சுற்றுலா முகாம்களை அமைப்பதற்கும் திட்டங்கள் தயாரிக்கப்படும்.
- ஹோட்டல்கள் உள்ளிட்ட தங்குமிட வசதிகள் தொடர்பான தேசிய கொள்கையொன்றை உருவாக்கி தரநியமங்கள் அறிமுகப்படுத்தப்படும். அதன்போது சிறுவர் பரம்பரையினரின் பாதுகாப்பு உள்ளிட்ட சமூக, சுற்றாடல் மற்றும் கலாசார நிலைமைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும்.
- சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- தனியார் சுற்றுலாத்துறை வழிகாட்டிகளுக்கு ஓய்வூதியத் திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படும்.
- சுற்றுலாத் துறையிலுள்ள ஹோட்டல் உரிமையாளர்கள், முகாமையாளர்கள், சமையல் கலைஞர்கள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்களுக்கு உலகின் அபிவிருத்தியடைந்த சுற்றுலாவலயங்களில் அனுபவங்களையும் அறிவையும் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்தினால் புலமைப்பரிசில் முறையொன்றும் அறிவுப்பரிமாற்ற நிகழ்ச்சியொன்றும் உருவாக்கப்படும்.
- கொழும்பு நகரத்தை தென் ஆசியாவில் மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளுக்கான மத்திய நிலையமாக அபிவிருத்தி செய்யும் நோக்கில் முக்கியமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு அந்த உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிப்பதற்கான ஊக்குவிப்புக்களை வழங்குதல்.

## 10. காணிகள்

இலங்கையில் இன்றிருக்கும் 20.5மில்லியன் சனத்தெகைக்கு 220,000 தொகை வருடாந்தம் சேரவுள்ள போதிலும் எமக்குள்ள காணிவளம்வரையறுக்கப்பட்டதாக உள்ளது. 2035ஆம் ஆண்டு ஆகும் போது 25மில்லியன் வரை அதிகரிக்கும் மனித சமுதாயத்திற்குத் தேவையான அடிப்படைய வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் சவாலை வெற்றி பெருவதற்காக எந்த விததேசியதிட்ட மொன்றும் இல்லாத அதேநேரம் தன்னிச்சையாக காணிகள் கையாளப்படுவதால் இலங்கையில் காணிப்பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்தவருகின்றது.கடலரிப்பு, மண்ணரிப்பு உட்பட்ட இயற்கை காரணங்களால் தற்போதுள்ளகாணிகளின் பரப்பளவு இழக்கப்படல் அத்துடன் காணிகளை பயன்படுத்த முடியாதவாறு மேற்கொள்ளப்பட்டுள்ள முறையற்ற நிர்மாணிப்புகள் மற்றும் குப்பை குவியல்களும் வேறு திண்மக்கழிவுகளும் சேர்வதற்கு இடமளித்து மேலும் மாசடைந்தநிலை உருவாக்கப்பட்டுள்ளதால் அதிகரித்துள்ள பாதகமானலை.

அத்துடன் காணி உரிமைகள் தீர்த்துவைக்கப்படாமை, காணியற்றவர்களின் எண்ணி க்கை

அதிகமாகி, இலங்கையில் காணிபிரச்சினைஅ திகரித்து அதுபாரிய சமூகபி ரச்சினையை உருவாக்கியுள்ளது.

## தீர்வுகள்

காணி, காணி நுகர்வு பற்றி தேசிய காணிகொள்கையொன்றை தயாரித்தல் மற்றும் சட்டமாக்கப்படும். அதன்கீழ் சூழல்பாதுகாப்பு, குடியிருப்புகள், கைத்தொழில், விவசாயம், வடிகாலமைப்பபு உட்பட்ட வேறு நிர்மாணிப்புகளும் பௌதீக அபிவிருத்தி அலுவல்களின் போதும் நிருவாக அலுவல்களின்போதும் கையாள வேண்டிய முறையை தேசிய கொள்கையில் சேர்த்துக்கொள்ளப்படும்.

## வழிமுறைகள்

- காணிநுகர்வ, சட்டபூர்வ மற்றும் நிருவாக நிலைபற்றிய துரித விஞ்ஞானரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.
- குடியிருப்புகள், விவசாய பொது நிர்மாணிப்புகள், கைத்தொழில், சுற்றாடல் தொகுதி, வேறு பொதுச்சுற்றாடல் தேவைகள் நீர்ப்பாசனம் மற்றும் நீர்த்தேக்கங்கள் ஆகியவைபற்றிய நீண்கால திட்டமொன்றின் கீழ் பரந்தகாணி சீர்த்திருத்த செயற்றிட்டமொன்றை செயற்படுத்தல்.
- காணிகளை விற்பனை செய்யும் ஒழுங்கற்ற மோசடியான முறைகளை மாற்றியமைத்து காணிகளை சாட்டுதல் மற்றும் விற்பனை செய்வதை மிகவும் நம்பிக்கையான நிலைக்கு கொண்டுவரப்படும்.
- காணி உரிமைகளை தீர்த்துவைத்து காணிகள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட விபரங்கள் அடங்கிய தகவல் நிலையமொன்று தாபிக்கப்படும்.
- மண்ணரிப்பு, விசமுள்ள இரசாயனப்பொருட்களும் பாதிப்புள்ள கதிர்களும் சேர்தல், மண்ணரிப்பு, அகழ்வுகள் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகள் முற்றாகக் குறைப்பதற்காக மண்மற்றும் காணிபாதுகாப்பு செயற்றிட்டமொன்று செற்படுத்தப்படும்.
- கலப்பு பிரதேச தாவரங்கள் உட்பட்ட வேறுமுக்கியமான சுற்றாடல் தொகுதிகள் உட்பட்ட ஈரநிலங்கள் சகலவற்றையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும்.
- நீரேந்துப்பிரதேசங்களில் உள்ளநிலங்கள், செங்குத்துச்சரிவகள், உயர்ந்தமலை உச்சிகள் ஆகிய நிலங்களில் மீண்டும் துரிதமாக காடுவளர்க்கப்படும்.
- விஞ்ஞானரீதியான நகரதிட்டத்தின் கீழ் நகரபிரதேசத்திலுள்ள காணிகளின் பயன்பாட்டினை விளைத்திறனுடையதாக்குதல்.

- மண்ணரிப்பு, மண்தளர்வு ஆகிய அச்சுறுத்தல்களை எதிர் நோக்கியுள்ள நிலப்பரப்புகளைப் பாதுகாத்தல் மற்றும் சொத்துக்களினதும் உயிர்களினதும் பாதுக்காப்பினை உறுதிப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- காணி வளங்களை வெளிநாட்டு கம்பனிகளுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் விற்பனை செய்வதை நிறுத்துதல்.

## 11. நீர்முகாமைத்துவம் மற்றும் நீர்ப்பாசனம்

நாட்டின் மத்தியிலுள்ள பசுமைக் காடுகளைக் கொண்ட வருடாந்த மழைவீழ்ச்சி3000மி ல்லி மீட்டருக்கு மேலான மத்தியமலைநாட்டையும், நாட்டின் மொத்த நிலப்பரப்பின் 90சதவீதத்தை உள்ளடக்கும் மத்தியபிரதேசத்திலிருந்து பாயும் பிரதான 103கங்கைகைளைக் கொண்ட நாட்டின் நிலப்பரப்பில் 80சதவீதத்திற்கு மேலான சமநிலத்தைக் கொண்ட மனம்கவரும் நாடான இலங்கையில் நீர்பிரச்சினை நிலை உருவாக்கப்பட்டுள்ளது. கம்பகா-ரத்துபஸ்வல, வடமத்திய மற்றும் வடக்கு-சுண்ணாகம்பிர தேசத்தில் நிலவிவரும் நீர்பிரச்சினை ஆகியவை நீர்பிரச்சினையை எடுத்துக்காட்டியவிசேட சந்தர்ப்பங்கள் ஆகும். இய்றகை கொடையாக வழங்கப்பட்ட நீருக்குநாளுக்குநாள் அதிகரித்து வரும் விலையை நியமித்து அதனை வர்த்தக பண்டத்தின்நிலைக்கு கொண்டுவந்துள்ளனர்.திண்மக்கழிவுகள், இரசாயனப்பொருட்கள், தீயகதிர்கள் ஆகியவை நாளுக்கு நாள் அதிகமாக நீரில் சேர்க்கப்படுவதுடன் நீர்வளமானது நியாயமான, விளைத்திறனுடைய முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதில் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

முழு உலகத்திற்கும் முன்மாதிரியாகவுள்ள எமது நாட்டு நீர்ப்பாசன தொகுதியை பாதுகாத்து அதனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படாததால் விவசாய மக்கள் சமூக-பொருளாதாரத்துறையில் நிரந்தரமற்றநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

### தீர்வுகள்

இலங்கை மக்கள் சனத்தொகையின் அடிப்படை தேவைகளை பெற்றுக்கொள்ளுதல் மனிதர்களின் மற்றும் சுற்றாடலின் நல்வாழ்வை பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்டு விஞ்ஞானரீதியிலான நீர்முகாமைத்துவத்திற்குத் தேவையான தேசிய நீர் மற்றும் நீர்ப்பாசன தேசிய கொள்கையொன்றையும் செயற்றிட்டமொன்றும் நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்படும். அதன்கீழ் குடிநீர், கைத்தொழில், விவிசாயம், நீர்மின், போக்குவரத்து, கலாசாரம் மற்றும் சுற்றாடல் போன்ற தேவைகளை முக்கியமாக கவனத்திற் கொண்டு நிலத்தின் மேற்பரப்பு மற்றும் நிலத்தடிநீர் விஞ்ஞானரீதியில் முகாமைத்துவப்படுத்தப்படுவதுடன் நீர்பொதுவளமாக கருதுவதற்கான நடவடிக்கைகள்ே மற்கொள்ளப்படும்.

## வழிமுறைகள்

- நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாத்தல் மற்றும் சேதமாக்கப்பட்டுள்ள நீரேந்துப் பிரதேசங்கள் பழைய நிலைக்குக் கொண்டுவரப்படும்.
- 10 பாரியளவிலான புதிய நீர்ப்பாசன கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்.
- பாரியளவிலான நீர்ப்பாசன கருத்திட்டங்கள், சிற்றளவிலான மற்றும் மத்திய அளவிலான குளங்கள் தொகுதிகளை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள்துரிதமாக மேற்கொள்ளப்படும்.
- வடக்கு, கிழக்கு, வடமத்தியவலயங்களில் நிலவிவரும் குடிநீர்பிரச்சினைமுழுமையாக தீர்த்துவைக்கப்படும்.
- நீர்வளம் தனியார்மயப்படுத்துவதை நிறுத்து வதுடன் அந்நோக்கத்துடன் நாட்டில் இயங்கிவரும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களை கலைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- விவசாய பொருளாதாரத்திற்கும், சுற்றாடலுக்கும் நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களை சுற்றாத்துறைக்கு குத்தகைக்கு வழங்கல் நிறுத்தப்படும்.
- இலங்கையிலுள்ள நீலத்தடி நீர்தோற்றுவாய்களை வெற்றிகரமான முறையில் பயன்படுத்துவதற்காக விஞ்ஞானரீதியான ஆய்வுகளை மேற்கொணடு நிலத்தடிநீரை பயன்படுத்துவது பற்றிய சரியான முறைமைகள் அமைக்கப்படும்.
- நீர்பாதுகாப்பு, நீர்நுகர்வுபற்றி நாட்டு மக்களை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் எண்ணங்களில் பரந்தளவிலானமாற்றங்களை ஏற்படுத்துவதற்கான கல்வியை பெற்றுக்கொடுப்பதுடன் அதன் ஊடாக நீரை பெறுமதியான வளமாக சிக்கனமாக பாவிப்பதற்கும், நீர்தொற்றுவாய்களையும் நீரேந்துப்பிரதேசங்களையும் பாதுகாப்பதற்காக மக்களின் ஒத்துழப்பைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- இலங்கையில் ஆட்சிபுரிந்த அரசுகள் அரசியல் இலாபம் கருதி புவியில் மற்றும் சுற்றாடல் பற்றிய எவ்வித சாத்தியவள ஆய்வுகளையும் நடத்தாது நிர்மாணித்துள்ள தோல்விகண்டுள்ள சகல பல்லிய செயற்பாட்டு யோசனைத்திட்டங்களை (உமாஓயா) நிறுத்துதல் அல்லது அவை பற்றிய ஆராய்ந்து அவற்றை நாட்டுக்கு பொறுத்தமான முறையில் அமைத்தல்.

# 08. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகம்

தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்தி கட்டியெழுப்பும் செயற்பாட்டில் சந்தை செயற்பாடுகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, விநியோகம் என்பன நாட்டுமக்களின் பொதுவான தேவைகளைப் பூர்த்திசெய்யாது உள்நாட்டு-வெளிநாட்டு சக்திகள் சிலவற்றின் தேவைகளையும் இலாபநோக்கங்களையும் பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்றமையே தற்போதைய நிதிப்பிரச்சினைகளாக உள்ளன. அதனால், இறக்குமதியும் ஏற்றுமதியும் நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் மேற்கொள்ளப்படுவதனால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகங்கள் பாரிய சிக்கல்களை எதிர்நோக்குகின்றன. தற்போது ஏற்றுமதி வருமானத்தின் இரண்டு மடங்கு இறக்கு மதிச்செலவாக மேற்கொள்ளப்படுகின்றது. 1978ஆம் ஆண்டில் உலக சந்தையில் இலங்கையின் ஏற்றுமதிப் பங்கு 1/200 ஒன்றாகக் காண்ப்பட்டது. அதுதற்போது 1/2000 ஆகப்பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் அதிகாரசபை, நியாயமான வர்த்தக ஆணைக்குழுச் சட்டம் மற்றும் ஆணைக்குழு, நுகர்வோர் பாதுகாப்பு நிதியம் என்பன போன்ற சட்ட மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகள் வெறுமனே சட்டங்களாகவும் நிறுவனங்களாகவும் மாறி செயற்பாடற்று உள்ளன. பொதுமக்கள் சந்தையினுள் அகப்பட்டு அநீதி இழைக்கப்படும்போது தனக்குப் பொருட்களை அல்லது சேவைகளை வழங்கும் ஆட்களுக்கு மட்டும் குற்றஞ் சுமத்துவதைத் தவிர வேறு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாது நிர்க்கதியுற்றுக் காணப்படுகின்றனர்.

## தீர்வுகள்

இதற்காக உள்ளநாட்டு, வெளிநாட்டு வர்த்தங்களில் தனியார் துறையினர் கொண்டுள்ள பரந்தளவிலான பங்களிப்பைக் கவனத்திற்கொண்டு அரசாங்கத்தின் முழுமையான மேற்பார்வையும் அத்தியவசியமான தலையீடுகளையும் செய்யக்கூடிய விதத்தில் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகக்கொள்கையொன்று உருவாக்கப்படும்.

## வழிமுறைகள்

- தேசிய கொள்கைகள் மற்றும் திட்டமிடல் அதிகாரசபையின் கீழ்தேசிய வர்த்தக மற்றும் தொழிற்பாட்டுச் சபையொன்று நியமிக்கப்படும்.
- துரிதபொருளாதார அபிவிருத்தியின் இலக்குகளை நிறைவேற்றுவதை இலக்காகக்கொண்ட இறக்குமதி வரிக்கொள்கையொன்று நடைமுறைப்படுத்தப்படும்.
- வெளிநாட்டுச் சந்தைகளிலிருந்து உற்பத்திகள் இறக்குமதி செய்யப்படும்போது அதற்குச் சமாந்தரமாக உள்நாட்டு உற்பத்திகளுக்கான சந்தைகள் பாதுகாக்கப்படும்.

- மருந்துகள், அத்தியவசிய உணவுப்பொருட்கள் போன்றவற்றைத் தட்டுப்பாடின்றி அவற்றின் தரம் பாதுகாக்கப்படும் விதத்தில் விநியோகிக்கப்படுவதுடன் அரசாங்கம் நியாயமான முறையில் வர்த்தகத்தில் தலையீடு செய்யும்.
- அத்தியவசியப் பண்டங்களுக்கான தேசிய விலைக் கொள்கையொன்று நடைமுறைப்படுத்தப்படும்.
- பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான, விலைகள், தரங்கள் மற்றும் நுகர்வோர் உரிமைகள் தெ டர்பான விடயங்களில் முழுமையான அறிவையும் தெளிவையும் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தின் அனுசரனையுடன் நடைமுறைப்படுத்தப்படும்
- கிராமியமட்டத்திலான உற்பத்திகளை நாடளாவிய ரீதியில் விநியோகிப்பதற்கான ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் பொறிமுறையொன்றை உருவாக்கி, அதற்கான களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக நிலையங்கள் கிராமிய மட்டத்தில் தாபிக்கப்படும்.
- சுயதொழிலாக சில்லறைக் கடைகளைக்கொண்டு நடாத்துபவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் தலையிடுசெய்தல், தொழில்நுட்ப வழிகாட்டல், நிதி ஆலோசனை வழங்கல் என்பவற்றுக்காக அரசாங்க நிறுவன வலையமைப்பொன்று பிரதேசமட்டதில் நிறுவப்பபடும்.
- பல்வேறுவகைப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான தரநியமங்களைத் நிர்ணயித்து மேற்பார்வை செய்வதற்கான அனைத்து நிறுவனங்களும் தேவையானவாறு விரிவுபடுத்தப்படும். தற்போது காணப்படும் நிறுவனங்களின் விடயப்பரப்புக்களில் உள்ளடங்காத பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் நிறுவனங்களும் சட்ட அந்தஸ்த்துக்களும் ஏற்படுத்தப்படும்.
- வியாபாரத்துடன் தொடர்புடைய அனைத்து அரசாங்க, கூட்டுறவு மற்றும் தனியார்துறைகளிலுள்ள மனிதவளங்களுக்கும் சொத்துக்களுக்குமான காப்புறுதி முறைகள் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்..
- இதுவரை காலமும் அரசாங்கங்களால் செய்யபப்ட்டுள்ள அனைத்து சர்வதேச, வலயமட்டங்களில் இரதரப்பு மற்றும் பல்தரப்பு மட்டங்களிலான வர்த்தக ஒப்பந்தங்களும் மீளாய்வு செய்யப்படும்.
- இணையம் உள்ளிட்ட நவீன விளம்பர முறைகளைப் பயன்படுத்தி உள்நாட்டு உற்பத்தி அடையாளங்களை சர்வதேசசந்தையில் அறிமுகப்படுத்தி சர்வதேச கண்காட்சிசகளில் பங்கேற்பதற்கு இலங்கைவர்த்தகர்களுக்கு அரசாங்க அனுசரணையில் வாய்ப்புக்கள் செய்துகொடுக்கப்படும்.
- வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் உழைக்கப்படும் அந்நியச்செலாவணியைக் குறுகிய காலத்தினுள் இலங்கைக்கு எடுத்துவரும் வியாபாரிகளுக்கும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கப்படும்.

- புதிய இலகுபடுத்தப்பட்ட இறக்குமதி, ஏற்றுமதிவரி முறையொன்று அறிமுகப்படுத்தப்படும்.
- பொட்களை இறக்குமதி செய்கின்றபோதும் ஏற்றுமதி செய்கின்ற போதும் ஏற்றுமதியாளர்கள் முகங்கொடுக்கும் பலதரப்பட்ட (இலஞ்சம்வழங்க வேண்டிஏற்படுகின்றமை, தாமதமடைதல் போன்ற) பிரச்சினைகளைக் குறைப்பதற்குத் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- தற்போது உலகிலும் எமது நாட்டிலும் பரவலடைந்துவரும் இணைய வழிவர்த்தகத்தின் ஊடாக (OnlineTrading) பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான வசதிகள் விரிவுபடுத்தப்படும். தனித்தனியாகப் பொருட்களைக் கொள்வனவு செய்கின்றபோது பொருளைக்கப்பலேற்றி அனுப்புவதற்கான போக்குவரத்துச் செலவு அதிகமாகக் காணப்படுகின்றமை, அதற்காக எடுக்கும் காலம் அதிகமாக இருப்பதனால் குறித்த பொருளைக் கொள்வனவு செய்யாது நிராகரிக்க முடியாதுள்ளமை என்பன தற்போது இணைய வழியில் பொருட்களைக் கொள்வனவு செய்யும் நுகர்வோர் எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினைகளாக உள்ளன.
- இதற்குப்பரிகாரமாக OnlineTrading வர்த்தகத்திற்கான நுகர்வோர் பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் உருவாக்கப்படும்.
- பொருட்களைத் தனித்தனியாகக் கப்பலேற்றுவதையும் அதிககாலம் எடுப்பதையும் குறைப்பதற்காகவும் OnlineTrading வர்த்தகத்திற்காக மாத்திரம் பயன்படுத்தப்படும் களஞ்சியத் தொகுதிகளை (OnlineTradingWareHouses) நிர்மாணிக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கு முதல் இரண்டு வருடங்களிலும் வரிச்சலுகை வழங்கப்படும்.

## 09. நிதித்துறை

நாட்டின் நிதி அடிப்படை உற்பத்தி நடவடிக்கைகளிலுள்ள ஆற்றலினூடாக சுட்டிக்காட்டப்படுகின்றது. நிதி அடிப்படையில் காணப்படுகின்ற வலிமையின் அடிப்படையிலேயே பொருளாதாரவலிமை நிர்ணயிக்கப்படுகின்றது. இன்று, இலங்கையில் தொடர்ச்சியாக விலை அதிகரித்துவருகின்றமை, கடனில் தங்கியிருக்கும் நீண்டகால முறையற்ற உபாய முறைத்திட்டத்தையும், முறையற்ற நிதிக்கொள்கைகளையும் பின்பற்றுதல், வெளிநாட்டு வர்த்தகம் நட்டநிலையில் காணப்படுகின்றமை, தொடர்ச்சியாகக் காணப்படுகின்ற அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை மற்றும் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார நிலை இல்லாமை என்பவற்றினால் இன்று இலங்கை கடும் நிதிநெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது. குறிப்பாக இதுவரை காலமும் கையாளப்பட்டு வந்ததிறந்த பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஏற்பநிதிக் கொள்கைகளும் செயற்படுத்தப்பட்டமையால் இந்த நிதி நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

உரிய முறையில் அரச துறை தேசிய பொருளாதாரத்தில் பங்களிக்காமை, திட்டமி

டப்படாத முறையில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு முதலீடுகள் என்பவற்றினூடாக ஏற்படுகின்ற நாணயமாற்று அஸ்தீரத்தன்மையினால் ரூபாவின் பெறுமானம் தொடர்ச்சியாக குறைவடைதல் என்பன நிதித்துறையின் வீழ்ச்சிக்குக் காரணங்களாகும். ஊழல், இலஞ்சம், வீண்விரயம், அரசியல் தலையீடுகள் மற்றும் வினைத்திறனற்ற முகாமைத்துவம் என்பவற்றினால் பாரியளவில் நட்டத்தை அடைகின்ற அரச நிறுவன முறைமை ஒன்றை அனுமதித்தமை நாட்டின் நிதி நிலை வங்கரோத்துக்குக் காரணங்களாகும்.

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது வருமானத்தை முழுமையாக வரியில் தங்கிருக்கச் செய்தல், வினைத்திறனற்றவரிக் கொள்கைகள் என்பவற்றின் காரணமாக பொதுமக்களுக்கு பெருமளவான வரிச்சுமையை ஏற்க நேரிடுதல், வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு பின்பற்றும் பலவீனமான நிதிக்கொள்கைகள் என்பன நிதித்துறையின் வீழ்ச்சிக்கான காரணங்களாக மாறியுள்ளன.

நிதி நிறுவனங்கள் தொடர்பில் சரியான நிதிக்கொள்கைகள் பின்பற்றப்படாமை மற்றும் இன்று காணப்படுகின்ற நிதிசார்ந்த சட்டதிட்டங்களும் சட்டங்களும் ஒழுங்கு விதிகளும் நவீன காலத்திற்கு ஏற்ற விதத்தில் இற்றைப்படுத்தப்படாமை என்பவற்றின் காரணமாக நிதித்துறையில் பல பிரச்சினைகள் எதிர் நோக்கப்படுகின்றன.

இன்றைய இலங்கையின் பொருளாதாரத்தில் பின்பற்றப்படுவது யாதெனில் உள்நாட்டு உற்பத்தி அல்லது தேசிய பொருளாதாரத்திற்கு எந்த ஒரு கவர்ச்சியும் பொறுப்பும் இல்லாத முற்றிலும் தனிப்பட்ட நிதி மூலதனத் தேவைகளுக்கான ஊழல் நிறைந்த வெளிநாட்டு நடைமுறை ஒன்றாகும். இது வெளிநாட்டு சர்வாதிகாரிகளினதும் மற்றும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வாதிகார அமைப்புகளினதும் அறிவுரைகளினதும் கட்டளைகளினதும் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

## தீர்வுகள்

நீண்ட கால மற்றும் குறுங்கால அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளக்கூடிய விதத்தில் அரசாங்கத்தின் நிதிக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தல். அதன் கீழ், அரசாங்கத்தின் வருமானத்தையும், அரசாங்கத்தின் செலவினங்களையும் மற்றும் முதலீடுகளையும் வினைத்திறன் வாய்ந்ததாகவும் பயனுள்ளதாகவும் கட்டுப்படுத்தி, அவற்றின் நன்மைகள் முழு மக்களுக்கும் பிரிந்துச் செல்லக்கூடிய வகையில் நிதிக்கொள்கைகளைத் தயாரித்து, வினைத்திறனின்மை, ஊழல், இலஞ்சம், வீண் விரயம், தகாதபாவனை என்பவற்றை முற்றிலும் ஒழிப்பதை அரசாங்கத்தின் இன்றியமையாத ஒரு பொறுப்பாக மதிக்கச் செய்தல்.

அரசாங்கத்தின் நிதிமுகாமைத்துவத்துவ பொருளாதார நடவடிக்கைகளையும் மற்றும் நவீன நிதிச்சந்தைகளிலுள்ள காத்திரமான நடவடிக்கைகளையும் நாட்டிற்கு நன்மை அளிக்கக்கூடிய விதத்தில் பங்களிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

பாரியளவான உற்பத்திகள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றுக்கு வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளும் விடயத்தைக் கருத்திற் கொள்ளல்.

## வழிமுறைகள்

- நாணயமாற்றுக் கட்டுப்பாட்டு விடயங்கள், பங்குச் சந்தைகள் மற்றும் மூலதனநிதிச் செயற்பாடுகள் என்பவற்றை பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் வகையிலும் நிதியின் ஸ்தீரத்தன்மையைப் பாதுகாக்கும் வகையிலும் ஒழுங்குறுத்துவதற்குத் தேவையான சட்ட, நிருவாக நடவடிக்கைகளை எடுத்தல்.

- அரசாங்க வங்கிகள் அடங்கலாக பொதுப்பயன்பாடுகள் சம்பந்தமான நிறுவனங்களை தனியார் மயப்படுத்தப்படுவதைத் தடுத்தல். அதிகளவில் அரசாங்க உரித்து இருக்கின்ற விதத்தில் பாரிய ஒரு வங்கிமுறைமையை நிர்மாணித்தல்.

- சாதாரண மற்றும் நியாயமான புதிய வரிமுறைமை ஒன்றை நடைமுறைப் படுத்தல். சுங்கத் தீர்வையை முறைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தும் பொருட்டு ஸ்கானின் வசதிகளை உள்ளிட்ட நவீனத் தொழில்நுட்பமுறைமைகளை அறிமுகப்படுத்தி, சகல ஊழல்களையும் மோசடிகளையும் முற்றிலும் ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- இலங்கையின் பொருளாதாரத் திட்டங்களின் உண்மையான தேவைகளின் பிரகாரம் மாத்திரம் கடன்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல். தற்பொழுது பெற்றுள்ள அதிகளவான கடன்களைப் பதிவழிப்பதற்கும் மற்றும் ஏனைய சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தல்.

- பாரியளவான அரசாங்க தொழில் முயற்சிகளான மின்சாரம், துறைமுகங்கள், பெற்றோலியம், நீர்வழங்கல், ரெலிகம், விமானநிலையம் போன்ற நிறுவனங்களில் நிலவுகின்ற ஊழல், மோசடிகளையும் வினைத்திறனின்மையையும் முற்றிலும் ஒழித்து, இவற்றை ஆகக்கூடிய வருமானத்தையும் இலாபத்தையும் ஈட்டும் வினைத்திறன் வாய்ந்தநிலைக்குக் கொண்டு வருதல்.

- அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் (Financial Regulations) மற்றும் பொது நிருவாக ஒழுங்கு விதிகள் (Administrative Regulations) என்பவற்றை இன்றைய நிலைக்கு ஏற்றவகையில் இற்றைப்படுத்தல்.

- அரசாங்கத்தின் கொள்வனவு நடபடிமுறையை நிலையான சொத்துக்களைக் பெற்றுக் கொள்ளல்) முறைப்படுத்தி, அதன் கீழ்கேள்வி அறிவித்தல் நடைமுறையை வெளிப்படைத் தன்மையுடன் ஒரு அரசாங்கப் பொறிமுறைத் திட்டத்தின் கீழ் முன்னெடுத்துச் செல்லல்.

- தற்பொழுது நடைமுறையிலிருக்கின்ற போட்டித் தன்மை வாய்ந்த கேள்வி விலைமனுக்கள் அழைக்கும் நடைமுறையைப் பின்பற்றாமல் அரசாங்கம் கேள்வி ஒப்பந்தங்களை (Unsolicited tenders) வழங்கும் முறையை நிறுத்தி, போட்டித்தன்மை வாய்ந்த கேள்வி விலைமனுக்களை அழைக்கும் (Competitivebidding) அடிப்படையில் கேள்வி ஒப்பந்தங்களை வழங்குவதற் குநடவடிக்கை எடுத்தல்.

- அரசாங்கத்தின் கணக்காய்வு நடைமுறையை மிகவும் வலிமைப்படுத்தி, அதனை முற்றிலும் சுயாதீனமான பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறக்கூடிய ஒரு அமைப்பாக நிருவகித்துச் சென்று, பல துறைகளையும் பிரதி நிதிப்படுத்தும் விஷேட அறிவையுடைய தொழில் நிபுணர்களை இந்த அமைப்புக்கு ஆட்சேர்த்து, கணக்காய்வு நிறுவனங்களுக்கு அவசியமான வளங்கள் கிடைப்புத் தன்மையையும் பாதுகாப்பையும் உறுதிசெய்தல்.
- அரசாங்கத்தின் நிதிக்கொள்கைகள் மற்றும் நிதி ஒழுங்கு விதிகள் என்பன பற்றி சகல நிறுவனங்களிலுமுள்ள ஊழியர்களையும் பொது மக்களையும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல்.
- உற்பத்தியையும் நவீன தொழில் நுட்பத்தையும் அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு வரித்தீர்வை, வரி, வங்கி வசதிகள், குடிவரவு குடியகல்வு வசதிகள் மற்றும் உதவிகள் என்பவற்றில் கவனம் செலுத்தல்.

## 12. வலுத்துறை

இலங்கை வலுத்துறையில் உள்ள முக்கியமான பிரச்சினை பகிர்ந்தளித்தல் மற்றும் நுகர்வின் பொது ஏற்படும் அதிகளவிலான வீண்விரயமாகும். விசேடமாக உற்பத்தி நிலையங்கள் தேவையான தரத்திற்கு அமைய நிர்மாணிக்கப்படாமை, முகாமைத்துவ குறைப்பாடுகள் காரணமாக அவை எதிர்ப்பார்க்கும் இலக்குகளை அடையத் தவருதல். எரிபொருள் நிரப்ப நிலையங்கள், மின்சார விநியோகம் ஆகிய பல வலுத்துறைகள் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் மாற்றுவலு சக்தி தோற்றுவாய்கள் பற்றிய ஆய்வுகள் தொடர்பில் போதியளவு கவனம் செலுத்தப்படாத காரணத்தாலும் வலுத்துறை பல பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளது.

இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களில் நடைபெற்று வரும் அதிகளவிலான மோசடிகள், ஊழல்கள் மற்றும் மின்சாரம், பெற்றோலியம், எரிவாயு ஆகியவற்றின் விலை அதிகளவில் அதிகரித்தல் ஆகிய காரணங்கள் வலுத்துறையை அதிகூடிய விளைத்திறனுடையதாக பயன்படுத்துவதற்காக மக்களுக்கு விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப அபிவிருத்தி அடையாமையினாலும் இலங்கை வலுத்துறை பிரச்சினைகளை எதிர்நோக்ககின்றது.

மின்சார கட்டணம் அதிகமாக உள்ளதால் புதிய கைத்தொழில் உருவாக்கம் பின்தங்கிய நிலையில் உள்ளதுடன், மின்சார நுகர்வின் 60 சதவீதம் வீட்டுப்பாவனையான இருப்பதன் ஊடாக அந்நிலை தெளிவாகியுள்ளது.

(திட்டமிட்டு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கைத்தொழில் துறை 60 சதவீத மின்சாரத்தை நுகர்கின்றது)

மின்சார உற்பத்தி அரசியல் செல்வாக்குடைய தேர்ந்தெடுக்கப்பட்ட சில வர்த்தகர்களுக்கு படிப்படியாக வழங்கப்பட்டு வருகின்றது. உலக நாடுகள் பெற்றோலிய பாவணையை குறைத்து மாற்று எரிபொருள் தோற்று வாய்களின் பால் கவனம் செலுத்தி வரும் அதேநேரம் எமது நாட்டில் அது தொடர்பில் எவ்விதத்திட்டமும் அமைக்கப்பட்டில்லை.

## தீர்வுகள்

வலுசக்தி உற்பத்தி, முகாமைத்துவம் மற்றும் மாற்று வலுசக்தி பற்றிய ஆய்வுகளும் திட்டங்களும் தொடர்பில் பொறுப்புக்கூறும் வலுசக்தி பற்றி மத்திய திட்டமிடல் சபை யொன்று தாபிக்கப்படும். தேசிய மின் சக்தித் தேவையின் 100 சதவீதத்தை உள்நாட்டு வளங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

## வழிமுறைகள்

- வலுசக்தி தொடர்பில் இலங்கை வெளிநாட்டவர்களுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களை, நாட்டின் சுபீட்சத்தினை பாதுகாத்தல் மற்றும் தேசிய தேவைளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் அவற்றை திருத்துவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- வலுசக்தி, பொருளாதாரத்துறைக்கும் அதேபோல் மனித வாழ்வுக்கும் மிக முக்கியமானதெனக் கருதி வலுசக்தி பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- வளி அமுக்கம், சூரிய வெப்பம், நிலத்தின் வெப்பம், கடல் அலைகள், கடல் நீர், தரிசு நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள விசேட தாவரங்கள், குளத்து அணைகள், வெந்நீர ் ஊற்றுகள் உட்பட்ட மின்வலு உற்பத்தித் தொகுதியொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வளி அமுக்கத்தினால் நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய மெகாவோல்ட் 20,000 இல்10-15 சதவீதத்தை ஆரம்ப ஐந்து வருடத்திற்கள் உற்பத்தி செய்யப்படும்.
- போக்குவரத்து கட்டிட நிர்மாணிப்பு மற்றும் ஏனைய துறைகளில் வலுசக்தி பாதுகாப்பை அத்தியாவசிய நோக்கமாகக் கொண்டு சட்டவாக்கம் மற்றும் ஆலோசனைகள் உட்பட்ட தொழில் நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- எண்ணெய், எரிவாயு வள ஆய்வு மற்றும் அகழ்வு நடவடிக்கைகள் தொடர்பி ல் தற்போதுள்ள செயல் முறையை மீளாய்வு செய்து அவை நாட்டுக்கு சாதகமான முறையில் திருத்தப்படும். எண்ணெய், எரிவாயு நடவடிக்கைகள் துரிதப்படும்.

- மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகிய அரச நிறுவனங்களின் வீண்விரயம் மற்றும் ஊழல்களைத் தவிர்த்து அங்கு நிர்வாகம் முறைமைப்படுத்தப்படும்.
- போக்குவரத்துத் துறையில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகளின் ஊடாக அவற்றுக்காக செலவிடப்படும் வலுசக்தியை சிக்கனமாகப் பயன்படுத்தி அதனை உற்பத்தி கைத்தொழிலுக்காகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- நவீன வலுசக்தி உற்பத்தி, பகிர்ந்தளிப்பு மற்றும் பயன்படுத்தும முறைகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாகவலுசக்தி வீண்விரயத்தையும் உயிர் மற்றும் சுற்றாடல் பாதிப்புகளும் குறைக்கப்படும்.

## 13. போக்குவரத்து

தேசிய போக்குவரத்து கொள்கை யொன்று இல்லாததால் பொதுவாக மக்கள் யாவரும் போக்குவரத்துத்துறை தொடர்பில் பல பிரச்சனைகளை எதிர்நோக்கி வருகின்றனர். பொதுவாக போக்குவரத்து சேவைகளில் உள்ள சனநெருக்கடி, அரச போக்குவரத்து சேவையின் பின்தங்கிய நிலை, அரச மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகள் பொதுவான கொள்கையொன்றின் கீழ் செயற்படுத்தப்படாமை, வீதிகளில் நிலவிவரும் அதிகளவிலான வாகன நெருக்கடிகள் போன்ற காரணங்களால் போக்குவரத்தில் காலதாமதம் ஏற்படல், விளைத்திறனுடைய பல இலட்சக்கணக்கான மனித மணித்தியாலங்கள் வீண்விரயமாதல், சுற்றாடல் மாசடைதல், தேசிய நிதி வீண்விரயமாதல், பெருமளவில் ஏற்பட்டு வரும் வாகன விபத்துகள், சரியான நேர அட்டவணைக்கு ஏற்ப பேரூந்துகளும், புகையிரதங்களும் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படாமை. இரவு நேரங்களில் கிராமப் பகுதிகளிலும் போக்குவரத்து சேவைபின் தங்கிய நிலையில் இருத்தல், வீதிகள் சரியான முறையில் பராமரிக்கப்படாமை, முறையின்றி வாகனங்கள் இறக்குமதி செய்யப்படல், வீதி சட்டங்கள் சரியான முறையில் செயற்படுததப்படாமை, பொது வாகன நிறுத்துமிடங்கள் வரையறுக்கப்பட்ட நிலையில் இருத்தல் மற்றும் அவை பராமரிக்கப்படாமை, பொதுவாக நிறுத்துமிடங்கள் வரையறுக்கப்பட்ட நிலையில் இருத்தல், அவை பராமரிக்கப்படாமை, வாகனங்களின் உதிரிப்பாகங்களும், வேறு பராமரிப்பு செலவினங்களும் அதிகரித்தல் போன்ற பல பிரச்சினைகள் அத்துறையில் நிலவிவருவதைக் காணமுடியும்.

அதேபோல் வாகன ஏற்றுமதி, உற்பத்தி, வீதி நிர்மாணிப்பு, வீதி பாராமரிப்பு, விபத்துகளைக் குறைத்தல், எரிபொருள் போன்ற போக்குவரத்துதுறைகள் தொடர்பில் பல அரச நிறுவனங்கள் இருந்தபோதிலும் அவைகளுக்கிடையே முறையான ஒருங்கிணைப்புகள் இல்லாமையும் போக்குவரத்துத்துறையில் பிரச்சினைகளை எதிர்நோக்குவதற்கான காரணங்களாகும்.

## தீர்வுகள்

போக்குவரத்து வசதிகளை வழங்கல் அரசின் பொறுப்பாகவும் மக்கள் சேவையாகவும் கருதப்படுவதாலும் பொது மக்களுக்கு ஒழுக்கமான, வசதியான. வினைத்திறனுடைய , மதிப்பிற்குரிய போக்குவரத்து சேவையொன்றை வழங்குவதற்கான தேசிய கொள்கையொன்றும், செயற்றிட்டமொன்றும் தயாரிக்கப்படும்.

## வழிமுறைகள்

- பயணிகள் போக்குவரத்து, பொருட்களை கொண்டுசெல்வதும் பொருளாதார செயற்பாடுகளில் முக்கிய இடத்தை வகித்துவருவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் அதனை மக்கள் வெறுப்புக்கு உட்படாதவாறு செயற்படுத்துவது அரசின் பொறுப்பாகக் கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- அரச மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அரச மற்றும் தனியார் போக்குவரத்துத் துறையை பொதுவான திட்டமொன்றின் கீழ் செயற்படுத்தப்படும்.
- புகையிரத சேவையை துரிதமான, பூரண நவீனமயப்படுத்தலுக்கு உட்படுத்தி, அதனை மக்கள் போக்குவரத்து மற்றும் பொருட்களை கொண்டுசெல்வதற்காக (விசேடமாக விவசாய, கால்நடை, கடற்றொழில் உற்பத்திகளையும் கட்டிடப் பொருட்கள், தொழில்நுட்ப உற்பத்திகள்) விஸ்தரிக்கப்படும். பிரதான நகரங்களிலும் சனத்தொகை நெருக்கடியான நகரங்களுக்கும் இடையே நிலக்கீழ் புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்படும். அது தொடர்பில் தேசிய மனித வளங்களும் பௌதீக வளங்களும் பயன்படுத்தப்படும்.
- ஓய்வு பெற்றவர்களும் மூத்த பிரஜைகளும் சலுகை கட்டணத்திற்கு போக்குவரத்தில் ஈடுபடுவதற்கான செயற்றிட்டமொன்று தயாரிக்கப்படும்.
- பிரதான வீதிக்கு பிரவேசிப்பதற்காக 2 கிலோ மீட்டர்களுக்கு மேல் தூ ரத்திற்கு செல்லவேண்டியுள்ள 1400 கிராமிய பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், தனியார் துறையினதும் ஒத்துழைப்புடன் அந்த கிராமிய பிரதேசங்களுக்கு மினி பஸ்களை வழங்கல்.
- இரவு நேரங்களிலும் சில பிராந்திய பிரதேசங்களிலும் வசு வண்டிகள் போக்குவரத்தில் இல்லாததால் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதைத் தவிர்ப்பதற்காக இரவு நேரங்களிலும், பயணிகள் குறைவாக காணப்படும் பிராந்திய பாதைகளிலும் வசு வண்டிகளை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கான செயற்றிட்டமொன்று தயாரிக்கப்படும்.
- சுற்றுலாத்துறை வலயங்களை ஒருங்கிணைக்கும் வசு, புகையிரத, கப்பல்

மற்றும் விமான போக்குவரத்து சேவைகளை விஸ்தரித்தல்.

- நாட்டின் அபிவிருத்தியுடன் ஏற்படும் எதிர்கால தேவைகளை அடிப்படையாகக் கொண்டு புதிய நெடுஞ்சாலை தொகுதிகளை நிர்மாணித்தல், தற்போதுள்ள வீதிகளை புனரமைத்தல் , அவற்றை விஸ்தரித்தல், தேவைக்கேற்ப வாகன நிறுத்துமிடங்களை அமைத்தல் தொடர்பில் பொதுவான திட்டமொன்றை அமைத்து அதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளளப்படும்.
- புதிதாக வீதிகள் நிர்மாணிக்கப்பட்டபின், அவை விஸ்தரிக்கப்பட்டபின் வேறு சேவைகளை( தொலைபேசி இணைப்புகள், நீர் குழாய்களை பொறுத்துதுல், மின்சார கம்பிகளை இணைத்தல்) பெற்றுக்கொள்வதற்காக வீதிகள் சேதமாக்கப்படுவதால் ஏற்படும் வீண் விரயத்தையும் , தடைகளையும் நீக்குவதற்காக வீதிகளை அமைக்கும்போது அச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் இணைந்து திட்டமிட்டு செயற்படல்.
- மக்கள் போக்குவரத்து மற்றும் பொருட்களை கொண்டு செல்வதற்காக கடல், உள்ளக விமான போக்குவரத்துகள் மற்றும் உள்ளக நீர் வழிகளைப் பயன்படுத்தல்.
- நெடுஞ்சாலைகள் இருபுறத்தில் பயணம் செய்யும் பயணிகள் பாதுகாப்புடனும் வசதியாகவும் பயணம் செய்யக்கூடியதாக பாதசாரிகள் நடைபாதைகளையும் கடவைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தொழில் மற்றும் வேறு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் அடிக்கடி பிரயாணம் செய்வதற்கான காரணங்கள் பற்றி பரவலாக ஆராய்ந்து பயணிகள் மற்றும் வீதி நெருக்கடிகளை குறைக்கக்கூடிய விளைத்திறனுடைய மாற்றத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். (உதா- நியமனங்கள், இடமாற்றங்கள் தொடர்பான நடபடிமுறைகளை மாற்றியமைத்து வசிப்பிடத்திற்கு அருகில் அல்லது பணிபுரியும் இடததிற்க அருகில் வசிப்பதற்கான வசதிகளை வழங்கல். அரச சேவைகளை முடியுமான வரை பன்முகப்படுத்தல், பாடசாலைகளை அபிவிருத்தி செய்து மாணவர்களின் வசிப்பிடத்திற்கு அருகிலுள்ள பாடசாலைகளை அவர்களுக்கு பெற்றுக்கொடுத்தல்)
- போக்குவரத்து கட்டணங்களை குறைப்பதனை இலக்காகக் கொண்டு பொது போக்குவரத்து சேவையில் ஈடுபடுபவர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்தல், உதிரிப்பாகங்கள் தொடர்பிலும் வரிச் சலுகைகள் வழங்கப்படுவதுடன் சலுகை கட்டண அடிப்படையில் எரிபொருள் பெற்றுக்கொள்ளும் முறையொன்று அமைக்கப்படும்.
- மிதிவண்டி, மோட்டார் சைக்கிள, முச்சக்கர வண்டி ஆகியவற்றின் பயன்பாட்டினை முறைமைப்படுத்தி அவை பாதுகாப்பான போக்குவரத்து துறைகளாக மாற்றப்படும்.

- சீர்த்திருத்தம் மற்றும் நவீனமயப்படுத்தக்கூடிய போதிலும் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ள வசு வண்டிகள், வேன் மற்றும் புகையிரத பெட்டிகள், என்ஜின்ககளை அரச மற்றும் தனியார் துறையின் இணைந்த செயற்றிட்டத்தின் கீழ் சீர்த்திருத்தி அவற்றை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- நகரங்களில் உள்ள புகையிரத நிலையங்களை முழுமையாக நவீனமயப்படுத்தி தற்போதுள்ள 6 பெட்டிகளைக் கொண்ட புகையிரதங்களுக்குப் பதிலாக 15 புகையிரத பெட்டிகளையும் கூடுதான ஆசனங்களையும் கொண்ட புகையிரதங்களை போக்குவரத்தில் ஈடுபடுத்தல்.
- கொழும்பு நகரத்திற்குப் பிரவேசிக்கும் 6 நெடுஞ்சாலைகளில் முற்பகல் மற்றும் பிற்பகலில் நிலவிவரும் வாகன நெருக்கடியைக் கட்டுப்படுத்துவதற்காக குளிரூட்டப்பட்ட, கூடிய ஆசனங்களைக் கொண்ட இருதட்டு வசு வண்டிகளை போக்குவரத்தில் ஈடுபடுத்தல்.
- வசு வண்டிகள், புகையிரதம் ஆகியவற்றில் பயணம் செய்யும் போது விபத்துகளால் மரணமடையும் பயணிகளுக்கு 10 இலட்சம் ரூபா நட்டஈடாக வழங்கப்படும்.
- மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களுக்கான மின்சார தொடர்பு நிலையங்கள் இல்லாததால் அக்கருத்திட்டம் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது. அதற்கான தீர்வாக நாடளாவிய ரீதியில் 5 வருடங்களுக்குள் 6000 மின்சார நிரப்பு நிலையங்கள் தாபிக்கப்படும். அதற்கான சட்டங்கள் ஆரம்ப ஆறு மாதங்களுக்குள் தயாரிக்கப்படும்.
- தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள ஹய்பிரிட் வாகனங்களுக்கான வரி குறைக்கப்படும்.

## 14. வீடமைப்பு

வீடென்பது நான்கு சுவர்களையும் கூரையினையும் கொண்ட எந்தவொரு கட்டிடமும் அல்ல. நீர், மின்சாரம், கழிவறை வசதிகள், சுகாதார வசதிகள் ஆகிய உள்ளடங்கிய போதியளவான இட வசதிகளைக் கொண்ட இடமாக இருப்பதுடன் இலங்கையில் அனேகமான வீடுகள் இவ்வாறாக வாழ்வதற்குப் பொருத்தமற்ற நிலைமையில் உள்ளன. மக்களில் அதிக தொகையினர் சேரி, ஒழுங்கைகள், லைன் அறைகள் போன்ற மிகவும் கீழ் தரமான வாழ்வாதார நிலைமையில் வாழ்க்கையினை ஓட்டுவதுடன் அதிகரிக்கின்ற சனத்தொகைக்கு ஏற்ப முறையற்ற வகையில் நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகளினால் விசேடமாக நகரப் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள நெருசலையும் அதனுடன் தொடர்புடைய சமூகப் பிரச்சினைகளும் இலங்கையில் வீடமைப்புப் பிரச்சினைகளை அதிகரிப்பதற்கு ஏதுவாக உள்ளன.

பொது கட்டிடத் தொகுதி மற்றுமன்றி வீடு அமைந்துள்ள பிரதேசத்தில் வதிவில் உள்ளவர்களுக்குக் கிடைக்கின்ற பாதுகாப்பு, கல்வி, நீர் மற்றும் சுகாதார வசதிகள் போன்ற வேறு வசதிகள், போக்குவரத்து வசதிகள், தொழில்வாய்ப்புக்கள் மற்றும் இயற்கையான அரவைணைப்பு போன்றன மிகவும் அத்தியவசியமாக இருப்பதுடன் நாட்டில் சில நிலப்பிரதேசங்கள் வதிவதற்கு தெரிவு செய்யப்படாமைக்கும் நகர மயப்படுத்தல் உக்கிர பிரச்சினைகள் ஏற்படுவதற்கு காரணியாக உள்ளன.

## தீர்வுகள்

சகல பிரஜைகளுக்கும் உரிய வசதிகளுடன் கூடிய சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் ஒழுக்க விழுமியமாக வாழக் கூடிய வீடொன்றை பெற்றுக் கொள்வதற்கான உரிமை அடிப்படை மனித உரிமையாக ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் அது தொடர்பாக பங்குபற்றல் அரசின் பொறுப்பொன்றாகக் கருதப்படும்.

## வழிமுறைகள்

- வதிவிற்கு வீடொன்று இல்லாத சகல பிரஜைகளுக்கும் வீட்டொன்றை பெற்றுக் கொள்கின்ற நிகழ்ச்சித் திட்டமொன்று அமுல்படுத்தப்படும்.
- அரச மற்றும் தனியார் துறையின் பங்குபற்றலுடன் அடிப்படை வசதிகள் அனைத்தையும் உள்ளடக்கிய தொடர்மாடிக் கட்டிடத்தொகுதிகளை உருவாக்குதல்.
- குடும்ப அலகுகளின் தன்மைக்கு ஏற்ப பல்வேறுபட்ட வீடமைப்பு செயற்திட்டங்களை சகல நகரங்களிலும் ஆரம்பித்தல். அதன் கீழ்:
- ஒரு சோடிக்குப் போதுமான வீடொன்று (ஒரு படுக்கையறை, ஒரு ஸ்தோப்பு, குளியலறை மற்றும் சமயலறை)
- பிள்ளையொன்றுடன் கூடிய ஒரு குடும்பத்திற்குப் போதுமான வீடொன்று (இரு படுக்கையறை, ஒரு முன் சாலை, குளியலறை மற்றும் சமயலறை)
- மூன்று பிள்ளைகளுடன் வாழ்கின்ற குடும்பமொன்றுக்குப் போதுமான வீடு (மூன்று படுக்கையறைகள், ஒரு ஸ்தோப்பு, குளியலறை மற்றும் சமயலறை)
- அரச மற்றும் தனியார் துறைக் கம்பனிகளினால் பொது மக்களை இலக்கு வைத்து புதிய வீடமைப்புத் தொகுதிகளை நிர்மாணிப்புச் செய்வதன் ஊடாக ஒரு வருடத்தின் போது வீட்டு அலகுகள் 20,000 நிர்மாணிக்கப்படுவதுடன் அந்த வீடுகளை பெற்றுக் கொள்வதற்கு மக்களுக்கு நிதிச் சேவைகளை வழங்குதல்.

- புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற தற்பொழுது நிலவுகின்ற சகல தொடர் மாடிக் கட்டிடத் தொகுதி தொடர்பாகவும் திருமண மற்றும் மரண செயற்பாடுகள் தொடர்பாக சாலை வசதிகளை நிர்மாணித்தல். அத்தோடு சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானமொன்று நிர்மாணித்தல். பூங்கா, கடைத்தொகுதிகள், மருத்துவ நிலையங்கள், சிற்றூண்டிச்சாலைகள் போன்ற பொது வசதிகளை வழங்குகின்ற சேவை நிலையமொன்றைக் கட்டியெழுப்புதல்.
- ஆபத்தான பிரதேசங்களில் வாழ்கின்றவர்கள், சேரிகள், ஒழுங்கைகள் போன்றவற்றில் வசிக்கின்றவர்கள் அனைவருக்கும் வசதிகளுடன் கூடிய வீட்டுத்தொகுதிகளில் வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதுடன் தற்பொழுது லைன் அறைகளில் வாழ்கின்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு வசதிகளுடன் கூடிய வீடுகளை வழங்குவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும்.
- வீடமைத்தல் தொடர்பாக அரச வங்கிகளில் குறைந்த வட்டி வீத வீடமைப்பு கடன் திட்டங்களை அமுல்படுத்தல். வீடமைப்புச் செய்தல் தொடர்பாக கடன் வழங்குகின்றபோது பரம்பரை பரம்பரையாக அவற்றை தாங்கிக் கொள்ளக் கூடிய வகையில் கடன் உதவி முறைமையொன்று அறிமுகம் செய்து தரப்படும்.
- உரிய தரத்தில் இல்லாத வீடுகளை உரிய தரத்திற்கு மீளக் கட்டியெழுப்பும் பொருட்டு வருடாந்தம் வீட்டுரிமையாளர்கள் 25,000 பேருக்கு ரூபா 100,000 முதல் 500,000 வரையான பணத்தொகையினை நூற்றுக்கு 1 சதவீத வட்டிவீதத்தில் வழங்குதல்.
- குறைந்த செலவுடன் கூடிய வீடுகளை நிர்மாணிப்பற்கு உரிய ஆராய்சிகள் மற்றும் பரவல்படுத்தப்பட்ட சேவைகள் ஊக்கப்படுத்தப்படும்.
- நிர்மாணிப்புத் துறையில் மேசன், கைவேலையாட்கள், தச்சன், மின்சார தொழில்நுட்பவியலாளர், நீர் குழாய் தொழில்நுட்பவியலாளர், கட்டடக் கலை நிபுணர்கள் போன்ற சகல தொழில்சார் தகைமை பெற்றோர்களின் அறிவு மற்றும் திறன் மேம்பாட்டுக்கும் அவர்களின் தொழில் பாதுகாப்பு மற்றுமன்றி அவர்களின் சேவைகளை மிகவும் விசுவாசமான நிலைமைக்கு ஆழாக்குவதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்று உருவாக்கப்படும்.
- வீடமைப்புச் செய்வதற்கு தேவையான மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்களை சலுகை விலையில் வழங்குவதற்கு மற்றும் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தை மீள் கட்டமைப்புச் செய்து அதன் அலகுகளை நாடு பூராகவும் தாபிக்கப்படும்.
- வீடுகளை வாடகைக்கு வழங்குதல் மற்றும் பெறுதல் தொடர்பாக நியமனமொன்று இன்மையால் ஏற்படுகின்ற முறைகேடுகள் மற்றும் அசௌகரியங்களை இல்லாதொழிபதற்கும் வாடகை வீடுகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளும் முறைமை ஒன்று, சட்டம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனக் கட்டமைப்பொன்று உருவாக்கப்படும்.

- அரச துறையில் சேவை செய்கின்ற பிரஜைகள் தொடர்பாக வீடுகளுக்கு அண்மித்த சேவை நிலையங்களைப் பெற்றுக் கொடுத்தல். அரச பங்குபற்றலுடன் வாடகை வீடுகளை வழங்குதல் மற்றும் புதிய புதிய உத்தியோகபூர்வ கட்டத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

## 16. சுற்றாடல்

அதிகரிக்கின்ற சனத்தொகை மற்றும் முறையற்ற கைத்தொழில் முறைமையின்மை ஆகியவற்றின் காரணமாக உலகலாவிய ரீதியில் கடுமையான பல காலநிலை மற்றும் சுற்றாடல் மாற்றங்கள் நிகழந்து வருகின்றன. எமது நாட்டிலும் வெப்பநிலை அதிகரித்தல், மழைவீழ்ச்சியில் ஏற்படும் வித்தியாசம், தாவரங்கள் மற்றும் விலங்கு இனங்கள் அரிதாகிச் செல்லல் போன்ற துரித மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. நிகழ்கின்ற சுற்றாடல் மற்றும் காநிலை வித்தியாசங்கள் கடுமையான சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் உணவு உற்பத்தி, பொருளாதார அபிவிருத்தி வீழ்ச்சி என்பவற்றுக்குக் காரணமாக அமைந்துள்ளன.

குறுகிய இலாபத்தை இலக்காகக் கொண்டு சுற்றாடல் மாசடையும் விதத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார செயற்பாடுகளின் காரணமாகவும் அவற்றை நிருவகிப்பதற்காக தாபிக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்கள் சரியான முறையில் இயங்காமையின் காரணமாகவும் சுற்றாடல் துரிதமாக மாசடைந்து வருகின்றது. அரசியல் வாதிகள் தமது அதிகாரப் பலத்தை தகாத முறையில் பிரயோகித்து மேற்கொள்ளப்படும் சுற்றாடல் அழிவுகள் (காடுகளை அழித்தல், விலங்களை வேட்டையாடுதல், தரிசு நிலங்களை நிரப்பியெடுத்தல்) பரந்து வாழும் விலங்கு இனங்கள் மற்றும் தாவரங்கள் சர்வதேச மரபுரீதியான கொள்ளைகளுக்கு உட்பட்டமையை கடந்த காலங்களில் காணக் கூடியதாக இருந்தது.

### தீர்வுகள்

இன்றைய மற்றும் எதிர்கால சந்தியினர்கள் அனைவருக்கும் சுற்றாடலைப் பாதுகாத்து வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இயற்கையின் எதிர்வினை சக்தியை அதிகரிக்கக்கூடிய சமூக, பொருளாதார, அரசியல் செயற்பாடுகளுக்கு வலிமையான ஒரு சுற்றாடல் கொள்கையையும் சட்டமுறைக்கட்டமைப்பையும் ஏற்படுத்துதல்.

இன்றைய மற்றும் எதிர்கால சந்ததியினர்கள் தொடர்ச்சியாக வாழும் வகையில் நீர், வளி, மண் அடங்கலாக அனைத்து வகையான இயற்கை வளங்களினதும் பாதுகாப்பை உறுதி-செய்து, நிலையான பாவனையை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

நாட்டில் மேட்டுநிலச் சுற்றாடல் மாத்திரமன்றி பிரத்தியேக சமுத்திர வலயத்திலுள்ள சகல இயற்களை வளங்களினதும் உரிமையையும் பாதுகாப்பையும் உறுதிசெய்தல்.

அபிவிருத்தி என்பது முற்றிலும் ஒரு பௌதீக செயற்பாடாக மட்டுமன்றி மக்களைப் பாதுகாக்கும் இயற்கையின் மீளீட்டல்களையும் கட்டியெழுப்பும் ஒரு செயற்பாடாக அமைய வேண்டும். சுற்றாடல் சார்ந்த கொள்கைகளைத் தயாரிக்கும் போது கீழ்காணும் 04 விடயங்களின் அடிப்படையில் அந்தக் கொள்கைகளைத் தயாரிக்க வேண்டும்.

1. **சகல மக்களினதும் சுற்றாடல் உரிமைகளை உறுதிசெய்தல்**
   நாட்டின் சகல மக்களும் சுதந்திரமாக, பாதுகாப்பாக தமது வாழ்க்கையை நடத்திச் செல்லும் பொருட்டு சகல இயற்கை வளங்களையும் அவர்களின் நலனுக்காக மட்டுமே பயன்படுத்துதல். பொருளாதாரத் தேவைகளை மாத்திரம் அடைவதை நோக்கிய முறையற்ற பாவனைகளிலிருந்து தவிர்ந்துக்கொள்ளல்.

2. **நிலையான ஒரு அபிவிருத்தியை ஏற்படுத்துதல்**
   நாட்டின் அபிவிருத்தியை நோக்கி செயற்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு செயற்பாட்டிலும் சுற்றாடல் பாதுகாப்பை ஏற்படுத்துவதனூடாக சகல மக்களினதும் நல்வாழ்க்கையை உறுதிசெய்தல்.

3. **இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்**
   சுற்றாடலையும் அதிலுள்ள சகல வளங்களையும் பாதுகாத்து, மேம்படுத்தி அந்த வளங்களைப் பராமரித்து, அத்தகைய வளங்களின் முறையற்ற பாவனைகளிலிருந்து தவிர்ந்துகொள்ளல்.

4. **பசுமைப் (விவசாய) பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பல்**
   நாட்டில் இயற்கை வளங்களின் அடிப்படையில் செயற்படுத்தக்கூடிய ஒரு பசுமைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் நாட்டிற்கு அவசியமான சகல கொள்கைகளையும் தயாரித்தல்.

## வழிமுறைகள்

- இயற்கை வளங்களையும் சுற்றாடலையும் நாட்டின் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் பாதுகாத்துப் பராமரித்து நிருவகிப்பதற்கு அவசியமான ஒரு கொள்கையைத் தயாரிக்கும் வேளையில் தற்பொழுதிருக்கின்ற சுற்றாடல் சம்பந்தமான சட்டங்களையும் அவற்றுடன் இணைந்த ஒழுங்குவிதிகளையும் வலுப்பெறச்செய்தல்.
- இயற்கைச் சுற்றாடல், நீர், கடல் வளம், நிலம், வளி, இயற்கை ஒலி என்பன மாசடைவதை கூடுமான வரையில் தவிர்த்துக்கொள்ளும் வகையில் தொழில்நுட்ப ரீதியான வழிகாட்டல்களை முன்வைத்து சட்டங்களை கடுமையான முறையில் நடைமுறைப்படுத்துதல்.
- சுற்றாடல் பாதுகாப்புக்கு அச்சுருத்தலாக அமைகின்ற தொழில்நுட்ப உற்பத்திகளுக்கும் வெளியீடுகளுக்கும் பதிலாக மாற்றுவழிமுறைகளைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சி நடவடிக்கைகளை அனுமதித்து அந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தல்.
- சுற்றாடல் சார்ந்த சட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு சரியான ஒரு உள்ளகத் தொடர்புடைய ஒரு நிறுவன முறைமையைத் தாபித்தல்.

- சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான பொதுமக்களின் பங்களிப்பை இலக்காகக் கொண்டமைந்த ஊடகப் பிரயோகத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் சுற்றாடலைப் பாதுகாப்பதிலுள்ள முக்கியத்துவம் பற்றி மக்களை விழிப்பூட்டும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல். சுற்றாடலைப் பாதுகாப்பதிலுள்ள முக்கியத்துவம் பற்றி மாணவர்களை விழிப்பூட்டும் வகையில் பாடசாலைக் கல்விப் பாடவிதானத்தில் சுற்றாடல் பாடத்தை உள்ளீர்த்தல்.
- காணப்படுகின்ற சகல இயற்கைச் சுற்றாடல் முறைமைகளையும் பாதுகாத்து அவற்றுக்கு உத்தரவாதமளிக்கும் வேளையில் அத்தகைய முறைமைகள் அரிதாகிச்செல்வதைத் தவிர்த்து, அத்தகைய இயற்கைப் பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களை உரிய முறையில் இணைப்பதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்கும், இன்னும் பாதுகாப்பற்ற சுற்றாடல் முறைமைகளை பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுத்தல்.
- இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் வகையில் தற்பொழுது பயனற்றிருக்கின்ற தரிசு நிலங்களையும், சகல உயிரினங்களையும், நீரேந்து பரப்புகளையும், பல்லுயிரின வளங்களையும் பாதுகாப்பதற்கும் அந்த வளங்களுடன் தொடர்புடைய பாரம்பரிய அறிவைப் பாதுகாப்பதற்கும் அதே நேரம் இடம்பெயர்ந்து வாழுகின்ற உயிரினங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பொருத்தமான கொள்கைகளையும் கட்டளைச் சட்டங்களையும் தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்துதல்.
- பல வகையான சுற்றாடல் பாதிப்புகள் பற்றி அறியப்படுத்தும் பொருட்டு 24 மணித்தியாலமும் 365 நாட்களிலும் இயங்கக்கூடிய ஒரு நிலையத்தைத் தாபித்தல்.
- பல வகையான வேறுபட்ட மரபணுக்களையுடைய சுற்றாடலுக்கு அழிவை ஏற்படுத்தக்கூடிய தாவர இனங்களையும் விலங்கு இனங்களையும் இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு எதிரான வேலைத்திட்டங்களை வலுப்படுத்தி, தற்பொழுது பரந்து காணப்படுகின்ற அத்தகைய பாதிப்பான தாவர அல்லது விலங்கு இனங்களை ஒழிப்பதற்கு அல்லது உரிய முறையில் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.
- நாட்டில் காணப்படுகின்ற சுற்றாடல் சார்ந்த கட்டளைச் சட்டங்களையும் கொள்கைகளையும் அதே நேரம் சர்வதேச சுற்றாடல் நேய சர்வதேச கொள்கைகளையும் சமவாயங்களையும் ஏற்படுத்தி அவற்றை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கையை எடுத்தல்.
- ஒவ்வொரு பிரதேசமும் உள்ளடங்கும் வகையில் அரசாங்க அலுவலர்கள், சுற்றாடல் அமைப்புகளின் தொண்டர்கள் மற்றும் சுற்றாடல் ஆய்வாளர்கள் ஆகியோர் அடங்கிய சுற்றாடல் பற்றிய ஒரு குழுவைத் தாபித்து, அதனூடாக அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- யானை-மனிதன் என்ற பிரச்சினைகள் அடங்கலாக சுற்றாடல்-மனிதன் என்ற சகல பிரச்சினைகளுக்கும் அறிவுபூர்வமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கையை எடுத்தல்.
- மழை, சுனாமி, வரட்சி, வெப்பநிலை மாற்றங்கள் போன்ற பல வழிகளில்

ஏற்படுகின்ற சுற்றாடல் மாற்றங்களை முன்கூட்டியே கண்டறியக்கூடிய, உரிய நிறுவனங்களுக்கும், அமைப்புகளுக்கும் பொதுமக்களுக்கும் முன்கூட்டியே அறியப்படுத்தக்கூடிய விதத்தில் தொழில்நுட்ப வசதிகளை மேம்படச்செய்தல்.

- உயிரற்ற இயற்கை வளங்களை அல்லது கனிய வளங்களை அல்லது போசனை வளங்களை பாவனையில் ஈடுபடுத்தும் மற்றும் அத்தகைய வளங்களை அகழும் அல்லது பிரித்தெடுக்கும் போது சரியான உரிய பாதுகாப்பு முறைகளுக்கு அமைய அவற்றைப் பயன்படுத்துவதற்கும், ஏனைய இயற்கை வளங்களை மக்களுக்கு பாதிப்புகள் இல்லாத வகையில் பயன்படுத்துவதற்கும் சரியான கொள்கைகளையும், முறையியல்களையும் தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்துதல்.
- கழிவுப்பொருட்களின் விஞ்ஞான ரீதியான முகாமைத்துவத்தை உள்ளூராட்சி மன்றங்களின் பாராதீனப்படுத்த முடியாத ஒரு பொறுப்பாகப் பிரகடனப்படுத்தி, தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்கி, பாராதீனப்படுத்தும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிராக சட்டங்களை கடுமையாக நடைமுறைப்படுத்துதல்.
- பல வகையான பொருட்களை இறக்குமதி செய்யும் போதும் உற்பத்தி செய்யும் போதும் அத்தகைய பொருட்களினால் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு இறக்குமதி மற்றும் உற்பத்தி சார்ந்த கொள்கைகளை நிதமும் இற்றைப்படுத்துதல்.
- நாட்டின் தேவைகள் அடிப்படையில் அமைந்த கைத்தொழிற்சாலைகள், வாத்தக ரீதியான விவசாயத் தொழில், சுற்றுலாக் கருத்திட்டங்கள், மின்சார உற்பத்தி நிலையங்கள் போன்ற சகல அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் செயற்படுத்துவதற்கு முன்னர், உரிய முறையில் சாத்தியவள மதிப்பீட்டு நடபடிமுறைக்கு அமைய அவற்றை மேற்கொண்டு, அத்தகைய கருத்திட்டங்களிலிருந்து இயற்கை வளங்களுக்கு அல்லது பொதுமக்களின் நலனுக்கு ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளைக் குறைத்து, மாற்றுவழியில் அமைந்த பாதுகாப்பு நடைமுறைகளை செயற்படுத்த நடவடிக்கையை எடுத்தல்.
- காடுகள் வளர்ந்துள்ள காணிகளையும் மற்றும் பல உயிரினங்களைப் பாதிக்கும் வகையில் பயிரிடப்பட்டுள்ள பைனெஸ், டர்பென்டைன் போன்ற மரங்களுக்குப் பதிலாக உள்நாட்டுப் பலா, மாதுளை, இலுப்பை, மதிரை, கருங்காலி போன்ற மரங்களின் பயிர்ச் செய்கையை பாரியளவில் வியாபிக்கச் செய்தல்.

## 16. தொழில்துறை

இன்று தொழிலில்லாப் பிரச்சினை மற்றும் தொழில்வாய்ப்புகள் பற்றிய சரியான தகவல் தரவுகள் ஏதும் இல்லை. ஊழியர்படையிலுள்ள அதிகமானோர் நிலையற்ற அல்லது உற்பத்திற்குப் பங்களிக்காத கருமங்களிலேயே ஈபடுகின்றனர். பலருக்கு அவர்கள் செய்யும் தொழில்களிலிருந்து கிடைக்கும் வருமானம் உணவு பானங்கள் போன்ற

அத்தியாவசியத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாகவில்லை. அரசியல் இலாபங்களை அடையும் நோக்கில் அரச துறையில் தொழில்வாய்ப்புகளை உருவாக்கினாலும், உண்மையில் தொழிலில் அமர்த்தப்பட்டிருப்பது தொழில்புரிபவருக்கோ, அல்லது தொழில் வழங்குநருக்கோ அல்லது பொதுமக்களுக்கோ பயனற்ற விதத்திலாகும். தனியார் துறையில் சேவைகளை வழங்கும் அதிகமான தொழில்கள் உருவாகியிருப்பது அரசாங்கத்தின் முறையான பொருளாதாரத் திட்டம் இன்றிய விதத்திலாகும். தொழில் உரிமைகளைப் பறித்து ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்துவதனூடாக ஊழியர்கள் கடும் ஊழியத்திற்கு ஆளாகிக் கஷ்டப்படுவது என்பது ஒரு முக்கியமான பிரச்சினையாகும்.

உக்கிரமான தொழில்வாப்பின்மை மற்றும் தொழில்குறைபாடுகள் காரணமாக தொழிலில் ஈடுபடும் நபர்கள் நிர்க்கதிக்கு ஆளாகுவது மாத்திரமன்றி அந்த ஊழியர்கள் அவர்களின் தொழில்களிலிருந்து அதிகமானோர் விலகி எமது நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு தொழில்வாய்ப்புகளுக்காக செல்கின்றனர். அதே போன்று, பெண்களை பொருத்தமற்ற வேலைகளுக்காக வெளிநாடு அனுப்புவதால் இன்று சமூகத்தில் கடும் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

வாழ்க்கைத்தொழில் கல்வி கட்டியெழுப்பப்படாமை, இன்றிருக்கின்ற கல்வி மாதிரி தொழில் தேர்ச்சிகள் அபிவிருத்தி அடையும் விதத்தில் திட்டமிடப்படாதிருக்கின்றமை, புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதற்கு அவசியமான கைத்தொழில், விவசாயம் மற்றும் குறிப்பாக ஆராய்ச்சி ஆகிய பிரிவுகளில் துறைகளில் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமை போன்ற விடயங்கள் எதிர்கால சந்ததியினர் எதிர்பார்க்கும் தொழில்வாய்ப்புகள் உருவாகாமைக்குக் காரணமாக அமைந்துள்ளன.

## தீர்வுகள்

ஒரு தொழிலில் ஈடுபடுத்துவது என்பது அடிப்படை மனித உரிமை ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இந்த அடிப்படை உரிமை அரசியலமைப்பினால் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

திரிவடைந்த தனவந்தர் வர்த்தகப் பொருளாதாரத்திற்குப் பதிலாக, மேற்குறித்த பந்தியில் முன்வைக்கப்பட்டுள்ள விதத்தில் மக்களின் வாழ்வாதார நிலைகளை மிகவும் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரக்கூடிய மிகவும் உன்னத மற்றும் மிகவும் மேம்பட்ட உற்பத்திகள் அடிப்படையிலான ஒரு பொருளாதாரத் திட்டத்தைக் கொண்டு, தொழில்வாய்ப்புகளை எதிர்பார்க்கின்ற அனைத்து மக்களுக்கும் அவர்களின் கல்வித் தகைமைகள் மற்றும் தொழில் தகைமைகள் என்பவற்றுக்குப் பொருத்தமான தொழில்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் ஊறுதிசெய்யப்படவுள்ளன.

## வழிமுறைகள்

- ஊழியர்படை, தொழில்வாய்ப்புகள் மற்றும் தொழிலின்மை என்பன தொடர்பான விளக்கங்களையும் மதிப்பீடுகளையும் மேற்கொண்டு தொழில்களைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய ஒரு தேசிய திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- அபிவிருத்திற்கு அவசியமான பயிற்சிகளும் விஷேடமான ஊழியர் சிரமமும் மேம்படும் வகையில் தொழில்நுட்பக் கல்வியையும், கல்வி அறிவையும் பெற்றுக்கொடுப்பதற்கு முன்னுரிமை அளித்தல்.
- தொழில்வாய்ப்புகளை வழங்கும் போது அரசியல்வாதிகளின் தலையீடுகளை முற்றிலும் நிறுத்தி, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைய அரசாங்க சேவைகளுக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ளல்.
- அரசாங்க சேவையில் பதவியுயர்வு, இடமாற்றம் என்பவற்றுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவுபூர்வமான வெளிப்படையான திட்டங்களைத் தயாரித்தல். தேவையற்ற தலையீடுகளின்றி சுயாதீனமான முறையில் தமது பணிகளை நிறைவேற்றக்கூடிய விதத்தில் புதிய ஒரு ஒழுக்கநெறி முறைமையை அறிமுகப்படுத்தல்.
- தொழில்வாய்ப்புப் பிரச்சினைகளைக் குறைக்கும் இலக்கையுடைய ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட தொழில்தேர்ச்சியுடைய நபர்களை அரசாங்கத்தின் தலையீட்டில் வெளிநாட்டிலுள்ள தொழில்களுக்கு அனுப்புதல்.
- சேவையை வழங்கும் மற்றும் சேவையைப் பெறும் ஆகிய இரண்டு தரப்புகளுக்கும் நன்மை அளிக்கக்கூடிய விதத்தில் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் தயாரித்து, அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறிமுறைத்திட்டத்தை வலுவடையச்செய்தல்.
- கல்வியில் சகல மட்டங்களிலும் விலகிச் செல்லும் நபர்களுக்கு வாழ்க்கைத்தொழில் பயிற்சித் தகைமைகளைப் பூர்த்திசெய்து கொள்ளக்கூடிய வகையில் அவசியமான ஒரு வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிலையத்தைத் தாபித்தல்.
- வேலைசெய்யும் அனைத்து மக்களுக்கும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்ந்த நிலையில் பேணிச்செல்லக்கூடிய விதத்தில் ஆகக்குறைந்த சம்பளத்தைத் தீர்மானித்து, சகல விதத்திலும் அந்த மக்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல்.
- ஒரு தொழிலைப் பெற்றுக்கொள்ளும் வரை, தொழில்செய்ய வேண்டிய வயதில் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கைச் செலவுக்குப் போதிய ஒரு கொடுப்பனவை அரசாங்கத்தால் பெற்றுக் கொடுத்தல்.

- தற்போதிருக்கின்ற வாழ்வாதார நிலைகளை அடிப்படையாகக் கொண்டு தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான சரியான ஒரு முறையியலை அரசாங்கம் தலையிட்டு சட்டமாக்கி நடைமுறைப்படுத்தல். ஏற்கெனவே ஷரூ.2500 சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கையை இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளல்.
- அரச மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளிலுமுள்ள அனைத்து ஊழியர்களினதும் சுகாதாரத் தேவைகளை (முஉஉரியவழையெட ர்நயடவா) உறுதிசெய்வதற்கு அவசியமான முறையியல்களையும் சட்டமுறையான ஒழுங்குவிதிகளையும் தயாரித்து நடைமுறைப்படுத்தல்.
- அமைய அடிப்படையில் அல்லது மனித வலு அமைப்புகளினால் (ஆயரெ்ழறநச) சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களையும் சேவையில் நிரந்தரமாக்குவதற்கு உடனடி நடவடிக்கையை எடுத்தல்.
- அரசாங்கத்தின் நீண்டகாலப் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்திற்குப் பொருத்தமான விதத்தில் சிஙறு தொழில்முயற்சிகளுக்கும் தொழில்-வாய்ப்புகளுக்கும் வழிகாட்டி, தொழில்நுட்ப உதவிகளையும், குறைந்த வட்டியில் கடன் வசதிகளையும் வழங்குவதற்கும், அடிப்படை முகாமைத்துவம் தொடர்பான கல்வியையும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளையும் தேடிப்பெற்றுக்கொள்வதற்கும் அரசாங்கத்தினால் தலையிட்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்கச்செய்தல்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பை இலக்ககாக்கொண்டு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மற்றும் கல்வி நிறுவகங்களை உருவாக்குதல். இன்று எமது நாட்டிலுள்ள தொழில்நுட்பப் பயிற்சி நிலையங்களுக்கு இடையில், ரத்மலானை “ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரிக்கு” உன்னதமான ஒரு மதிப்பை வழங்குதல். அத்தகைய தொழில்நுட்பக் கல்லூரிகளை மாவட்டத்திற்கு ஒரு கல்லூரி என்ற அடிப்படையில் ஏனைய 24 மாவட்டங்களிலும் 3 வருடங்களுக்குள் தாபித்தல்.

## 17. புலம்பெயர் இலங்கையர்கள்

- வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புகளுக்காகச் சென்று வாழுகின்ற நபர்களின் சேவை காலத்தை நிர்ணயித்து, அவர்களுக்குச் செலுத்த வேண்டிய ஆகக்குறைந்த சம்பளத்தைத் தீர்மானித்து, அவர்களுக்கு உரித்துடைய சமூகப் பாதுகாப்பு நன்மை நிதிகளை அவர்களின் தொழில் ஒப்பந்தங்கள் முடிவடைந்து இலங்கைக்குத் திரும்பி வருகின்ற போது பெற்றுக் கொள்ளும் வகையில் வசதிகளை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு, இலங்கையர்கள் தொழில்வாய்ப்புகளுக்காகச் செல்லும் நாடுகளுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கையை எடுத்தல்.

- வெளிநாடுகளுக்குச் சென்று தொழிலாளர்கள் சம்பாதிக்கும் வருமானத்தை அவர்கள் இலங்கைக்கு அனுப்பும் போது அவர்கள் எதிர்நோக்குகின்ற சகல தடைகளையும் பிரச்சினைகளையும் நீக்குவதற்கும், அவர்களின் அந்த சகல பணங்களையும் வரி செலுத்துவதிலிருந்து விலக்கப்புகளை வழங்குதற்கும் நடவடிக்கையை எடுத்தல்.
- வெளிநாடுகளுக்குச் சென்று தொழில்செய்கின்றவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளையும் அவர்கள் படுகின்ற கஷ்டங்களையும் தேடிப்பார்ப்பதற்கு ஒவ்வொரு நாட்டுத் தூதுவராலயத்திலும் அதற்கான தனியான ஒரு பிரிவைத் தாபித்தல்.
- தொழிலுக்காகவும் கல்விக்காகவும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள மக்களுக்கு அந்தந்த நாடுகளிலிருந்து கொண்டே வாக்களிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- வெளிநாடுகளில் வசிக்கின்ற, தொழில்களில் ஈடுபடுகின்ற இலங்கைக் குடும்பங்களில் வெளிநாட்டு கல்வி முறைமையினுள் கல்வி கற்ற பிள்ளைகளுக்கு” இலங்கையில் கல்வி கற்பதற்கு நேரிட்டால், அதன் நிமித்தம் அரசாங்கப் பாடசாலைகளிலும் பரீட்சை முறைமைகளிலும் தேவையான வசதிகளை செய்து கொடுத்தல்.
- வெளிநாடுகளில் தொழில் புரிகின்றவர்கள் அவசர இடர்களுக்கும் விபத்துக்களுக்கும் ஆளாகும் நேரத்திலும், அவர்கள் இறக்கும் நேரத்திலும் அவர்களை வெளிநாடுகளிலிருந்து எமது தாய் நாட்டிற்கு எடுத்துவரும் போது, அதில் அரசாங்கம் தலையிட்டு அதற்கு ஏற்படுகின்ற செலவுகளை அரசாங்கம் பொறுப்பேற்றல்.
- வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற நபர்களின் பிள்ளைகளும் பெற்றோர்களும் எதிர்நோக்குகின்ற பாதுகாப்பற்ற நிலைகளுக்கும் ஏனைய சமூகப் பிரச்சனைகளுக்கும் தீர்வாக அவர்களுக்கான முறையான ஒரு சமூகப் பாதுகாப்பு முறையை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- வெளிநாடுகளில் வாகனங்களை ஓட்டுவதற்குப் பொருத்தமான விதத்தில் இடது பக்க ஸ்டியரின் பரிட்சயப் பயிற்சிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

## 18. கிராமிய அபிவிருத்தி

எமது நாட்டு சனத்தொகையில் ஏறக்குறைய 55ஸ வீதமான மக்கள் கிராமப் புறங்களில் வசிக்கின்றனர். ஊழியர்படையில் ஏறக்குறைய 50ஸ வீதமானோர் கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயத் தொழிலில் ஈடுபடுகின்றனர். கிராமியப் பொருளாதாரத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியின்மை, மூலதனக் குறைபாடுகள், விற்பனை சார்ந்த பிரச்சினைகள், போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, மின்சாரம் முதலிய பிரிவுகளில் அபிவிருத்தியின்மை, போதைப் பொருள்கூபோதை வஸ்துகள்கூபுகைப்பிடித்தல் பழக்கவழக்கங்கள்,

சட்டவிரோதமான வியாபாரங்கள், சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம், மனிதக் கொலைகள், சமய அல்லது ஏனைய பிரச்சினைகள், பரஸ்பர நம்பிக்கை, முதியோர் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி விடயங்களிலிருந்து ஏற்படும் சுற்றாடல் பிரச்சினைகள், அரசியல் குண்டர்களினால் உருவாக்கப்பட்ட பீதி நிலைமைகள் போன்ற கடந்தகால பல பிரச்சினைகளிலிருந்து இன்று மக்கள் விடுபட்டும்கூட, தேசிய பொருளாதாரத்திற்கு பயனுள்ள விதத்தில் பங்களிப்பதற்கான வாய்ப்பில்லாமை மற்றும் சரியான விதத்தில் நன்மைகள் கிடையாமை போன்ற பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

## தீர்வுகள்

புதிய ஒரு இலங்கை சமூகத்தைக் கட்டியெழுப்பும் போது 30"000 கிராமங்களை நவீன நிலைக்குக் கொண்டுவருவது அவசியமாகும். தலைநகரங்களில் குளிஷரூட்டிய அறைகளில் வசதிகளை ஏற்பாடு செய்துகொண்டு, வலுக்கட்டாயமாக சுமைகளை கிராம மக்கள் மீது சுமத்துவதைத் தவிர்த்து, அபிவிருத்தி நட்புறவின் நிமித்தம் உண்யைமான ஒரு அபிவிருத்தியை அடிமட்டத்தில் ஏற்படுத்தும் நோக்கில் குடியேயற்ற அலகுகளை அல்லது கிராமங்களை, அல்லது அரை நகர மற்றும் நகர குடியேற்ற அலகுகளை அடிப்படையாகக் கொண்டு ஆக்கபூர்வமான ஒரு அபிவிருத்தித் திட்டத்தை அறிமுகப்படுத்தல். குறிப்பாக கிராமிய அபிவிருத்தி சார்பாக பல தசாப்தங்களாக செயற்படுத்தப்பட்டு வந்த எண்ணக்கருவாக உயர்ந்த ஆயினும் செயற்படுத்துகை மட்டத்தில் மக்களை ஏமாற்றுகின்ற வங்கரோத்து நிலையிலுள்ள கருத்திட்டங்களான கிராமோதய, ஜனசவிய, சமுர்த்தி, திவிநெகும போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை பொருளாதார ரீதியில் வலுப்பெறச் செய்வதற்கான காரணங்கள் அனைத்தையும் ஆராய்ந்து, அத்தகைய பலவீனங்கள் இனியும் ஒரு போதும் உருவாகாத விதத்தில் இத்தகைய அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல். (உதாரணமாக: கிராமிய உற்பத்திகளை விஞ்சிச்செல்கின்ற விதத்தில் பல நாட்டு நிறுவனங்களின் உற்பத்திகளை சந்தையில் சேர்ப்பதற்கு இடமளித்தல்)

இங்கு பிரதேச மக்களின் பிரதிநிதிகளையும், பல துறைகளிலும் தேர்ச்சியுடைய நிபுணத்துவ அறிவைப் பெற்ற நபர்களையும், அதே போன்று பொருத்தமான அரசாங்க மற்றும் தனியார் துறை அலுவலர்களையும் கிராமங்களுக்கு அல்லது குடியேற்றங்களுக்கு அனுப்பி, அங்கு வசிக்கின்ற மக்களுடன் இணைந்து கிராமத்திற்கு அல்லது குடியேற்ற அலகிற்கு பொருத்தமான துறை ரீதியில் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் கிராமப் புறங்களுக்கும் கிடைக்கும் விதத்தில் திட்டமிடப்பட்ட ஒரு அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்தல்.

பிரதேச ரீதியாகக் காணப்படுகின்ற மனித வளங்களிலும் பௌதீக வளங்களிலும் அபிவிருத்திற்கு எதிராகக் காணப்படும் சவால்கள் முதலியவற்றைக் கண்டறிந்து, அந்தந்த நிலைகளுக்குப் பொருத்தமான மிகவும் உயர்ந்த தொழில்நுட்ப முகாமைத்துவ முறையியலை மக்களின் பங்களிப்புடன் கிராம மட்டங்களில் ஒன்றிணையச் செய்தல். உதாரணமாக: கிராம மட்டத்தில் உணவு அல்லது மின்சாரத் தேவைகளில் சுயதேவைப்பூர்த்தியை அடையும் ஆற்றல், குழுவாக இணைந்து வருமானம் ஈட்டும் முறைகள் (உ-ம்: கால்நடைகள்,

கைத்தொழில், சுற்றுலாக் கைத்தொழில், கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம், சிறிய அல்லது நடுத்தரளவான மின்சக்தி உற்பத்தி, அறிவுப் பொருளாதாரத்துடன் இணையும் வாய்ப்பு, தகவல் தொழில்நுட்பங்கள், சுற்றாடல் பாதுகாப்பு, கடற்றொழில்). பிரதேச ரீதியிலுள்ள மனித வளங்களையும் பௌதீக வளங்களையும் பயன்படுத்தி, வீடமைப்பு, நீர் விநியோகம், வீதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி முதலியன தொடர்பாகக் காணப்படுகின்ற சகல புள்ளிவிபரங்களையும் ஆராய்ந்து, உரிய மக்கள் பகுதியினரை அறிவிலும், திறன்களிலும், தொழில்நுட்பங்களிலும் மற்றும் அடிப்படைப் பொருளாதார ஆற்றல்களிலும் வலுப்பெறச்செய்தல்.

தேசிய மட்டத்தில் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும் போது இந்தப் பிரதேசங்கள் அல்லது கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கடும் கவனத்தைச் செலுத்தி, அத்தகைய திட்டங்களுக்கு முரணற்ற விதத்தில், அத்தகைய இணையான ஒரு விதத்தில் தயாரித்தல். கிராமிய உற்பத்திகள் தேசிய பொருளாதாரத்தில் சரியான முறையில் இணைவதை இதனூடாக உறுதிசெய்தல்.

## வழிமுறைகள்

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கணிசமான ஒரு காலம் எடுக்கும். ஐ-வகைக் கொள்கைகளின் அடிப்படையில் கீழ்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(1) கிராமிய பொருளாதாரத்தை வலுப்படச் செய்வதற்கான உற்பத்திகளின் சக்தி அபிவிருத்தியினூடான “செல்வந்தமான ஒரு கிராமத்தைக் கட்டியெழுப்பல்”

(2) கிராமிய மக்களின் வாழ்வாதார நிலைகளை மேம்படுத்துவதற்கான உரிய சேவைகளை முறைப்படுத்துவதனூடாக “மேம்பட்ட ஓர் கிராமத்தைக் கட்டியெழுப்பல”

(3) சமூக விரோதச் செயல்களையும் கடந்தகால கலாசார சீர்குலைவுகளையும் களைகின்ற நடவடிக்கையினூடாக “ஒரு நவீன கிராமத்தைக் கட்டியெழுப்பல்”

(4) கிராயமிய சுற்றாடலைப் பாதுகாப்பதனூடாகவும் முறையான அபிவிருத்தியி னூடாகவும் “இனிமையான ஒரு கிராமத்தைக் கட்டியெழுப்பல்”

(5) கிராமிய வாழ்வாதாரம், நிருவாக ரீதியான நியாயம்” குழுப் பொறுப்புணவு மற்றும் சமத்துவம் என்பவற்றின் அடிப்படையில் “ஒரு ஜனநாயக” கிராமத்தைக் கட்டியெழுப்பல்

### கிராமத்தை வளம்பெறச் செய்தல்,

1. விவசாயத்தையும் கிராமிய கைத்தொழிலையும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்திலும் 50 மில்லியன் ஷரூபா என்ற அடிபபடையில் ஐந்து வருடங்களினுள் நிதிகளை ஒதுக்குதல்.

2. ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்திலும் மின்சார வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
3. ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்திலும் 10 புதிய தொழில்முயற்சிகளுக்கு ஒரு மில்லியன் ஷரூபா என்ற அடிப்படையில் 3ஸ வீத வட்டியில் கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

### கிராமத்தை அபிவிருத்தி செய்தல்,

1. சகல கிராமிய வீதிகளையும் ஐந்து வருட காலத்திற்குள் காபெட்டுக்களை இட்டு பாதுகாப்பான பாதசாரிக் கடவைகள் அடங்கலாக அபிவிருத்தி செய்தல்.

2. வருடம் ஒன்றுக்கு 1000 பாடசாலைகள் என்ற அடிப்படையில் ஐந்து வருட காலத்திற்குள் கிராமியப் பாடசாலைகளின் 5000 ஆசியர்களின் கணனி அறிவை ஏனைய பௌதீக வளங்கள் அடங்கலாக விருத்தி செய்தல்.
3. ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் தற்பொழுதிருக்கின்ற "கடைத்தொகுதிகளை" அல்லது "கடைச் சந்தியை" வர்த்தகக் கட்டிடத்தொகுதிகளாகக் கட்டியெழுப்பி, கிராமிய தொழில்முயற்சியாளர்களுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

### ஒரு நவீன கிராமத்தை உருவாக்கல்,

1. ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் நலன்புரிச் சங்களைத் தாபித்து வருடத்திற்கு ஒரு இலட்சம் ஷரூபா என்ற அடிப்படையில் முதல் ஐந்து வருடத்தினுள் பெற்றுக் கொடுத்தல்.
2. பல விதமான சமூக விரோதச் செயல்களையும் வன்முறைகளையும் தடுக்கும் வகையில் கிராமியத் தலைவர்களுக்குப் பயிற்சியளித்தல்.
3. பரஸ்பர நம்பிக்கை அடங்கலாக பிற்போக்கான எண்ணங்களை மாற்றும் நிமித்தம் விஞ்ஞான வியாபிப்பு ஆணைக்குழுவின் செயற்பாடுகளை பரவலாக்கல். ஷரூபவாஹினி, வானொலி மற்றும் அச்சீட்டு ஊடகங்களை இதன் நிமித்தம் பயன்படுத்துதல்.
4. கலை, இலக்கியம் மற்றும் கலாசார விடயங்களை மேம்படுத்தும் பொருட்டு வசதிகளை ஏற்பாடுசெய்தல். பல கிராமங்களை உள்ளடக்கி தேவையான வசதிகளுடன் ௹நூலகம், சிறிய நடனமண்டபம்௹ நலன்புரிக் கட்டிடங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

### இனிமையான ஓர் கிராமத்தைக் கட்டியெழுப்பல்,

1. கிராமத்தினுள் அல்லது கிராமத்தைப் பாதிக்கின்ற சகல அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் விடயங்களிலும் கிராமத்தின் பெரும்பான்மையினரது விருப்பத்தைப் பெற்றுக் கொள்ளல்.

2. ஒவ்வொரு கிராமத்திற்கும் சுகாதார ரீதியில் பாதுகாப்பான தூய குடிநீரை வழங்குதல்.
3. ஒலி (உ-ம்: பொது விருப்பத்திற்கு மாறாக பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிகள்) காட்சிகள் (வர்த்தக மற்றும் அரசியல் பிரசாரக் காட்சிப் பலகைகள் அல்லது அறிவித்தல் பலகைகள்) மாசடைவதை கூடுமான வரையில் குறைப்பதற்கு நடவடிக்கைகையை எடுத்தல்.

**ஒரு ஜனநாயக கிராமத்தைக் கட்டியெழுப்பல்,**

1. ஒவ்வொரு கிராமத்திற்கும் பாராளுமன்றச் சட்டத்தினால் அதிகாரத்தத்துவங்களை உரித்தளிக்கும் பொறுப்புகளைக் கொண்ட ஒரு கிராம சபையை டூஇந்தியாவின் பஞ்சாயத்து முறை) தாபித்து, அதற்கு சுயவிருப்பத்தில் மக்களைப் பிரதிநிதிப்படுத்தும் ஒரு முறைமையை உருவாக்குதல்“ அதில் 50ஸ வீதமான பெண்கள் பிரதிநிதித்துவத்தை உள்ளீர்த்தல்.
2. முறையற்ற அரசியல், முறையற்ற நிதிப் புழக்கம், முறையற்ற சமூக விடயங்கள் அல்லது வன்முறை என்பவற்றை முற்றிலும் ஒழிப்பதற்குத் தேவையான சட்டமுறையான நடவடிக்கைகளையும் ஏனைய நடவடிக்கைகளையும் எடுத்தல்.
3. பெண்களுக்கு எதிராக நிகழ்கின்ற சமத்துவமின்மையைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

முதல் ஐந்து வருட காலத்திற்குள் ஐ-வகை நோக்கங்கள் அனைத்தும் பூர்த்தியாகிய 10,000 கிராமங்களைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளல்.

# நியாயமான
# சமூதாயம்

ஒரு சமூகம் சிறந்த முறையில் நீடித்து நிற்பதற்கு பொருளாதார வளம் மற்றும் சமூக நியாயம் ஆகிய இரண்டு அம்சங்களும் அவசியமாகும். நவீன சமூகவாத ஒரு அரசாங்கத்தின் அடிப்படைக் குறிக்கோளாக அமைவது யாதெனில் சமூக நியாயத்தையும், சமத்துவத்தையும்" நீதியையும் நிலைபெறச் செய்வதும் மற்றும் மக்களின் வாழ்க்கை சிறந்த முறையில் நிலைத்திருப்பதற்கு அவசியமான பொருளாதார வளத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுமாகும். அரசாங்கம் தனியார் அமைப்புகள், நிறுவனங்கள், சங்கங்கள், குடும்பங்கள் மற்றும் தனி நபர் என்ற நான்கு சமூகப் பிரிவுகளையும் நியாயமான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு உள்ளக ஒருங்கிணைப்புடன் செயல்படச்செய்ய வேண்டும்.

இந்தக் குறிக்கோளை நிறைவேற்றக்கூடிய வகையில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள், நீதி மற்றும் நீதிமன்றப் பிரிவுகள், நுகர்வோர் பாதுகாப்பு, நிறுவனம், நிதி மற்றும் பொதுப் பயன்பாடுகள் என்பன தொடர்பான பிரிவுகள் முதலிய சமூகப் பிரிவுகளை நியாயமான விதத்தில் ஆகக்கூடியளவில் பாதுகாக்கக்கூடிய வகையில் கீழ்காணும் விதத்தில் முன்னேற்றகரமான மாற்றங்களுக்கு உட்படுத்த வேண்டும்.

## 01. அரசாங்கத்தின் பொறுப்புக்கள்

### அடிப்படை மனித உரிமைகள்

- சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்களையும் மனித உரிமைகள் தொடர்பான சமவாயங்களையும் மதித்து, மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, உறுதிசெய்வதற்கான சட்டங்களை உருவாக்குதல்.
- அரசியலமைப்பினால் தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் மற்றும் வலதுகுறைந்தவர்கள் ஆகியோரது உரிமைகளைப் பாதுகாத்தல்.
- சகல மக்களுக்கும் தகவல்களை அறிந்துகொள்வதற்கான உரிமைகளுக்கு உத்தரவாதமளித்தல்.
- ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட பாதுகாப்பு கிடைப்பதை உறுதிசெய்தல்.

## நீதிமன்ற முறைமைகள் மற்றும் சட்டங்கள் இற்றைப்படுத்தும் நடபடிமுறை

- காலத்திற்கொவ்வாத பழைமை வாய்ந்த சட்டதிட்டங்களுக்குப் பதிலாக இன்றைய காலத்திற்குப் பொருத்தமான சட்ட முறைமைகளைத் தயாரித்து வழங்குதல்.
- நீதிமன்றத்தின் சுயாதீனத்தை உறுதிசெய்தல்.
- நீதி உதவிப் பிரிவு ஒன்றைத் தாபித்து, அதன் நன்மைகள் மக்களுக்கு மிகவும் இலகுவான முறையில் கிடைக்கக்கூடிய விதத்தில் அதனைப் பன்முகப்படுத்தல். தொழில்நுட்ப வசதிகளையும் மனித வளங்களையும் கொண்டு அதன் சேவைகளை வியாபிக்கச் செய்தல்.
- அடிப்படை உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்கு எதிராக மாத்திரமன்றி தனியார் துறையினருக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் சகல மக்களுக்கும் அத்தகைய உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- தற்பொழுது குவிந்துள்ள அதிகளவான வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்து தீர்ப்புகளை வழங்கும் முகமாக நாளாந்தம் வழக்குகளை விசாரணை செய்யும் கால அளவை நீடித்து, தற்பொழுது வருடம் ஒன்றுக்கு 875,000 வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கும் எண்ணிக்கையை 12 இலட்சம் வரை அதிகரித்தல்.
- வருடம் ஒன்றுக்கு வழக்குத்தாக்கல் செய்யப்படும் 290,000 வாகனப் போக்குவரத்து வழக்குகளைக் குறைப்பதற்கான ஒரு பரிகாரமாக பொலிஸ் பிரிவுக்கு அதிக அதிகாரத்தை வழங்குவதற்கான சட்டங்களையும் வசதிகளையும் ஏற்பாடு செய்தல்.
- நீதிமன்ற நடவடிக்கைகளை கணனிமயப்படுத்துவதனாலும் இணையத்தளங்களில் உள்ளீர்ப்பதனாலும் மிகவும் வினைத்திறன்வாய்ந்த நிலையில் மேற்கொள்ளல் (ந-ஊழரசவ)
- பிரச்சினைகள் எழும் சந்தர்ப்பங்களில் பக்க சார்பாக தொழிற்படும் நிலையைத் தவிர்த்து சட்ட ரீதியான வரைவிலக்கணங்களை முன்வைத்து அந்தச் சட்டங்களினால் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகளை மிகவும் இலகுவான முறையில் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு, நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினதும் சட்டத்தரனிகளினதும் பங்கேற்பில், சட்டமுறையான நடவடிக்கைகளிலிருந்து பொதுமக்கள் தூரப்படுவதற்குச் செல்வாக்குச் செலுத்துகின்ற விடயங்கள் பற்றிய ஒரு ஆழ்ந்த ஆய்வை மேற்கொண்டு, அந்த ஆய்வின் அடிப்படையில் பொதுவான ஒரு வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்.

## குற்றச்செயலும் சிறைச்சாலையும்

- குற்றச்செயல்களைத் தடுப்பதற்குரிய துரித கல்வி மற்றும் விழிப்பூட்டும் ஒரு தேசிய பிரசார நடவடிக்கையை முன்னெடுத்தல்.
- சமூகப் பாதுகாப்பு இழப்பு, மக்கள் குற்றச்செயல்களைச் செய்வதற்கு தூண்டுவதால் அந்தக் குற்றச்செயல்களைத் தடுக்கும் வகையில் சகல மக்களினதும் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்தல்.
- குற்றச்செயல்களைப் புரிவதால் குற்றவாளிகளாகக் கணிக்கப்படும் அனைவரையும் சிறந்த பிரஜைகளாக மாற்றும் பொருட்டு புனர்வாழ்வளிக்கும் கல்வி நிலையங்களை சிறைச்சாலைகளுடன் இணைத்துத் தாபிக்கச்செய்தல்.
- சிறைச்சாலையிலுள்ளவர்களுக்கு வாழக்கைத்தொழில் பயிற்சியும் உயர் கல்வியும் அடங்கலாக மேலதிகக் கல்வியை வழங்குவதற்குத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல்.
- போதைப்பொருள் பழக்கத்தை முற்றாக ஒழிப்பதற்கு தராதரம் பார்க்காது சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தல்.

## பெண்கள், சிறுவர்கள் மற்றும் உரிமைகள்

- சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு, தற்பொழுதிருக்கின்ற சட்ட ஏற்பாடுகளையும் நிறுவனக் கட்டமைப்புகளையும் பகுப்பாய்வு செய்து முழுமையான ஒரு சிறுவர் பாதுகாப்புக் கொள்கையையும் சட்ட ஏற்பாடுகளையும் முன்வைத்து நடைமுறைப்படுத்தல்.
- சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயல்படுகின்ற அலுவலர்களுக்கு பொலிஸ் நடவடிக்கைகள் அல்லது சட்டமுறை நடவடிக்கைகள், விசாரணை செய்தல், புனர்வாழ்வளித்தல் போன்ற பிரிவுகளுடன் தொடர்பான தொழில் பயிற்சிகளையும் திறன்களையும் வளர்த்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- பாடசாலைக் கல்வியைக் கற்கும் கட்டாய வயதெல்லையை 18 வயது வரை அதிகரித்து, 16 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை தொழிலில் ஈடுபடுத்துவதை முற்றாகத் தடைசெய்தல்.
- சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளையும் சிறுவர் துஷ்பிரயோகங்களையும் தடுப்பதற்குத் தேவையான நிருவாக மற்றும் சமூக ரீதியான சீர்திருத்தங்களை மேற்கொண்டு, சிறுவர்ககளைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல்.
- பகல் நேரத்தில் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான நிலையங்கள் பற்றி நாடளாவிய ஒரு மதிப்பாய்வை மேற்கொண்டு, நாடு முழுதிலும் அத்தகைய

நிலையங்களை முறையான விதத்தில் தாபிக்கும் ஒரு வேலைத்திட்டத்தை ஆரம்பித்தல். தொழில் புரியும் தாய்மார்களின் பிள்ளைகளுக்கு அவர்களின் வீடுகளுக்கு அல்லது தொழில் செய்யும் இடங்களுக்கு அருகில் அத்தகைய நிலையங்களைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- ஆபாசத் திரைப்படங்களுக்கும் இணைத்தளத்திலுள்ள ஆபாசப்படங்களுக்கும் சிறுவர்கள் ஈர்க்கப்படுவதைத் தடுப்பதற்கும் அதிலிருந்து ஏற்படும் உளவியல் மற்றும் உடலியல் பிரச்சினைகள் பற்றி பெற்றோர்களை பாடசாலை மட்டத்தில் விழிப்பூட்டி, வீடுகளில் அத்தகைய படங்களையும் ஆபாச இணைத்தளங்களையும் சிறுவர்கள் பார்ப்பதற்குள்ள வாப்பை ஒழிக்கும் வகையில் பெற்றோர்களின் ஒத்துழைப்பைப் பெற்று, அதற்காக நவீன தொழில்நுட்ப முறைமையை அறிமுகம் செய்தல்.

- துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும் சிறுவர்களினதும் மற்றும் ஆபாசப்படங்களைப் பார்க்கின்ற சிறுவர்களினதும் ஆளடையாளம் தெரியாத விதத்தில், பாடசாலை மட்டத்தில் ஒரு மதிப்பாய்வை மேற்கொண்டு, அத்தகைய பாதிப்புகளிலிருந்து சிறுவர்களை அவர்களாகவே பாதுகாத்துக் கொள்வதற்குப் பொருத்தமான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- பெண்களை அழுத்தங்களுக்குள்ளாக்கும் சமூக சமத்துவமின்மை, அழுத்தங்கள், பாரபட்சம் காட்டுதல் மற்றும் தடைகள் என்பவற்றை நீக்கி ஒவ்வொரு துறையிலும் ஆண்களைப் போல் பெண்களுக்கும் சம உரிமைகளைப் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்தல்.

- சட்டத்தினதும் சம்பிராதய சமூக எண்ணங்களினதும் முன்னிலையிலும் பெண்களின் மதிப்பையும் சம உரிமைகளையும் உறுதிசெய்தல்.

- திருமண வாழ்க்கையில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான சீதனக்கொடுமையைத் தடைசெய்து, **பிள்ளைகளைப் பெற்றெடுப்பது தொடர்பான முழு உரிமைகளையும் பெண்களுக்குப் பெற்றுக்கொடுத்தல்.**

- வெற்றிகரமான ஒரு திருமண வாழ்க்கையை உறுதிசெய்வதற்கும் மற்றும் விவாகரத்துச் செய்தல், பெண்கள் துஷ்பிரயோகம், உளவியல் அழுத்தம், நபர்களுக்கு இடையிலான பிரச்சினைகள், தற்கொலை செய்தல் போன்ற செயல்களைக் குறைக்கும் வகையில், திருமணம் செய்வதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற அனைத்து இளைஞர் யுவதிகளுக்கும் காணிகளைக் கொள்வனவு செய்தல், வீடுகளை நிர்மாணித்துக்கொள்ளல், நிதிகளை நிருவகித்தல், உடல் மற்றும் உளவியல் சுகாதாத்தைப் பாதுகாத்தல், பாலியல் கல்வி மற்றும் இனப்பெருக்கம் சார்ந்த சுகாதாரம், பிணக்குகளைத் தவிர்த்துக்கொள்ளல், பிள்ளைகளை அரவணைத்தல் போன்ற சகல விடயங்களையும் உள்ளடக்கிய இரண்டு நாள் பாடநெறி ஒன்றை நாடு முழுதிலும் நடைமுறைப்படுத்தும் வகையில் ஆரம்பித்தல்.

### ஓய்வுபெற்றவர்கள், முதியோர், வலதுகுறைந்தோர் மற்றும் வித்தியாசமான ஆற்றல்களையுடைய நபர்கள்

- இந்த அனைத்து நபர்களையும் அவர்களது விருப்பத்திற்கு இணங்க உற்பத்தி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் பங்கேற்கச்செய்வதற்கு அவசியமான கல்வி மற்றும் தொழில்நுட்ப வசதிகளை அரசாங்கத்தினால் வழங்கச்செய்தல்.
- அபிவிருத்தி நடவடிக்கைகளில் இந்த நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட அந்தஸ்துகளைத் தாபித்து, உரிய அரசாங்க நிறுவனத்தினூடாக தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குதல்.
- முதியோர்களின் அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய விதத்தில் பல நிறுவன மற்றும் சேவை நடவடிக்கைகளில் முதியோரை கூடுமான வரையில் இணைத்துக்கொள்ளல்.
- தற்பொழுது சேவையிலுள்ள அரசாங்க ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை அவ்வப்பொழுது சேர்க்கப்படுகின்ற சம்பளஏற்றங்களை ஓய்வூதியம் பெற்றவர்களுக்கும் செயலுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

### சமூக நலனோம்புகை

- சமூக அரவணைப்பு கிடைக்க வேண்டிய சகல மக்கள் சார்பிலும் சமூக நலன்களையும் புனர்வாழ்வையும் அளிப்பதற்கு முழுமையான அதிகாரமுடைய ஒரு அதிகார சபையைத் தாபித்தல்.
- சமூக நலனுக்கு அவசியமான சகல நிதியேற்பாடுகளையும் அரசாங்கத்தினால் வழங்குவதற்கு நடவடிக்கையை எடுத்தல்.
- மக்களின் வாழ்வாதார நிலை பற்றி அவ்வப்பொழுது மதிப்பாய்வை மேற்கொண்டு, வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டிய சகல மக்களுக்கும் போதிய உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கையை எடுத்தல்.
- பெற்றோர்களின் அரவணைப்பு இல்லாத பிள்ளைகள், அரவணைப்பதற்கு யாருமில்லாத முதியவர்கள், போதைப்பொருட்களுக்கு அடிமைப்பட்டோர், சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள், விபசாரத்தில் ஈடுபடுபவர்கள், முதலிய அனைவரையும் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

## வீண்விரயம், ஊழல், இலஞ்சம் என்பவற்றைத் தடுத்தல்

- தற்பொழுது தெரியவந்துள்ள சகல விதமான ஊழல்களையும் மோசடிகளையும் துரிதமாக விசாரணை செய்வதும் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதும் அரசாங்கத்தின் முக்கியமான ஒரு பொறுப்புப் பணியாகும்.
- இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடிகள் என்பன தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு, குற்றம் செய்தவர்களுக்கு எதிராக தண்டனைகளை வழங்கும் பொருட்டு தாபிக்கப்பட்டுள்ள சகல நிறுவனங்களையும் மிகவும் வலிமையுடையதாகவும் முற்றிலும் சுயாதீனமுடையதாகவும் ஆக்குதல்.
- குற்றவாளிகளுக்கு எந்தவிதத்திலும் அரசியல் அரவணைப்பைக் கிடைக்கச் செய்யக்கூடாது. அவ்வாறு கிடைக்கச்செய்வதற்கு முயற்சிக்கின்றவர்களை குற்றம்செய்தவர்களாகக் கணிக்கப்படுவதற்குத் தேவையான சட்டங்களைத் தயாரித்தல்.
- தண்டனைகளை வழங்குவதுடன் நின்றுவிடாது, இது வரை நிகழ்ந்த மோசடிகள், வீணாக்கல்கள், இலஞ்சம், வீணாக்கப்பட்ட விதங்கள் மற்றும் இவற்றுக்குக் காரணமாக அமைந்த அரசாங்கத்தின் பொறிமுறைத்திட்டப் பலவீனங்கள் (உ-ம்: சட்டதிட்டங்கள், சட்டதிட்டங்கள் பற்றிய அறிவின்மை, மேலிடத்திலிருந்து வரும் அச்சுருத்தல்கள், பொலிஸ், புலனாய்வுப் பிரிவுகள், கணக்காய்வு, வரி, சுங்கத்தீர்வை ஆணைக்குழுக்கள் போன்ற பல துறைகளிலும் காணப்பட்ட பலவீனங்கள் முதலியன) என்பன தொடர்பான ஆழ்ந்த ஆய்வை மேற்கொண்டு இலஞ்சம், ஊழல், வீண், மோசடி என்பன மறுபடியும் நிகழ்வதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- இலஞ்சம், ஊழல், மேசடி, குற்றச்செயல்கள் முதலியவற்றைத் திட்டமிடுதல் அல்லது புரிதல் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் வகையில் 365 நாட்களிலும் 24 மணித்தியாலமும் இயங்கக்கூடிய மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி வசதிகளினூடாக தகவல்களை வழங்கக்கூடிய ஒரு நிலையத்தைத் தாபித்து, அத்தகைய தகவல்களை வழங்கும் நபர்களைப் பாதுகாப்பதற்கும் (whisleblower) தடுக்கப்பட்ட வீணாதல் அல்லது ஊழல் அல்லது குற்றச்செயல் என்பவற்றின் அளவைப் பொறுத்து அத்தகைய தகவல்களை வழங்கும் நபர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான ஒரு இணையத்தளத்தை ஆரம்பித்து, பொது நிதி 100 இலட்சம் ஷரூபாவை விஞ்சும் கருத்திட்டங்கள் பற்றிய அடிப்படை ஆய்வு அறிக்கைகள், சுற்றாடல் ஆய்வு அறிக்கைகள், மதிப்பீடுகள், மாற்றுவழித் திட்டங்கள், கேள்வி அறிவித்தல்கள், கேள்வி ஒப்பந்தங்களை வழங்குதல், திட்டங்களை மாற்றியமைத்தல் (எயசயைவழைளெ ரூ ளஉழிந உாயபெந) மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் அனைத்தையும் இந்த இணையத்தளத்தினூடாக விரைவில் பிரசுரித்தல். இதற்கான ஒரு சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

- சகல நடுத்தர மற்றும் பாரியளவான கருத்திட்டங்களுக்கான பயனுள்ள மற்றும் நன்மையளிக்கக்கூடிய மாற்றுவழித் திட்டங்கள், மற்றும் விமர்சனங்களை முன்வைக்கும் வாய்ப்புகள் என்பவற்றை பொதுவாக வழங்கும் வகையில் அரசாங்கத்தினால் அல்லது தனியார் துறை நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் நிதி மொடியூலை அல்லது கருத்திட்டப் பிரேரணைகளை மூன்று மொழிகளிலும் பிரசுரித்தல்.

## 02. தனியார் நிறுவனங்களினதும் கம்பனிகளினதும் பொறுப்புக்கள்

நீதியான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் போது தனியார் துறை கம்பனிகளும் நிறுவனங்களும் மேற்கொள்கின்ற அதிகார வர்க்கப் பிரவேசங்களையும் நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும். அதன் நிமித்தம்

- அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது தனியார் துறை கம்பனிகளையும் நிறுவனங்களையும் உள்ளடக்கிய சட்டஏற்பாடுகளைத் தயாரித்தல்.
- அதிக நிதி, ஊடக அல்லது ஆட்பலம் உடைய கம்பனிகளினாலும் நிறுவனங்களினாலும் நிகழக்கூடிய அதிகார வர்க்கச் செயற்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளையும் மற்றும் ஒரு ஒழுக்கநெறி முறைமையையும் தயாரித்தல்.
- மக்களின் வாழ்க்கைக்கு அதிகளவில் பாதிப்பாக அமைகின்ற பொருளாதாரம், நிதி மற்றும் கலாசாரம் ஆகிய பிரிவுகளில் சர்வாதிகாரம் கட்டியெழுப்பப்படாத விதத்தில் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் ஏற்பாடுசெய்தல். அத்தகைய கம்பனிகளும் நிறுவனங்களும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூறும் விதத்தில் சட்டஏற்பாடுகளை மேற்கொள்வதனூடாக சமூகத்தில் நீதியை உத்தரவாதம் பெறச்செய்தல்.
- நுகர்வோரைப் பாதுகாத்தல் மற்றும் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கு அந்தந்தப் பிரிவுகளுக்குரிய சகல அரசாங்க நிறுவனங்களையும் (உ-ம்: நுகர்வோர் சேவைகள் அதிகார சபை, பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பிரிவு, வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை போன்ற) வலுப்பெறச்செய்து, சட்டத்திற்கு அல்லது சம்பிரதாயத்திற்கு முரணாக பொருட்களையும் சேவைகளையும் வழங்குபவர்கள் தொடர்பான தகவல்களை நுகர்வோருக்காக இருக்கின்ற (mystery shoppers) விற்பனை நிலையங்களினூடாகச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 03. குடும்பத்தினதும் தனிநபரினதும் பொறுப்புக்கள்

சமூகத்தை நீதியுடைய ஒரு சமூகமாகக் கட்டியெழுப்பும் போது குடும்பங்

களிலும் அத்தகைய நீதியும் சம்பிரதாய அடிப்படைக் கோட்பாடுகளும் பின்பற்றப்படுவது அவசியமாகும். வீடுகளில் நிகழும் துன்புறுத்தல்கள், பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள், சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள், குறிப்பாக பெண்களுக்கான திருமணம், தொழில் மற்றும் கலாசாரம் என்பவற்றை அனுபவித்தல் மற்றும் சாதாரண நிலையில் வாழ்க்கையை நிருவகித்துச்செல்வதற்கான தடைகள் என்பன போன்ற விடயங்கள் குடும்பங் களில் அதிகரிப்பதை நிறுத்துவதற்கு நீதியான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவது அவசியமாகும்.

ஒவ்வொரு தனி நபரும் நீதியான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் நடபடிக்கையில் பங்கேற்பது கட்டாயப் பொறுப்பாகும்.

# சுதந்திரமான
# மனிதன்

நவீன சமூகவாதத்தையுடைய ஒரு சமூகத்தின் அடிப்படைக் குறிக்கோள் யாதெனில் பூரணமான ஒரு பிரஜையை அல்லது தன்னைப் பற்றியும் தனது நாட்டைப் பற்றியும் சுயசிந்தனையுடன் சிந்திக்கின்ற, தனது பொறுப்புக்கள், கடமைகள் மற்றும் உரிமைகள் பற்றி அறிந்த" தனது சுதந்திரமும் பாதுகாப்பும் பற்றிய அசையாத நம்பிக்கையுடைய, அறிவும் மனோபவமும் கொண்ட, திருப்தியான முழுமையான ஒரு பிரஜையை உருவாக்குவதாகும்.

பாடசாலைக் கல்வி மற்றும் பல்கலகக்கழகக் கல்வி, கலை மற்றும் கலாசாரப் பிரிவுகள் என்பவற்றை மேற்குறித்த குறிக்கோள்களைக் கொண்டு மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். எமது நாட்டின் முன்னைய பரம்பரையினரால் எமக்கு விட்டுச்சென்றுள்ள பயனளிக்கக்கூடிய பௌதீக மற்றும் ஆண்மீக மரபுரிமைகளை மதிக்கக்கூடிய பிரஜைகளாக எம்மை மாற்றுவதற்கு, அத்தகைய பிரிவுகளை இந்தக் குறிக்கோள்களின் அடிப்படையில் தொழிற்படச்செய்ய வேண்டும். அதே போன்று வேற்று மதத்தவர்களினதும் சுதந்திரத்தையும் இறைமையையும் மதிக்கின்ற ஒரு பிரஜையைக் கட்டியெழுப்பவதற்கு வெகுஜன ஊடகத்திற்கும் பொதுமக்கள் விடயங்களுக்கும் வழிகாட்ட வேண்டும். இத்தகைய பண்புகளையுடைய பூரணமான ஒரு மனிதனை உருவாக்கும் பொருட்டு, கல்வி, கலை, கலாசாரம், சட்ட மறுசீரமைப்பு, வெகுஜன ஊடகங்கள் மற்றும் சம்பிரதாயம் போன்ற விடயங்களிலும் அத்தகைய குறிக்கோள்களை அடைய வேண்டும்.

- ஒவ்வொரு பிரஜையையும் உயர்ந்த உன்னத எண்ணமுடைய ஒரு நபராக மாற்றுவதற்கு அரசாங்கத்தின் முக்கிய ஒரு பொறுப்பாகக் கருதி நடவடிக்கையை எடுத்தல்.
- சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம் ஆகிய சகல இனங்களும் அடங்கிய முழு மக்களினதும் கலை, கலாசார மரபுரிமைகளைப் பாதுகாத்து, வளர்த்து, மக்கள் மத்தியில் நட்புறவையும், சகோதரத்துவத்தையும், சமாதானத்தையும் கட்டியெழுப்ப நடவடிக்கையை எடுத்தல்.
- கலைஞர்களின் ஆன்மீக வெளியீடுகளுக்கான உரிமைகளையும், பிரஜைகளுக்கு கலைஞர்களின் நிர்மாணங்களை இரசிப்பதற்கு இருக்கின்ற உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் ஒரு தேசிய சமவாயக் கொள்கையைத் தயாரித்து, அதன் நிமித்தம் உரிய துறைகளில் ஈடுபாடுடையவர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமித்தல்.

- கலைஞர்களின் உரிமைகளை உறுதிசெய்யும் வகையில் தேசிய புலமைச் சொத்துக்கள் பணியகத்தை மேலும் வலுப்பெறச்செய்தல்.

- திரைப்படங்கள், ஷரூபவாஹினி நடனம், நாட்டியங்கள், சித்திரம், ஓவியம் மற்றும் கலை ஊடகங்கள் பற்றிய முறையான ஒரு பயிற்சியை வழங்கும் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்தல் மற்றும் முதல் வருடத்தினுள் அத்தகைய இரண்டு நிறுவனங்களைத் தாபித்தல்.

- நடனக் கலையை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லும் நோக்கில் பிரதேச மட்டத்தில் நாட்டிய நடன மண்டபங்களைக் கட்டியெழுப்பல்.

- சர்வதேச திரைப்படங்கள் விழா ஒன்றை அரசாங்கத்தின் ஈடுபாடுடன் வருடா வருடம் நடத்துதல்.

- திரைப்படக் கண்காட்சிகளை நடத்துவதற்காக தற்பொழுது கொழும்புக்கு மாத்திரம் மட்டுப்பட்டிருக்கின்ற கண்காட்சி மண்டபங்களுக்கு (யுசவ புயடடயசல) மேலதிகமாக மாகாண மட்டத்தில் அத்தகைய கண்காட்சி மண்டபங்களை நிர்மாணித்து, திரைப்படக் கலைஞர்களுக்கு அவற்றை மிகவும் குறைந்த சலுகை விலை அடிப்படையில் பெற்றுக்கொடுத்தல்.

- இலங்கையின் திரைப்படக் கலைஞர்கள் சார்பில் உயர்ந்த மட்டத் திரைப்படக் கலைக் கண்காட்சி விருது வழங்கும் வைபவத்தை நடத்தி திறமை வாய்ந்தவர்களை ஊக்குவிக்கும் நிமித்தம் விருதுகளை வழங்குதல்.

- சர்வதேச மற்றும் தேசிய சித்திரப் போட்டிகளையும், கண்காட்சிகளையும் மற்றும் விருது வழங்கல் வைபவங்களையும் வருடாந்தம் நடத்துதல்.

- பாடசாலை மற்றும் கிராம மட்டங்களில் இருந்து திறமைவாய்ந்த கலைஞர்களை இனங்கண்டு, அவர்களை தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் பிரபல்லியம் அடைவதற்குத் தேவையான பரந்த ஒரு பொறிமுறைத்திட்டத்தைத் தாபித்தல்.

- சமூகத்தின் நலன் கருதி அரச மற்றும் தனியார் துறை வெகுஜன ஊடக கலாசாரத்தை புரட்சிகரமான ஒரு மாற்றத்திற்கு உட்படுத்தி, இவற்றை அரசாங்கத்தின் அல்லது அதிகாரிகளின் அல்லது ஏனைய சக்திகளின் முரண்பாடுகளின் அடிப்படையில் மக்கள் மீது சுமத்தப்படும் வீழ்ச்சி நிலையிலிருந்து விடுபடச்செய்தல்.

- சிறுவர்களினதும் பொதுவாக பிரஜைகளினதும் கல்வி, இலக்கியம் மற்றும் கலை இன்னிசை, புதிய தகவல்கள் மற்றும் செய்திகள் என்பவற்றை அறிந்துகொள்ளும் நோக்கில் முக்கியமாக வெகுஜன ஊடகங்களைப் பயன்படுத்த நடவடிக்கையை எடுத்தல்.

- பிரஜைகளின் உரிமைகள் மற்றும் ஊடகங்களின் பொறுப்புக்கள் என்ப ன தொடர்பில் தற்பொழுதிருக்கின்ற கருத்துவேறுபாடுகளைக் கருத்திற்கொண்டு, அது தொடர்பான சமவாயக் கொள்கையைத் தயாரிக்கும் பொருட்டு ஊடகவியலாளர்கள், நடுநிலைத் தரப்புகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் உள்ளடங்கிய ஒரு குழுவைத் தாபித்தல்.

- இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மரபுரிமைகளான புராதன ஸ்தலங்களையும் பொருட்களையும் பாதுகாத்து, அவை நீடித்திருக்கும் நிலையை உறுதிசெய்து, மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு அவற்றை தேசிய மரபுரிமைகாளகப் பாதுகாத்து வழங்குவதை அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகக் கருதச்செய்தல்.
- தொல்பொருட்களை அழித்தொழிக்கும் நாசகாரச் செயல்களை உடனடியாக நிறுத்துதல்.

இலங்கை உலகத்தில் பூரணமான அறிவுபூர்வ ஒரு நாடாக மாறினால் தான் பூரணமான ஒரு பிரஜையை உருவாக்க முடியும். ஆகையால், சர்வாதிகார அரசியல், பொருளாதார கலாசார புதிய காலனித்துவ சக்திகள் என்பவற்றிலிருந்து தாய் நாட்டைப் பாதுகாப்பதும், மக்களின் இறைமையையும், நாட்டின் பொருளாதாரத்தையும், அரசியலையும், சமூக கலாசார உரிமைகளையும் அவற்றின் இறைமைகளையும் உன்னதமான முறையில் மதித்து, நாட்டின் நற்பெயருக்கும் நன்மதிப்புக்கும் கலங்கம் விளைவிக்காத, இலங்கை நாட்டின் ஆற்றல்களும் பொறுப்புக்களும் பற்றிய சுய அபிலாஷையுடைய ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவது நவீன சோஷலிச அரசாங்கத்தின் முக்கிய நோக்கமும் குறிக்கோளுமாகும்.